விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 வைகாசி 17 திங்கட்கிழமை (30.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 163

# யாழில் குற்றச் செயல்களை அடக்க
# பொலிஸ்மா அதிபர் களமிறங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் தொடர்பில் ஆராய பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர நேரடியாக களமிறங்கவுள்ளார். யாழ்ப்பாணத்தில் 3 நாட்கள் வரை தங்கியிருந்து நிலைமைகளை அவதானிக்கவும் அதன்பின் தேவையான நடவடிக்கையையும் மேற்கொள்ளவுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## மண்சரிவு எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிப்பு

(கண்டி)

நான்கு மாவட்டங்களுக்கு வெளியிடப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு தேசிய கட்டட ஆய்வு நிறுவகத்தால் மண்சரிவு அபாய எச்சரிக்கை

24ஆம் பக்கம் பார்க்க....

## கச்சதீவு தேவாலய பணி மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் கச்சதீவின் புதிய தேவாலயத்தை நிர்மாணிக்கும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கடற்படையினரை கோடிட்டு இலங்கையின் ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்துள்ளது.

ஏற்கெனவே பணிகள் ஆரம்பிக்கப்பட்டநிலையில் காலநிலை சீர்கேடு காரணமாக நிர்மாணப் பணிகள் நிறுத்தப்பட்டிருந்தன.

தற்போது காலநிலை சீரடைந்துள்ள நிலையில், தேவாலய நிர்மாணப் பணிகள் மீள ஆரம்பிக்க

24ஆம் பக்கம் பார்க்க....

## அபிவிருத்திக்கு இடம் விட்டு படையினர் விலக வேண்டும்
### ஒருங்கிணைப்பு கூட்டத்தில் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.கடற்கரை வீதிக்கு தெற்கே அமைந்துள்ள காணியில் தொடர்ச்சியாக படையினர் இருப்பதற்கு அனுமதிக்க முடியாதென யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பலர் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

நேற்றைய தினம் யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் யாழ்.பிரதேச செயலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதில் கருத்துக்களை முன்வைக்கும் போதே மேற்கண்டவாறு தெரி

24ஆம் பக்கம் பார்க்க....

## இந்துமத அடையாளங்கள் பௌத்தமாக மாற்றப்படுகிறது
### மனோ கணேசன் கவலை

(கொழும்பு)

இலங்கையில் காணப்படும் இந்து மத அடையாளங்களை பௌத்த மத அடையாளங்களாக மாற்றும் முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வைரவிழா நிகழ்வு நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கமைய திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றுக்கள் தற்பொழுது தேசிய அகழ்வாராட்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு பௌத்த தலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்,

24ஆம் பக்கம் பார்க்க....

## ஆனோல்ட் விதண்டாவாதம்; முதலமைச்சர் வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முதன்முறையாக பங்கேற்ற முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் ஆனோல்டின விதண்டாவாதத்தால் கூட்டத்தை திடீரென நிறுத்தி விட்டு வெளியேறினார்.

யாழ்ப்பாண பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்றைய தினம் யாழ்.பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கூட்டத்தின் ஆரம்பத்தில் முதலமைச்சர் உரையாற்றும் போது,

நான் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் பங்குபற்றுவது இதுவே முதற்தடவை. நாம் அனைவரும் மக்களின் நலனுக்காக ஒருங்கிணைந்து செயற்படுவதற்கு விரும்புகிறேன். எமது அலுவலர்களுக்கு மாகாணசபை சம்பளம் கொடுக்கின்றது. ஆனால் அவர்கள் அரச அதிபருடனும் பிரதேச செயலருடனும் வேலைசெய்கிறார்கள். அவ்வாறு பல வழிகளில் ஒருமித்து

23ஆம் பக்கம் பார்க்க....

## பருத்தித்துறையில் கைக்குண்டு மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டு வேலை செய்து கொண்டிருந்த போது வீட்டு மதிலின் கரையில் இக் கைக்குண்டு காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

24ஆம் பக்கம் பார்க்க....

## 10 கிளைமோர், 66 கைக்குண்டுகள் கிளிநொச்சி இரத்தினபுரத்தில் மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் 3 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள வீடு ஒன்றின் கிணற்றிலிருந்து 10 கிளைமோர் குண்டுகள், 66 கைக் குண்டுகள் மற்றும் 42 மோட்டார் பியுஸ் என்பவற்றை 57 ஆம் படைப பிரிவினரின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் மீட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் சுமார் 12 மணி

24ஆம் பக்கம் பார்க்க....

## டாக்கா-கொழும்பு விமான சேவை ஆரம்பிக்க மைத்திரி வேண்டுகோள்

(கொழும்பு)

ஜி-7 நாடுகளது தலைவர்களின் உச்சிமாநாட்டில் பங்கேற்கச் சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அம்மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ஜப்பானின் நகோயா நகரில் உள்ள ஹில்டன் நட்சத்திர விடுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இச்சந்திப்பின் போது, பங்களாதேஷின் தலைநகரமான டாக்காவுக்கும் கொழும்புக்கும் இடையில்நேரடி விமான சேவையை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரி, பங்களாதேஷ் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது, இவ்விடயம் தொடர்பில் கவனத்தில் எடுத்துக் கொள்வதாக குறிப்பிட்ட பங்களாதேஷ் பிரதமர், இலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள

24ஆம் பக்கம் பார்க்க....

## ஜெனிவா தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்!
### சம்பந்தன் வேண்டுகோள்

(கொழும்பு)

ஜெனிவா தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறும் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளது குறித்துக் கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜெனிவா தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதில் தவறான புரிந்துணர்வு

24ஆம் பக்கம் பார்க்க....

## புதிய அரசியல் சாசனம் குறித்த மக்கள் கருத்தறிந்த அறிக்கை
### நாளை பிரதமரிடம் கையளிப்பு

(கொழும்பு)

புதிய அரசியல் சாசனம் குறித்த மக்கள் கருத்து அறியும் ஆணைக்குழுவின் அறிக்கை நாளை 31 ஆம் திகதி அலரி மாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட உள்ளது.

இந்த அறிக்கை கடந்த 27ஆம் திகதி பிரதமரிடம் ஒப்படைக்கப்படவிருந்ததாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி லால் விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும், அறிக்கையின் தமிழ் மொழி பெயர்ப்பு காலதாமதமான காரணத்தினால் அறிக்கை நாளை

24ஆம் பக்கம் பார்க்க....

## ஹக்கீம் கைவிட்டார்

(கண்டி)

கடற்படை அதிகாரி ஒருவரை வசைபாடியதாக கூறப்படும் சம்பவத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் நடந்துகொண்ட விதத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்

24ஆம் பக்கம் பார்க்க....

# யுத்தப் பாதிப்பு; கிளிநொச்சியில் 282 பேர் பார்வை இழப்பு

நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் 282 பேர் பார்வை இழந்துள்ளதாக மாவட்ட செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் கடந்த 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பிற்கு அமைய 282 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்களில் 43 பேர் இரண்டு கண்களையும் இழந்துள்ளதுடன், 143 பேர் ஒரு கண் பார்வையை இழந்துள்ளனர்.

மாவட்ட செயலக புள்ளிவிபரத்தின்படி, கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 108 பேர் ஒரு கண்பார்வையையும் 18 பேர் இரண்டு கண்பார்வையையும் இழந்துள்ளனர்.

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 49 பேர் ஒரு கண் பார்வையையும் 12 பேர் இரண்டு கண் பார்வையையும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 40 பேர் ஒரு கண் பார்வையையும் 13 பேர் இரண்டு கண் பார்வையையும்,பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 42 பேர் ஒரு கண் பார்வையையும் இழந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 792 மாற்றுவலுவுள்ளோர் வசிப்பதாக மாவட்ட செயலகம் அண்மையில் தகவல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (12-281)

# தினமும் சிகரெட் நுகர்வுக்கு ரூ.25 கோடி செலவு செய்து 65 பேர் மரணம்

இலங்கையில் தினமும் 250 மில்லியன் ரூபாய் பெறுமதியான சிகரெட்டுகள் நுகரப்படுவதாக இலங்கை புகையிலை நிறுவனம் தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.


மேலும் புகை பிடிப்பதனால் வருடாந்தம் 22ஆயிரம் பேர் நோய்வாய்ப்பட்டு உயிரிழப்பதாகவும் உலக சுகாதார அமைப்பு மற்றும் சுகாதார அமைச்சு இணைந்து மேற்கொண்ட ஆய்வொன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

இதன் அடிப்படையில், புகைத்தல் காரணமாக சராசரியாக தினமும் 65 பேர் உயிரிழப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

சர்வதேச புகையிலை தினம் தொடர்பான இரண்டு நாள் நிகழ்வுகள் இன்று ஆரம்பமாக உள்ளன.

இலங்கை மக்கள் தொகையில் 31 வீதமானவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கத்தை கொண்டிருப்பதாகவும், இவர்களில் பெரும்பாலானவர்கள் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (12)

# அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக வைத்திய அதிகாரிகள் போர்க்கொடி!



சுகாதாரத் துறையை தரம் மிக்கதாக ஆக்க வேண்டுமாயின் தரம்மிக்க ஒருவரை சுகாதார அமைச்சராக நியமிக்க வேண்டும் என, அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அவ்வாறு இல்லையாயின் அந்தத் துறையை ஜனாதிபதி தன் பொறுப்பின் கீழ் ஏற்க வேண்டும் என, அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் நலிந்த ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் மட்டுமன்றி அவரது மகனது புகழைக் கட்டியெழுப்பவும் அமைச்சின் சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்க கூட்டங்களில் அமைச்சரது மனைவி மற்றும் பிள்ளைகள் கலந்து கொள்வதாகவும், இவ்வாறு குடும்ப உறுப்பினர்கள் எந்த அடிப்படையில் வருகின்றனர் என்பது தனக்குத் தெரியவில்லை எனவும் நலிந்த ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், நாளை 31-ம் திகதி எதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக, இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட, வைத்தியர் சமந்த ஆனந்த குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகள், சிறுநீரக நோயாளர்களின் விடுதி, புற்றுநோய் வைத்தியசாலை உள்ளிட்ட அத்தியாவசிய வைத்தியசாலைகள் சில தவிர்த்து நாட்டிலுள்ள அனைத்து வைத்திய சாலைகளிலும் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இன்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு கூடிய தன் பின்னர் வேலை நிறுத்தத்தை முன்நோக்கி கொண்டு செல்வது குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (12)

# தேசிய அரசாங்கம் உடைந்தால் மைத்திரி தலைமையில் புதிய அரசு

(கொழும்பு)

அரசாங்கத்தினுள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் காரணமாக தேசிய அரசாங்கம் உடைந்தால், மைத்திரி தலைமையிலான அரசாங்கம் அமைவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஊடகமொன்றில் இதுகுறித்து தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த அரசின் ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காத மனவருத்தம் அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன போன்றோர் இதன் காரணமாக கடும் அதிருப்தியுடன் இருக்கின்றனர். அதே போன்று ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரு பிரிவினர் ரணில் மீது அதிருப்தியுடன் இருக்கின்றனர். அரசாங்கத்துக்கு எதிரான கூட்டு எதிர்க்கட்சியும் தொடர்ந்தும் எதிர்க்கட்சி வரிசையில் அமரத் தயாரில்லாத, அதிகாரப் பதவியொன்றை அடைந்து கொள்ளும் ஆவலுடன் இருக்கின்றது.

இவ்வாறானநிலையில் அண்மையில் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்திருப்பது போன்று தேசிய அரசாங்கம் உடைவதற்கான வாய்ப்புகளை புறம் தள்ளி விட முடியாது. அதேநேரம் அவ்வாறு தேசிய அரசாங்கம் உடையும் பட்சத்தில் ஐக்கிய தேசியக்கட்சியை விட மைத்திரி தலைமையிலான அரசாங்கம் ஒன்று அமைவதற்கான வாய்ப்புகளே கூடுதலாக காணப்படுகின்றது.

கூட்டு எதிர்க்கட்சியினர் மாத்திரமன்றி, சுதந்திரக்கட்சியில் இருந்து பிரிந்து கடந்த தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட முக்கியஸ்தர்கள் மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் அதிருப்தி குழுவினர் இந்த அரசாங்கத்தில்இணைந்து கொள்வார்கள் என்றும் குறித்த செய்தியில் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)


## மரண அறிவித்தல்

### பிரான்சிஸ் வின்சற் ரவீந்திரன் (சூட்டா)



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட பிரான்சிஸ் வின்சற் ரவீந்திரன் (சூட்டா) அவர்கள் நேற்று (29.05.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறியத் தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கைதடி தெற்கு, கைதடி. தகவல் : குடும்பத்தினர்.

(4807)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி மகிந்துஜா குகநாதன்

கடந்த 26.05.2016 அன்று பேராதனை பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு நிகழ்வில் விஞ்ஞான பீடத்தில் (BSc) பட்டம் பெற்ற செல்வி மகிந்துஜா குகநாதன் அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் வளம்பெற இதயம் கனிந்து வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*

அப்பா,அம்மா, தம்பிமார், தங்கைமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, அம்மப்பா.

சிவநகர், உருத்திரபுரம்.

(சி-4746)

## பணிநிலை வெற்றிடங்கள்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

**01. விஞ்ஞான பாட ஆசிரியர்**

தகைமைகள் :-

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்றிருத்தல் (Bachelor of Science- BSc)

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

குறிப்பு :-

* இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
* தங்குமிடம், உணவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.
* சம்பளம் மாதம் ரூபா 18000/-க்கு குறையாது வழங்கப்படும்.
* சம்பளத்துக்காக மட்டுமின்றி தியாக மனப்பான்மையும் சமூக சேவையில் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

**02. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரியர் (ICT)**

தகைமைகள் :-

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப டிப்ளோமா (Diploma-in-information & communication Technology)

பெண் பாலார் மட்டும் விண்ணப்பிக்க முடியும்

குறிப்பு :-

* இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
* தங்குமிடம், உணவு இல்லத்தினால் இலவசமாக வழங்கப்படும்.
* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
* சம்பளத்துக்காக மட்டுமின்றி தியாக மனப்பான்மையும் சமூக சேவையில் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.

☆ கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு (சகல சான்றிதழ்களின் போட்டோப் பிரதிகளும் விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்) அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி :- 10.06.2016**

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :-
தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி
தொலைபேசி இல : 077 060 4950, 021 492 3118
மின்னஞ்சல் முகவரி : mahadevasuwamigalchildrenhome@gmail.com
rasa46@yahoo.com

(C-4747)

# போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளுக்கு இடமில்லை!

## அரசு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)

**போர்க்குற்றங்கள் தொடர்பில் அமைக்கப்படவுள்ள விசாரணை பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடங்கமாட்டார்கள். அந்த பொறிமுறையில் இலங்கையின் உள்ளூர் நீதிபதிகளே இருப்பார்கள் என்று இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக ஆங்கில செய்தித்தாள் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த வியாழக்கிழமையன்று அலரிமாளிகையில் இடம்பெற்ற படையதிகாரிகளுடனான சந்திப்பின் போது இதனை ரணில் உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தநிலையில் எதிர்வரும் ஜூன் 13ஆம் திகதியன்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு ஆரம்பிக்கும் போது இலங்கையின் நிலைபாடு தொடர்பில் ஆணையாளர் செய்ட் அல் ஹூசைன் தமது நிலைப்பாட்டை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக ரணில் விக்கிரமசிங்க இந்த சந்திப்பின் போது குறிப்பிட்டுள்ளார்.

அதேநாளன்று இலங்கையின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக ரணில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் 29ஆம் திகதியன்று இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைப்பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அதில் வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடங்க வேண்டும்என்றயோசனையை இலங்கையும் அமெரிக்காவும் இணைந்தே முன்வைத்தன. எனினும் தற்போது இதில் வெளிநாட்டு நீதிபதிகள் என்ற அம்சம் பிரச்சினைக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியுடன் ஜப்பான் சென்றுள்ள அமைச்சர் மங்கள சமரவீர நாடு திரும்பியதும் படையதிகாரிகளுடன் மற்றுமொரு சந்திப்பு நடத்தப்படும் என்று குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க, வடக்கில் படையினர் வசம் உள்ள பொது மக்களின் காணிகள் தொடர்ந்தும் விடுவிக்கப்படும் என்றும் காணாமல் போனோர் தொடர்பில் அதிக அதிகாரங்களை கொண்ட அலுவலகம் ஒன்று அமைக்கப்படும் என்றும் இதன்போது தெரிவித்துள்ளார்.


இந்த சந்திப்பில் பங்கேற்ற இராணுவ தளபதி கிரிசாந்த டி சில்வா, போர்க்குற்ற பொறிமுறையின் போது படையினர் கூட்டாகவா? அல்லது தனித்தனியாகவா? விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படுவர் என்ற கேள்வியை எழுப்பினார்.

இதற்கு நேரடி பதிலை வழங்காத ரணில் விக்கிரமசிங்க, தென்னாபிரிக்காவை போன்ற உண்மையை கண்டறியும் குழு ஒன்று அமைக்கப்படும் என்றும் இது தொடர்பில் அமைச்சர் மங்கள சமரவீர மேலதிக விளக்கங்களை வழங்குவார் என்றும் தெரிவித்தார் என அந்த ஊடகம் மேலும் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

---

### களுத்துறை நேபொட பிரதேசத்தில்

## மண்சரிவு அபாயம் காரணமாக 39 குடும்பங்கள் வெளியேற்றம்



களுத்துறை, நேபொட பரதேசத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக 39 குடும்பங்கள் வெளியேற்றப்படடு, தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை, நேபொட, ரன்னகல மற்றும் தெபுவன, மாபடவத்தை பிரதேசத்தில் வசித்தவர்களே இவ்வாறு இடம்பெயர்ந்துள்ளனர். தற்போது அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே மேல்மாகாணம், வடமேல், தெற்கு மற்றும் மத்திய, சப்ரகமுவ மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.(இ-5)

---

## உலகின் 41 ஆவது செல்வந்தரான சவுதி இளவரசர் இலங்.வருகிறார்

(கொழும்பு)



2016 ஆம் ஆண்டு போர்ப்ஸ் பட்டியலின்படி உலக பணக்காரர் வரிசையில் 41ம் இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ள சவுதி இளவரசர் அல் வாஹீட் பின் தலால் இலங்கை வரவுள்ளார்

இந்த விஜயம் விரைவில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அழைப்பை ஏற்று அவர் விரைவில் இலங்கை வரவுள்ளதாக பிரதி வெளியுறவுத் துறை அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை இளவரசர், இலங்கையின் வெள்ள அனர்த்த பாதிப்புக்களின் சீரமைப்புக்காக ஒரு மில்லியன் அமெரிக்க டொலரை உதவியாக தருவதற்கு அறிவித்துள்ளதாகவும் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-5)

---

## பொலிஸ் நிதிமோசடிப் பிரிவினரால் விசாரணைக்கு 300 பேர் அழைப்பு

மகிந்த அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் அடங்கலாக 300 பேர் நிதி மோசடி தடுப்பு பொலிஸாரால் விசாரணைக்கு உள்ளாக்கப்படவுள்ளனர்.

அடுத்த வாரத்தில் இதற்கான அறிவித்தல்கள் விடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் ஜொஹான் பெர்னாண்டோ கடந்த வெள்ளிக்கிழமையன்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

போலியான ஆவணங்களை காட்டி பல மில்லியன் ரூபாய் பெறுமதியான எதனோலை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த விசாரணை இடம்பெற்றுள்ளது.

இவர், சுமார் 200 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான எதனோலை இறக்குமதி செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (இ-5)

---

## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்

### டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் இனங்கண்டு அவர்களது இழப்புகளுக்கு ஏற்ப இழப்பீடுகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், அண்மையில் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் பல வழிகளிலும் மிகுந்த பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள், வீடுகளை, சொத்துக்களை, உடைமைகளை இழந்தவர்கள், உற்பத்திகளை இழந்தவர்கள்என அனைவரும் இனங்காணப்பட்டு, அவரவரது இழப்புக்கள் தொடர்பில் முறையான மதிப்பீடுகள் செய்யப்பட்டு, அதற்கேற்ப இழப்பீடுகளை வழங்க அரசு முன்வர வேண்டும்.

அதே நேரம், பாதிக்கப்பட்டுள்ள பாதைகள், பொது இடங்கள், பொது சொத்துக்கள் என்பனவும் இனங்காணப்பட்டு, அவை உரிய முறையில் மீளமைக்கப்பட வேண்டும். அத்துடன், மேலும் மண் சரிவு அபாயங்கள் காணப்படுகின்ற பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புக்களை தகுந்த மாற்று இடங்கள் இனங்கண்டு மாற்றுவதற்கும், முகாம்களில் தங்கியிருக்கின்ற மக்களை கூடிய விரைவில் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

இயற்கை அனர்த்தங்களை ஏற்படுத்துகின்ற காலநிலை மாற்றங்கள் தொடர்பில் உரிய விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்கூட்டியே எடுக்கக் கூடிய திட்டங்கள் வகுக்கப்பட்டு, அவை உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன் இவ்வாறான இயற்கை அனர்த்தங்களில் இருந்து மக்களைக் காப்பாற்றக்கூடிய முன்னேற்பாடுகள் அனைத்தையும் முன்னெடுக்க அரசும், ஏனைய துறைசார் தரப்புகளும், சமூக ஆர்வலர்களும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

---

## இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

### இருவர் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள்கள் இரண்டு நேருக்கு நேர்மோதி விபத்துக்குள்ளாகியதில் குடும்பப் பெண் ஒருவர் உட்பட இருவர் படுகாயமடைந்தனர்.


மேற்படி விபத்துச் சம்பவம் கடந்த வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் நெல்லியடி நகர்ப்பகுதியில் இடம் பெற்றது.

இதில் பருத்தித்துறை சாரையடி புலோலி தெற்கைச் சேர்ந்த பா.இரகுநாதன் (வயது-65) மற்றும் கரவெட்டியைச் சேர்ந்த எஸ்.தர்சினி (வயது-38) ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

பருத்தித்துறையிலிருந்து வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருப்ப முற்பட்ட போது நெல்லியடி நகரில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. காயமடைந்த இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5,60)

# 9-வது ஐ.பி.எல் தொடரில் பெங்களூருவை வீழ்த்தி சம்பியனானது ஹைதராபாத்



ஐபிஎல் இருபது-20 போட்டியின் 9-வது சீசனில் கோப்பையை வென்று சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி அசத்தியுள்ளது.

பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் பெங்களூருவை 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஹைதராபாத் அணி வெற்றி பெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்று முதலில் களமிறங்கிய ஹைதராபாத் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 208 ஓட்டங்கள் எடுத்தது. ஹைதராபாத் அணியில் அதிகபட்சமாக வோர்னர் 69, யுவராஜ் 38, பென் கட்டிங் 26 ஓட்டங்களும் எடுத்தனர்.

209 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய பெங்களூரு அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 200 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

ஹைதராபாத் அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது. பெங்களூருவில் அதிகபட்சமாக கெயில் 76 ஓட்டங்களும், ஹோலி 54 ஓட்டங்களும் எடுத்தனர். (87)



# 11-வது முறையாக கிண்ணத்தை வென்றது ரியல் மெட்ரிட் அணி

## வெற்றிக் கோலை அடித்த ரொனால்டோ



இத்தாலியின் மிலான் நகரில் நடந்த சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் பெனால்ட்டி முறையில் ரியல் மெட்ரிட் அணி 5-3 என்ற கோல் கணக்கில் அட்லெட்கோ மெட்ரிட் அணிய வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் ரியல் மெட்ரிட் அணி 11வது முறையாக கிண்ணத்தை வென்று சாதித்துள்ளது.

கடந்த 1956-ல் ஐரோப்பியன் சம்பின்ஸ் கிளப்ஸ் என்ற பெயரில் தொடங்கப்பட்டு, பின் சம்பியன்ஸ்லீக் கால்பந்து தொடரானது, இத்தொடரில் ஐரோப்பிய நாடுகளின் கிளப் அணிகள் மட்டும் பங்கேற்கும் என்பது நினைவு கூரத்தக்கது.

மிலான் நகரில் உள்ள கால்பந்து மைதானத்தில் நடந்த இறுதிப்போட்டியில் ஸ்பெயினை சேர்ந்த ரியல் மெட்ரிட், அட்லெட்கோ மெட்ரிட் அணிகள் மோதின.

ரியல் மெட்ரிட் அணியின் கப்டன் செர்கியோ ரமோஸ் 15-வது நிமிடத்தில் முதல் கோலை அடித்தார், எனினும் போட்டியின் 79-வது



நிமிடத்தில் அட்லெட்டிகோ அணியின் யானிக் கர்ராஸ்கோ தனது அணிக்காக ஒரு கோலை அடித்துள்ளார். கூடுதல் நேரம் வழங்கப்பட்ட நிலையில் இரு அணிகளும் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன.

இதனை தொடர்ந்து பெனால்டி ஷூட் அவுட் முறையில் இரு அணிகளுக்கும் கோல் அடிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டன. இதில் வெற்றிக்கான கோலை ரியல் அணியின் கிறிஸ்டியானோ ரொனால்டோ அடித்துள்ளார்.

ரியல் மெட்ரிட் அணி 5-3 என்ற கோல் கணக்கில் அட்லெட்டிகோவை வெற்றி பெற்று கிண்ணத்தை தட்டிச் சென்றது. கோல் அடித்து அணியின் வெற்றியை தக்க வைத்ததை அடுத்து தனது சட்டையை கழற்றி ரொனால்டோ மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். (87)

# ஹோலியை காதலிக்கும் பூனம் பாண்டே



பரபரப்புக்கு பெயர் போனவர் மொடல் அழகியும், பாலிவுட் நடிகையுமான பூனம் பாண்டே.

இவர் அவ்வப்போது இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்காக நிர்வாண புகைப்படங்களை வெளியிடுவது வழக்கம்.

அந்த வகையில் நேற்று ஐபிஎல் இறுதிப் போட்டியில் பெங்களூர் றோயல் சேலஞ்சர்ஸ்- சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதியது.

இந்நிலையில் வீரப்பன் படத்தின் ப்ரீமியர் ஷோவுக்கு வந்த பூனம் பாண்டே, விராட் ஹோலியை மனதார காதலிப்பதாக தெரிவித்து புதிதாக ஒரு சர்ச்சையை கிளப்பியுள்ளார்.


இதற்கு முன்னதாக உலகக் கிண்ணப் போட்டியின் போது ஹோலிக்காக நிர்வாண புகைப்படத்தை வெளியிட்டது குறிப்பிடத்தக்கது. (87)

# பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்; இவானோவிச் அதிர்ச்சித் தோல்வி

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் 3வது சுற்றில் செர்பிய வீராங்கனை அனா இவானோவிச் அதிர்ச்சி தோல்வி அடைந்து வெளியேறினார். அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ஸ்பெயினின் டேவிட் பெரர் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் 4-வது சுற்றுக்கு முன்னேறினர்.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில், பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு 3-வது சுற்றில் செர்பியாவின் அனா இவானோவிச், உக்ரைனின் எலினா ஸ்விடோலினா மோதினர்.

இதில் சொதப்பலாக விளையாடிய இவானோவிச் 4-6, 4-6 என்ற நேர் செட் கணக்கில் தோல்வி அடைந்து ஏமாற்றினார். (87)



# ஐ.பி.எல் போட்டி சூதாட்டத்தில் மனைவியை அடகு வைத்த நபர்

உத்தர பிரதேச மாநிலத்தில் மனைவியை, கணவனே ஐபிஎல் கிரிக்கெட் சூதாட்டத்தில் அடகு வைத்து இழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ரவீந்தர் சிங் என்ற நபர் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் ஜஸ்மீட் கவுர் என்ற பெண்ணை திருமணம் செய்து கான்பூரின் கோவிந்த் நகரில் வாழ்ந்து வந்துள்ளார்.

ஐபிஎல் சூதாட்டத்தில் பணம் பொருள் உள்ளிட்டவற்றை இழந்த நிலையில், ரவீந்தர் சிங், அவரது மனைவி கவுரை அடகு வைத்து விளையாடி இழந்துள்ளார். தற்போது ரவீந்தர் சிங் காணாமல் போனதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், சூதாட்டத்தில் வெற்றி பெற்ற ஆண்கள் சிலர் ஜஸ்மீட் கவுரை துன்புறுத்தி வந்துள்ளனர், பாதிக்கப்பட்டுள்ள கவுர், சமூக ஆர்வலர்கள் சிலர் உதவியுடன் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதன் மூலம் குறித்த சம்பவம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.



பாதிக்கப்பட்ட அந்தப் பெண் இது தொடர்பாக அளித்துள்ள புகாரில் ஐபிஎல் போட்டிகளின் போது தன் கணவர் பணம் பொருள் உள்ளிட்டவற்றை இழந்த நிலையில் தன்னை வைத்து தொடர்ந்து சூதாட்டத்தில் ஈடுபட்டதாகவும் அதில் அவர் தோற்றதால் தற்போது சம்பந்தப்பட்ட நபர்கள் தம்மை துன்புறுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் புகாரில் தன்னை துன்புறுத்திய நபர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (87)

# கோத்தபாயவை காட்டிக்கொடுக்கும் நிகழ்வுகள் நடக்கின்றன-அநுர அச்சம்

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் விவகாரத்தில் தான் எந்தவொரு தவறும் இழைக்கவில்லை என்று அநுர சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

வசீம் தாஜுடீன் விவகாரம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தான் கைதுசெய்யப்பட முன்னர் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்க ஊடகமொன்றுக்கு வழங்கியிருந்த நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்துள்ள அநுர சேனநாயக்க,

வசீம் தாஜுடீன் விவகாரத்தில் நாங்கள் நேர்மையான விசாரணைகளை முன்னெடுத்திருந்தோம். அது கொலையாக இருக்கலாம் என்ற காரணத்தினாலேயே நாரஹேன்பிட்டி பொலிஸின் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியிடமிருந்து விசாரணைகளை குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரிக்கு கைமாற்றினோம்.

இதை நானே முன்னின்று செய்திருந்தேன். அத்துடன் வசீம்தாஜுடீன் உயிரிழந்த இடத்துக்கு நான் சென்றிருந்தது, அவரது தகப்பனாரை அழைத்து மன்னிப்பு கோரியது, எனக்கு மேலிடத்து உத்தரவு எல்லாம் கட்டுக்கதை.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை இந்த விவகாரத்தில் மாட்டிவிடும் நோக்கில் புனையப்பட கதைகளாகும். என்னை நெருக்கடிக்கு உள்ளாக்கி கோத்தபாய ராஜபக்ஷவை காட்டிக் கொடுக்க வைக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் நான் எந்தவொரு கட்டத்திலும் அவ்வாறான துரோகத்தை செய்ய மாட்டேன். வசீம் தாஜுடீன் விவகாரத்தில் தவறிழைத்திருப்பதாக கருதப்பட்டால் முதலில் சட்டமருத்துவ அதிகாரியைத் தான் கைது செய்ய வேண்டும். ஏனெனில் அவரது பிரேத பரிசோதனை அறிக்கையைக் கொண்டுதான் குறித்த மரணம் விபத்து மரணம் என்று நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டது. நாங்கள் நேர்மையான முறையில் விசாரணைகளை நடத்தியிருந்தோம்.

குறித்த சம்பவம் கொலை என்று நிரூபிப்பதற்குப் போதுமான சாட்சியங்கள் இருக்கவில்லை. தடயங்கள் இல்லாமல் எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க பொலிஸாருக்கு அதிகாரமில்லை.

அத்துடன் இவ்வாறான சம்பவங்களில் தடயங்கள் இருந்தாலும் நீதிமன்றமே முடிவுகளை அறிவிக்கும் அதிகாரத்தைக் கொண்டுள்ளன.

ஆனால் வசீம் தாஜுடீன் விவகாரம் விபத்து என்றே அனைத்து வழிகளிலும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. அந்த வகையில் என்னை நெருக்கடிக்குள்ளாக்கி கோத்தபாயவை மாட்டிவிடுவதற்காக புனையப்பட்ட வழக்காகவே இதனை கருதுகின்றேன். இந்த நெருக்கடிக்கு எல்லாம் நான அச்சப்படவோ, அடிபணிந்து விடவோ மாட்டேன் என்றும் அநுர சேனநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


**July 16th of 2016 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்**

# IELTS

16- Practice Tests with Explanations
Daily Writing Practice
Daily Speaking and Listening Practice
It is an Inovative Training Programme

July 16th
யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் விசேட வகுப்புக்கள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 8.30 மணி முதல் 11.30 மணிவரை நடைபெறும்.



இப்பொழுது வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

IELTS பாடங்களை படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கப்படும்.
General English Course Level B2

**வகுப்புக்கள் 01.06.2016 இல் ஆரம்பம்**

## COURSE SCHEDULE

| Mon, Tues, Wed, Thus | Saturday & Sunday |
|---|---|
| 60 Hours | 60 Hours |
| 8.30-11.30, 5.00-7.00 | Time 8.30-12.00 |

**IELTS** LIFE SKILLS **A1,B1**

March-2016 இல் BMICH இல் நடைபெற்ற A1,B1 பரீட்சைகளில் 100% எமது மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றே எமது வகுப்புக்களில் சேர்ந்து பரீட்சையில் சித்தியடையுங்கள்
IELTS Registration Centre for British Council

## BRITISH COLLEGE OF ENGLISH

No.192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel: 021 222 0384 (சி-4741) தொ.பே:077 880 3887



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா:54 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:CIMA/ கணக்காளர் கனடா PR<br>தொ.இ: B/5898 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 35செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BBA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5421 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 25 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L டோகா கட்டார்<br>தொ.இ: B/5899 | பிறப்பு: 1984RC<br>உயரம்: 155cm<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில் லண்டன்<br>தொ.இ: G/5822 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 49செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:O/L ஜேர்மனி PR<br>தொ.இ: B/5900 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 53 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: G/5424 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 62 செவ் 1 இல்<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: B/4851 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 48செவ் 8 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ ஜேமன் குடியுரிமை<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/5435 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# இராசி பலன்

30.05.2016
(வைகாசி 17, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
நவமி முன்னிரவு 11.14 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 10.51 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | புத | சூரி சுக் | |
| சந், கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம்,பூசம் மாலை 5.18 இற்கு மீன-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்பார்த்த தொகைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், முக்கிய பிரமுகர் ஒருவர் உங்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்:** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தந்தை வழி உறவில் நன்மையுண்டு.

**மிதுனம்:** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, தொழிலில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய முற்படுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.

**கடகம்:** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது.

**சிம்மம்:** கடன் பிரச்சினைகளைச் சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், மனதில் நினைத்த புதிய திட்டங்களை நிறைவேற்றுவீர்கள், காலையில் நடைபெறவிருந்த காரியமொன்று மாலைநேரம் தாமதமாகலாம்.

**கன்னி:** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மருத்துவச் செலவு குறையும், எதிர்பாராத சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், வியாபார விருத்தியுண்டு.


**விருச்சிகம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள்.

**தனுசு:** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், பொருளாதார நிலை உயரும்.

**மகரம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், உயரதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டியநாள், புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், உடல் நலனில் கவனம் தேவை, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் தேக நலன் பாதிக்கப்படலாம்.





அராலி ஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் ஆலய திருவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் பக்தர்கள் பறவைக் காவடி எடுப்பதையும் நிலாவொளி இளைஞர் கழகத்தினால் பக்தர்களுக்கான தாக சாந்தி நிலையம் அமைக்கப்பட்டு தண்ணீர் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அராலிச் செய்தியாளர்)

### விவாதச் சுற்றுப் போட்டியில் முதலிடம் பெற்று

# தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிக்கு யாழ்.இந்து தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே இடம்பெற்ற விவாதச்சுற்றுப் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி முதலிடத்தினைப் பெற்று தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான விவாதச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் காலை 8.30 மணி தொடக்கம் 4 மணி வரை யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் இடம்பெற்றது.

அகில இலங்கை ரீதியில் 25 மாவட்டங்களிலும் இவ் விவாதச்சுற்றுப் போட்டியானது தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் இடம்பெறுகிறது.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தை சேர்ந்த 35 பாடசாலைகள் இப்போட்டியில் பங்குபற்றுவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் 16 பாடசாலைகளே இப் போட்டியில் கலந்து கொண்டன.

இறுதிப்போட்டியில் "இன்றைய சமூகத்தில் சிறுவர்களின் கருத்துக்களுக்கு அங்கீகாரம் கிடைக்கின்றதா? கிடைக்கவில்லையா? " என்ற தலைப்பின் கீழ் யாழ். இந்திக்கல்லூரியும், யாழ் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையும் விவாதத்தில் ஈடுபட்டதில் யாழ். இந்துக்கல்லூரி யாழ்.மாவட்டத்தில் முதலிடம் பெற்று தேசிய ரீதியில் நடைபெறும் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப் போட்டிகளை யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் ஆரம்பித்து வைத்ததுடன் இப்போட்டிகளின் நடுவர்களாக கல்விப்புல அதிகாரிகள்,சட்டத்தரணிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் கடமையாற்றினர்.(இ-9)

## ஐ.தே.கவில் மூவருக்கு எதிராக ஒழுக்காற்று

தேசிய அரசாங்கததின் கொள்கையை மீறி செயற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவரு க்கு எதிராக ஒழுக்கா ற்று விசாரணையை முன்னெடுக்க அக் கட்சி தீர்மானித்துள்ளது.

தெற்கு, மேல் மற்றும் மத்திய மாகாணங்களைப் பிர திநிதித்துவப்படுத்தும் மூவருக்கு எதிராக அடு த்த வாரம் ஒழுக் காற்றுக் குழு கூடவுள்ளது. இவர்கள் தொடர்ந்தும் தேசிய அரசாங்கத்தின் கொள்கையைமீறும் வகையில் கரு த்துக் களைத் தெரி வித்து வருவதாக வும் கட்சியின் சட்ட திட்டங்களு க்கு ஏற்ப இவர்களுக்குதண்டனை வழங்கவுள்ளதாகவும் கட் சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். (இ-5)


# கண்ணீர் அஞ்சலி

## சின்னத்துரை சிவஞானம்



எமது கிராமத்திற்கு பல்வேறு உதவிகளை நல்கிய கௌரவ யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் **சிவஞானம் சிறிதரன்** அவர்களின் தந்தையார் **சின்னத்துரை சிவஞானம்** அவர்கள் காலமானதை இட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கண்ணகிநகர் மக்கள்,**
**புன்னைநீராவி.**

(சி-4743)


## வடமாகாண அதிபர் சங்க புதிய நிர்வாக சபை தெரிவு

வடமாகாண அதிபர் சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவு

இதில் தலைவராக ஜ.தயானந்தராஜா (யா/இந்துக் கல்லூரி), பிரதித் தலைவராக மு.கனகலிங்கம் (யா/விக்னேஸ்வராக் கல்லூரி), உபதலைவர்களாக வே.த.ஜயந்தன் (யா/வயாவிளான் மத்திய கல்லூரி), பி.கே.சிவலிங்கம் (மு/வித்தியானந்தாக் கல்லூரி), செ.தர்மரத்தினம் (வவு/செட்டிகுளம் ம.வி), ரி.இருதயராஜா குறூஷ் (மன்/பரிகாரிகண்டல் அ.த.க.பா), க.மதுரநாயகம் (கிளி/ அக்கராயன் ம.வி),

செயலாளராக கு.விமலன் (யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), உப செயலாளராக சு.சிவானந்தன் (யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி),பொருளாளராக சி.திரிகரன் (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி),

நிர்வாக உறுப்பினர்களாக நா.கேதீஸ்வரன் (யா/அருணோதயாக் கல்லூரி), ஆ.தங்கவேல் (யா/கைதடி நுணாவில் அ.த.க.பா), க.கிருஷ்ணகுமார் (யா/ நெல்லியடி மத்திய கல்லூரி),க.கிருஷ்ணபிள்ளை (யா/ இராமநாதன் கல்லூரி), ப.கணேசன் (யா/கொட்டடி நமசிவாய வித்தி,கா.சசிதரன் (மன்/ கௌரியம்பாள் அ.த.க.பா),திருமதி மி.விமலநாதன் (யா/இந்து மகளிர் கல்லூரி), செ.பேரின்பநாதன் (யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தி, த.ரவீந்திரன் (யா/வட இந்து ஆரம்பப் பாடசாலை),மு.விக்கினேஸ்வரன் (யா/சைவத் தமிழ் வித்தியாலயம்), சோ.இராமநாதன் (யா/வீமன் காமம் ம.வித்தி

சிரேஷ்ட ஆலோசகர்களாக ச.சிவனேஸ்வரன், கலாநிதி செ.சேதுராஜா, அ.கயிலாயபிள்ளை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ

# INVITATION FOR BID District Secretariat, JAFFNA

1.The Chairman, District Secretariat Procurement Committee (DPC) on behalf of the Jaffna Municipal Council, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.

2.Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).

4.Interested bidders may obtain further information from **Commissioner's office, Municipal Council, Jaffna (T.No: 021-222 2019)** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 16.00 hrs.

5.A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Commissioner's Office, Jaffna Municipal Council from 30.05.2016 until 20.06.2016 from 9.00 hrs to 14.00 hrs upon payment of a non-refundable fees of Rs.2,000.00**. The method of payment should be by cash.

6.Bids shall be delivered to the address at **District Secretariat, Kandy Road, Jaffna on or before 21.06.2016 and 14.00 hrs.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.

7.Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Sc.no | Bid No | Description of Work | Engineer's Estimated Cost /(Rs in million) | Estimated Cost with all Taxes /(Rs in million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Valid Period |
| 1 | JMC/WD/02/SP. PRO/2016/01 | Construction of recyclable waste collection cum operation centre at Nallur | 5.998 | 6.850 | 6 months | C 7 or above | 60,000.00 | 91 days |
| | | Construction of recyclable waste collection cum operation centre at Paasaiyoor | | | | | | |
| | | Renovation of recyclable waste collection cum operation centre at Gurunagar | | | | | | |
| 2 | JMC/WD/02/SP. PRO/2016/02 | Construction of recyclable waste collection cum operation centre at Navanthurai | 1.09 | 1.218 | 6 months | C 8 or above | 37,000.00 | 91 days |
| | | Renovation of recyclable waste collection cum operation centre at Ariyalai | | | | | | |
| | | Construction of recyclable waste store room at Kakaithevu | | | | | | |

**N.Vethanayahan,**
**Government Agent/ District Secretary, Jaffna District.**

(C-4744)

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024 (C-4662)
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்

## சீனாவில் நிலச்சரிவால் 5 பேர் பலி; 9பேர் மாயம்

சீனாவின் இரண்டு மாகாணங்களில் நேற்று முன்தினம் ஏற்பட்ட கடும் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக 5 பேர் பலியானார்கள். 9 பேர் மாயமாகியுள்ளனர். குவாங்டாங் மாகாணத்தில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளம் காரணமாக 5 பேர்பலியானார்கள். 3 பேர் மாயமானார்கள். ஜெஜியாங் மாகாணத்தில், நிலச்சரிவு காரணமாக பல வீடுகள் மண்ணில் புதைந்தன. இதில் 6 பேர் மாய மானார்கள். (இ-5)

# இதய அஞ்சலி



எமது கல்லூரியின் அதிபரும்
எமது விளையாட்டுக் கழகத்தின்
போசகருமாகிய
அருட்தந்தை
ஜே.ஏ.ஜேசுதாஸ்
அவர்களின்
அன்புத் தாயார்
அமரர் விக்டோரியா
யோசப் அந்தோனிப்பிள்ளை

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அதிபர் மற்றும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் சார்பில் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனின் அருளை வேண்டி நிற்கின்றோம்.

யங்ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம்,
இளவாலை.

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 24 . 12 . 1949



விண்ணில் 02 . 06 . 2013

## அமரர் முத்துத்தம்பி சச்சிதானந்தம்

(வெற்றிலைக்கடை ஆனந்தம், பருத்தித்துறை)

எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் இறையடி சேர்ந்து ஆண்டு
மூன்று ஆனாலும் உங்கள் நினைவு
எங்களை விட்டு நீங்கவில்லை.
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சீ-4691)

நறுவிலியடி,
புலோலி தெற்கு (கிழக்கு),
புலோலி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி. இராசபூபதி கந்தசாமி

பிறப்பு:– 25.02.1929 இறப்பு:–25.05.2016

யாழ். உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கனடா, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராசபூபதி கந்தசாமி 25-05-2016 புதன்கிழமை அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்-நாகபிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற கந்தசாமி திரவியம் (இளைப்பாறிய பிரதம லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும்,நவரத்தினம்(லண்டன்), செல்வபூதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,ஜெயகௌரி (கௌரி-லண்டன்), ஆனந்தகௌரி (ஆனந்தி- கனடா), ஜெயக்குமார் (குமார்- கனடா), சாந்தகௌரி (சாந்தா- சுவிஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், விஜித்தா மயில்வாகனம் (கனடா) அவர்களின் அன்புப் பெரியம்மாவும், சோதீஸ்வரன் (லண்டன்), நந்தகுமார் (கனடா), சுஜீவா(கனடா), விமலநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயந்தன்(லண்டன்), நிரோஷன்(லண்டன்), சுஜந்தன் (லண்டன்), தரண்யா (லண்டன்), சாயீஷன் (லண்டன்), தான்யா (கனடா), கிருஷாந்த் (கனடா), நர்த்தனா (கனடா), தக்ஷனா (கனடா), யாதவன் (கனடா), அச்சுதன் (கனடா), ஸ்வப்னா (சுவிஸ்), ஸ்வேதா (சுவிஸ்) ஆகியோரின் அருமைப் பேத்தியும் ஆவார். இவ் அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிகழ்வுகள் கிரியை
திகதி: 31/05/2016 செவ்வாய்க்கிழமை, காலை 08:30 - மு.ப 10:30
முகவரி:Oshwal Hall, 1 Campbell Rd, Croydon,Greater London CR0 2SQ, UK
தகனம்
திகதி: 31/05/2016 செவ்வாய்க்கிழமை, மு.ப 10:45 - மு.ப 11:30
முகவரி:South London Crematorium, Rowan Rd, Mitcham, London SW16 5JG, United Kingdom
தொடர்புகளுக்கு:
தொலைபேசி: +442035652471, செல்லிடப்பேசி:+447889633154

கௌரி பவனம்,
வீரபத்திரர் கோவிலடி,
உடுப்பிட்டி தெற்கு,
உடுப்பிட்டி,
021 205 5885

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C-4742)

# சிறுவர் பூங்கா அமைப்பதற்கு ராஜாங்க அமைச்சர் நிதியுதவி

(மல்லாவி)

கிளிநொச்சி சிவபாத கலையகத்தின் சிறுவர் பூங்கா அமைப்பதற்கு இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நிதியுதவி வழங்கியுள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து குறித்த பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் உள விருத்திக்காக குறித்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையின் அடிப்படை வசதிகள் தொடர்பில் நேரடியாக சென்று பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர். பாடசாலையின் கல்வி விருத்திக்கு தான் உதவுவதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலை யில் முதல் கட்டமாக இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 4 இலட்சம் ரூபாய் செலவில் சிறுவர் பூங்கா ஒன்றினை அமைப்பதற்கான நிதி ஒதுக்கியுள்ளதாகவும், விரைவில் அதற்கான பணிகள் இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் முழங்கால்களிலும், தரையிலும் இருந்து பரீட்சை எழுதும் நிலை தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்தியை அடுத்து, மறுநாள் குறித்த பாடசாலைக்கு சென்ற சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மாணவர்களின் நிலை தொடர்பில் நேரடியாக பார்வையிட்டார்.

தொடர்ந்தும் பாடசாலையில் நிலவும் வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-15)




# வலுவிழப்புடனான 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு மருத்துவ முகாம்

## மருத்துவ சான்றிதழ்கள், ஆதார உபகரணங்கள் வழங்கப்பட்டன



மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மூளை முடக்குவாதம் மற்றும் அதுசார்ந்த பாதிப்புக்களையுடைய 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான மருத்துவ முகாம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெற்றது.

மூளை முடக்குவாதம் மற்றும் அது சார்ந்த பாதிப்புக்களையுடைய சிறுவர்கள், கல்வி கற்பதற்கும், அன்றாட செயற்பாடுகளை செய்வதற்கும், இயன் பயிற்சிகள் மற்றும் உதவித்திட்டங்களைப் பெறுவதற்கும் மருத்துவச்சான்றிதழ் இல்லாமையினால் பெரும் சிரமத்தினை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் இச் சிறுவர்களுக்குள்ள பாதிப்பு வலுவிழப்பு முறையாக பகுப்பாய்வு செய்யப்பட்டு, அடையாளம் காணமுடியாமலும், முறையான மருத்துவ அத்தாட்சிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியாமலும், பொருத்தமான சக்கர நாற்காலி மற்றும் ஆதார உபகரணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமலும் அவர்களது பெற்றோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே அக்குறைபாட்டினை நிவர்த்திசெய்யும் நோக்குடன் மன்னார் மாவட்டத்தில், மன்னார் நகர பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மூளை முடக்குவாதம் மற்றும் அதுசார்ந்த பாதிப்புக்களையுடைய 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கான மருத்துவமுகாம் நடைபெற்றது.

இம் மருத்துவ முகாமில் 34 பிள்ளைகள் பங்குபற்றியதோடு 34 பிள்ளைகளுக்கும் மருத்துவச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. 12 பிள்ளைகளுக்கு இயன் பயிற்சி வழங்கப்பட்டது. 07 பிள்ளைகளுக்கு பொருத்தமான சக்கர நாற்காலிகள் மற்றும் ஆதார உபகரணங்கள் வழங்குவதற்கான அளவுத்திட்டங்கள் எடுக்கப்பட்டு உரியகாலத்தில் இவற்றை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவசரமாகத் தேவைப்பட்ட பிள்ளைக்கு பொருத்தமான சக்கரநாற்காலி வழங்கப்பட்டது.

இம் மருத்துவமுகாமானது "இலங்கையின் வடபகுதியில் மூளை முடக்குவாதம் மற்றும் அதுசார்ந்த பாதிப்புக்களையுடைய சிறுவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துதல்" என்னும் திட்டத்தின் கீழ் ஜேர்மனிய அரசாங்கத்தினது பொருளாதார அமைச்சின் (BMZepWtd) நிதி அனுசரணையுடன், The Johanniter நிறுவனத்தின் சர்வதேச தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் Motivation Sri Lanka நிறுவனத்தின் தொழில்நுட்பஉதவி, மன்னார் Regional Deputy Health Services (RDHS) பணிமனையின் ஒருங்கிணைப்புடன் Mannar Association for Rehabilitation of Differently Able People(MARDAP) நிறுவனத்தின் ஒழுங்குபடுத்துதலின் கீழ் மன்னார் Sri Lanka Red Cross Society (SLRC) இம் மருத்துவமுகாம் நடைபெற்றது. (2-9)



# மோ.சைக்கிள்களில் ஒரு பக்கமாக அமர்ந்து பயணிப்பதற்கு இருபாலாருக்கும் தடை

(பரந்தன்)

கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிள்களில் இருபாலாரும் ஒரு பக்கமாக அமர்ந்து பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களில் பின்னால் இருந்து பயணிப்பவர் இரண்டு பக்கங்களும் கால்களை வைத்தவாறே பயணிக்க வேண்டும். மோட்டார் சைக்கிள்களில் ஒரு பக்கமாக இருந்து பயணிப்பதால் பின்னால் இருந்து பயணிப்பவர் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் விழுவதற்கு நேர்ந்தால் வாகன சாரதியும் வாகனமும் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகமாக இருப்பதாகவும் இதனால் உயிராபத்துக்கள் இடம்பெறுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து சட்டத்தின் பிரகாரம் இக் குற்றத்திற்கு பொலிஸாரால் தண்டப்பணம் அறவிட முடியாது. இக் குற்றங்கள் நீதிமன்றத்திற்கே அனுப்பப்படும்.

எனவே அனைவருக்கும் முதல் தடவை மன்னிப்பு வழங்குவதாகவும் மீண்டும் இவ்வாறு நடக்கும் பட்சத்தில் நீதிமன்றத்திற்கு குற்றம் அனுப்பப்படும் என சாரதிகளுக்கு கிளிநொச்சி போக்குவரத்து பிரிவு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸ் பிரிவை தொடர்பு கொண்டு வினவிய போது இவ்வாறு சட்டத்தில் இடமிருப்பதாகவும் ஆனால் மேலதிக தகவல்களை ஊடகங்களுக்கு வழங்குவதற்கு தங்களுக்கு அனுமதி இல்லை எனவும் கூறினர்.(2-312)


# வீட்டின் அறையில் இருந்து இரு கஞ்சா செடிகள் மீட்கப்பட்டன

(குருமன்காடு)

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் அறையில் இருந்த இரண்டு கஞ்சாச் செடிகளை வவுனியா பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த கஞ்சாச் செடிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் கடந்த சில நாட்களாக அப்பகுதியில் மக்களால் வளர்க்கப் பட்ட மாடுகள் சில காணாமல் போயிருந்தன. இதனையடுத்து இது தொடர்பில் மாட்டு உரிமையாளர்களினால் பண்டாரிக்குளம் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இது குறித்த எந்தவொரு தீர்வும் மக்களுக்கு கிடைக்கவில்லை.



இதனை அடுத்து ஊர் மக்கள் மாட்டுத் திருட்டுச் சம்ப வம் தொடர்பில் சந்தேகத்தின் பெயரில் ஒருவரை மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மக்களால் பிடித்துக் கொடுக்கப்பட்டவரை விசாரணை செய்த குற்றப்புலனாய்வு பிரிவின் உப பரிசோதகர் ரட்னாயக்க, சார்ஜன் ஜேசுதாஸ் தலைமையிலான குழுவினர் சந்தேக நபரின் வீட்டை சோதனை செய்த போது வீட்டின் படுக்கை அறையில் இருந்து 4-6 அடி உயரமுடைய கஞ்சா செடிகள் இரண்டு கைப்பற்றபட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# பிரதான வாசற்கதவு பொருத்தப்படாது இயங்கும் சமுதாய அடிப்படை வங்கி



முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி பல மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டு மக்களுக்கு சேவையாற்றத் தொடங்கி பல மாதங்கள் கடந்த நிலையிலும் அதற்குரிய பிரதான வாசற் கதவு இன்னமும் பொருத்தப்படாமல் இருப்பதை அவதானிக்க முடிகிறது.


இக் கதவினை நிர்மாணிப்பதற்காக ஒவ்வொரு சமுர்த்தி பயனாளிகளிடம் இருந்தும் அகுறித்த பணத் தொகை அறவிடப்பட்ட போதும் அவ் வேலை இன்னமும் நிறைவேற்றப்படாமல் இருப்பதாக பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் கட்டுப்பாட்டுச் சபையினரை தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்த பணிக்காக தம்மால் சேர்க்கப்பட்ட பணத் தொகை வங்கி முகாமையாளரிடம் குறித்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்டு விட்டதாக தெரிவிக்கிறார். எனவே உரிய அதிகாரிகள் இதனை கவனத்தில் எடுப்பார்களா என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (2-310)



வவுனியா தரணிக்குளம் புனித யோசவாஸ் ஆங்கில முன்பள்ளியின் விளையாட்டு விழா நேற்று முன்தினம் தரணிக்குளம் மறைப்பணி இல்லத்தைச் சேர்ந்த வண.அருட்தந்தை வி.பீற்றர் அமல்ராஜ் கப்புச்சின் தலைமையில் நடைபெற்றது..இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன்,கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயில வாகனம் தியாகராசா மற்றும் அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர், மதகுருமார் எனப் பலரும் கலந்து சிறப்பித்தார்கள். (படங்கள்:பனிக்கன்குளம் செய்தியாளர்)

# இரண்டு வெவ்வேறு வாகன விபத்துக்களினால் பல இலட்சம் இழப்பு




(மல்லாவி)

மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முறிகண்டி பகுதியில் இடம் பெற்ற இரு வெவ்வேறு வாகன விபத்துக்களில் பல இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஒருவர் சிறு காயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். வாகனமும் தலைக்குப்புற கவிழ்ந்தது. இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொட்ர்பில் தெரிய வருவதாவது,

பனிக்கன்குளம் பகுதியிலிருந்து



யாழ்ப்பாணத்திற்கு மணல் ஏற்றி பயணித்த டிப்பர் வாகனம், யாழ்ப்பாணத்திலிருந்து தெற்கு நோக்கி பயணித்த கப் வாகனத்துடன் மோதுண்டது.

குறித்த விபத்தின்போது இரு வாகனங்களும் தடம் புரண்டதுடன், இலங்கை தொலைத்தொடர்பு நிறுவனத்திற்கு சொந்தமான கம்



பத்துடன் மோதி சேதத்திற்குள்ளானது. குறித்த விபத்தின் காரணமாக முறிகண்டி பிள்ளையார் ஆலயம் முன்பாக ஏ9 வீதியில் சில மணி நேரம் பயணிக்க முடியாத வாறு போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

இதேவேளை குறித்தவீதியில் பயணத்தில் ஈடுபட்ட மற்றுமொரு டிப்பர் வாகனம், வீதியை குறுக்கறுத்து நின்ற வயர்களை மோதியவாறு பயணித்தமையால் மேலும் பல இலட்சம் ரூபாய்கள் நட்டம் ஏற்படுத்தப்பட்டன.

குறித்த வீதியை குறுக்கறுத்து நின்ற வயர்களாலேயே மேற்குறித்தவாறு சில மணிநேரங்கள் போக்குவரத்து ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. வேக கட்டுப்பாட்டை இழந்த குறித்த டிப்பர் வாகனம் வயர்களை அறுத்தன. இதனால் மேலும் பல நட்டம் குறித்த நிறுவனத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருந்தன.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். விபத்தில் ஒருவர் சிறு காயங்களிற்கு உள்ளான நிலையில் சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார், வேறு எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், பல இலட்சம் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மாங்குளம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முறிகண்டி பிள்ளையார் கோவில் முன்புறம் ஆபத்தான வளைவு உள்ளதால் குறித்த இடத்தில் வேகத் தடை ஏற்படுத்தினால் வீதி விபத்துக்களை தவிர்த்துக்கொள்ள முடியும் . குறித்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்திற்கு கொண்டு சென்றும் எதுவிதப் பயனும் கிடைக்கவில்லையென பொதுமக்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர். (2-15)

# 5 இலட்சம் பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்பு

## திருவையாறு பகுதியில் சம்பவம்



(மல்லாவி)

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் வைத்து சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரைக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் லொறி, மரக்குற்றிகள் இன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு சாரதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

லொறி ஒன்றில் மரக்குற்றிகள் ஏற்றப்பட்ட நிலையில் எருக்கள் நிரப்பப்பட்ட மூடைகளால் மூடப்பட்டு யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் மேற்படி இடத்தில் தயாராக இருப்பதாக கிளிநொச்சி பொலிஸாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் வாகன சாரதியைக் கைது செய்ததுடன் லொறியும் மற்றும் முதிரை மரக்குற்றிகள் என்பன பொலிஸாரிடம் மீட்கப் பட்டது.


கைப்பற்றப்பட்ட முதிரை மரக் குற்றிகள் சுமார் 5 இலட்சம் ரூபா பெறுமதியானவை என மதிப்பிடப் பட்டுள்ளது.

நீண்டகாலமாக இவ்வாறு மரக் குற்றிகள் சட்டவிரோதமாக பிற மாவட்டங்களுக்கும் உள்ளூரிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தொடர்ந்தும் பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கும் கிளிநொச்சி பொலிஸார் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்திற்கு தகவல்களை வழங்குமாறும் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-15)




# கிளிநொச்சி நகர பராமரிப்பு தொடர்பில் அக்கறை குறைவு

## பொது மக்கள் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி நகர் உட்பட பல பிரதேசங்களில் கழிவுகள் சிறந்த முறையில் அகற்றப்படுவதில்லை எனவும், கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பில் பிரதேச சபையினர் அக்கறை செலுத்துவதில்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி நகரின் அபிவிருத்தி தொடர்பிலும், அதன் முன்னேற்றம் தொடர்பிலும் பல்வேறு முக்கிய கலந்துரையாடல்களில் பேசப்படுகிற போதிலும், அதன் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பில் அக்கறை செலுத்தப்படுவதில்லை என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மாவட்டத்தின் பல பகுதிகளில் குப்பைகள் சிதறி காணப்படுவதாக தெரிவிக்கும் பிரதேச மக்கள், அவற்றை உரிய முறையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகளை உரியவர்கள் முன்னெடுப்பதில்லை எனவும் சுட்டிக் காட்டுகின்றனர்.

நேற்றைய தினம் கரைச்சி பிரதேச சபை பிரதான வாயிலருகில் குப்பைகளும், பொலித்தீன் பைகள், போத்தல்கள் என நகரை அசுத்தப்படுத்தும் வகையில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாவட்டத்தில் ஆங்காங்கு காணப்படும் கழிவுகளை அகற்றுவதற்கான நடவடிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மாவட்டத்தின் நகர அபிவிருத்தி, நகர திட்டமிடல் என பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படுகின்ற போதிலும், தற்போதுள்ள கிளிநொச்சி நகரை உரிய முறையில் பேண முடியாதவர்கள், எதிர்வரும் காலங்களில் நகரமயப்படுத்தப்பட்டதன் பின்னர் எவ்வாறாக பாதுகாக்க முடியும் எனவும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (2-15)

# தம்பிராசபுரம் கிராமத்தில் வசிக்கும் குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள்

## கல்வி வளர்ச்சியில் அறக்கட்டளையினர்



(உருத்திரபுரம்)

உலக மருத்துவ சுகாதார சங்கத்தின் அனுசரணையில்,கல்வி வளர்ச்சியில் அறக்கட்டளையால், கிளிநொச்சி அரசாங்க அதிபரின் உத்தரவுக்கு அமைய கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தம்பிராசபுரம் கிராமத்திலுள்ள 210 குடும்பங்களுக்கு உடனடி பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் உலர் உணவுப்பொருட்கள் வழங்கும் நிகழ்வு கடந்த 24 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் தம்பிராசபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் கல்வி வளர்ச்சியில்அறக்கட்டளையின் காப்பாளர் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கல்வி வளர்ச்சியில் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு மக்களுடன் கலந்துரையாடியதுடன் ஒரு குடும்பத்துக்கு ஆயிரத்து 800 ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கி வைத்தனர். (2-298)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடத்திய உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை பெறுபேறுகள்

ஓகஸ்ட்-2016 மாணவர் பெயர், பாடசாலையின் பெயர்,வெட்டுப் புள்ளி, நிலை **(Rank)** என்பன வருமாறு.

**உயிரியல் துறை**

T.Agashan-J/Jaffna Hindu College- 2.8619-1,T.Hamsha-J/Vembadi Girls High School-2.6538-2, M.Niluja-J/Vembadi Girls High School-2.6524-3,S.Suganya-J/Vembadi Girls High School-2.5755-4,P.Meshigan-J/Jaffna Hindu College-2.3793-5, S.Kokulan-J/Jaffna Hindu College-2.3780-6, R.Jasthika-J/Methodist Girl's High School-2.3299-7,J.Laksujan-J/Jaffna Hindu College-2.1453-8, S.Subavasiny-J/Vada Central Ladies College-2.1137-9, Y.Sahithiyan- J/Jaffna Hindu College-2.1048-10, U.Sahana-J/Vada Hindu Girls College-2.0777-11,R.Nirojan-J/Hartley College-2.0749-12,R.Laxshika-J/Kokuvil Hindu College-2.0697-13, N.Tharangi-J/Vembadi Girls High School-2.0503-14, S.Rathiny-J/Vembadi Girls High School-1.9780-15,K.Kajaluxshi-J/Vembadi Girls High School-1.9566-16, S.Jananthini-J/Vembadi Girls HighSchool-1.9469-17, S.Sinthuja-J/Vembadi Girls High School-1.9317-18,K.Thamiliny-J/Vembadi Girls High School-1.9214-19,V.Dhanan- J/Nellijady Central College-1.8556-20,M.Paviththira-J/Chithammbara College-1.8490-21,P.Kopithah-J/Vembadi Girls High School-1.7474-22,S.Sivapriyan-J/Jaffna Hindu College-1.7330-23,S.Ilankunran- J/Hartley College-1.7185-24, S.Thujiva-J/Methodist Girl's High School-1.7171-25,C.Priyanka-J/Vembadi Girls High School-1.7096-26, P.Kajishija-J/Manipay Ladies College-1.7060-27, R.Keerthiga-J/Vembadi Girls High School-1.6595-28, P.Piragasini-J/Kokuvil Hindu College-1.6020-29, S.Danegka-J/Vembadi Girls High School-1.5887-30, L.Vithursha-J/Nellijady Central College- 1.5757-31,R.Nitharshini-J/Vembadi Girls High School-1.5698-32,K.Mathula- J/Methodist Girl's High School-1.5607-33,U.Nivetha-J/Methodist Girl's High School-1.5443-34,B.Narmatha-J/Vada Hindu Girl's College-1.5069-35, J.Abirami-J/Vembadi Girls High School-1.5044-36,K.Kaarthika-J/Methodist Girl's High School-1.5010-37,Y.Suvanthigan-J/Jaffna Hindu College-1.4903-38,S.SovikaJ/ Methodist Girl's High School-1.4604-39, S.Jeyaluxmy-J/Methodist Girl's High School-1.4590-40, B.Tharusan-J/Jaffna Hindu College-1.4417-41, S.Paraparan-J/Jaffna Hindu College-1.4223-42,S.Gobika-J/Vada Central Ladies College-1.3972-43, J.Thanuja-J/Vada Central Ladies College-1.3645-44, S.Govarthanan-J/Jaffna Hindu College-1.3617-45,M.Thuvaraka-J/Vembadi Girls High School-1.3616-46, S.Rathusan-J/Jaffna Hindu College-1.3521-47, R.Rahavi-J/Vembadi Girls High School-1.3324-48,K.Kowsika-J/Chavakachcheri Hindu College-1.3215-49,M.Viveka-J/Methodist Girl's High School-1.2861-50,N.Vithushan-J/Hartley College-1.2595-51, Y.Thishanthini-J/Vembadi Girls High School-1.2407-52,S.Mathusa-J/Vembadi Girls High School-1.2056-53,V.Sivaranchini-J/Vembadi Girls High School-1.1984-54,S.Thirumalan-J/Jaffna Hindu College-1.1605- 55, S.Veyayashanth-J/Jaffna Hindu College-1.1583-56,A.Benitta-J/Vem badi Girls High School-1.1544-57, N.Thuvarakan-J/Jaffna Hindu College- 1.15 15-58,T.Elamaran-J/Jaffna Hindu College-1.1105-59, V.Kajansika-J/Vembadi Girls High School-1.1102-60,P.Lakshanya -J/Holy family convent- 1.1093-61, A.Archuthan-J/Hartley College-1.1056-62, V.Gowthami-J/Vembadi Girls High School-1.1036-63,N.Tharshini-J/Uduppiddi Girl's College-1.0976-64,R.Kamshana-J/Vem badi Girls High School-1.0954-65, J.Rajeegini-J/Methodist Girl's High School-1.0896-66,S.Kuyinsha-J/Idaikkadu M.V.-1.0873-67,S.Thamil chelvi-J/Vembadi Girls High School-1.0836-68,A.T.Tonya-J/Vada Central Ladies College-1.0822-69,K.Abira-J/Nellijady Central College-1.0783-70 S.Sivakaran-J/Hartley College-1.07 63-71,A.Tharanya-J/Methodist Girl's High School-1.0723 -72, S.Karthika-J/Chavakachcheri Hindu College-1.0714-73, V.Balayasothini-J/Vembadi Girls High School-1.0515-74, S.Kaja nan-J/Hartley College-1.0476-75, S.Pirapalini-J/Vembadi Girls High School-1.0410-76, R.Karthi hajini-J/Victoria College-1.0368-77,S.Vaish navy-J/Nellijady Central College-1.0214-78, S.Pirathas-J/Hartley Colle ge-1.0035-79,N.Abiramy-J/Vem badi Girls High School-1.0014-80, N.Abiramy- J/Arunodaya College-0.9703-81, R.sathursan-J/Jaffna Hindu College-0.9624-82,V.Gobikan-J/Jaffna Hindu College-0.9487-83,P.Neeranjali- J/Vembadi Girl's High School-0.9464-84,R.Linkaeesan-J/Jaffna Hindu College-0.9458-85,P.Kamshan-J/Nellijady Central College-0.9399-86,P.Rishikanthy-J/Vaddu Hindu College-0.9370-87,A. Amirthavarsini-J/Manipay Ladies College-0.9332-88, S.Vanaja-J/Methodist Girl's High School-0.9220-89,T.Sangavee-J/Vembadi Girls High School-0.8910-90,P.Anoja- J/Nellijady Central College- 0.8849-91,V.Abinaya-J/Methodist Girl's High School-0.8823-92, P.Jasmini- J/Vembadi Girls High School-0.8737-93, M.Kiruciga-J/Vembadi Girls High School-0.8675-94,M.Mathula-J/Uduppiddi Girl's college-0.8523-95,V.Vithiya-J/Methodist Girl's High School-0.8466-96,N.Priyanka-J/Vembadi Girls High School-0.8415-97,S.Aberame-J/Vembadi Girls High School -0.8239-98,P.Vaishnavy-J/Vembadi Girls High School-0.8181-99,B.Nilogini-J/Vembadi Girls High School-0.8041-100,S.Sathustika-J/Vembadi Girls High School-0.7989-101, A.Sivashangar-J/Jaffna Hindu College-0.7910-102, K.Thanusika-J/vada Central Ladies College-0.7818-103,Y.Abirami-J/Chithammbara College-0.7710-104, S.Vithuyan-J/Harltey College-0.7674-105,V.Jathees-J/Hartley College-0.7474-106,S.Shasmeera-J/Vembadi Girls High School-0.7444-107,M.Thirishiga-J/Vembadi Girls High School -0.7301-108, T.Kabila-J/Vembadi Girls High School-0.7158-109,N.Nanajothy-J/Uduppiddi Girl's College-0.7157-110,S.Sinthuja-J/Methodist Girl's High School-0.7155-111,K.Jamini-J/Uduppiddi Girl's College-0.7056-112, S.Rishikopan-J/Hartley College-0.6992-113, M.Vipushana-J/Vembadi Girls High School-0.6953-114, B.Barathy-J/Uduppiddi Girl's College-0.6886-115, V.Mithuna-J/Methodist Girl's High School-0.6776-116,T.Nishandansan-J/Vayavillan Central College- 0.6663-117,V.Thujeeba-J/Vembadi Girls High School-0.6651-118,N.Tharsiga-J/Vembadi Girls High School-0.6586-119,S.Dishanthini-J/Uduppiddi Girl's College-0.6481-120,J.Kanistan- J/St Patrick's College-0.6311-121, S.Bavatharani-J/Vembadi Girls High School-0.6293-122,V.Kobana-J/Methodist Girl's High School-0.6267-123,N.Uyana-J/Nellijady Central College-0.6181-124,K.Kowthami-J/MethodistGirl's High School-0.6157-125,B.Aarany-J/MethodistGirl's High School-0.6152-126,S.Laksika-J/Vembadi Girls High School-0.6114-127,R.Hirushanthan-J/St Patrick's College-0.6048-128, S.Piriyankan-J/chavakachcheri Hindu College-0.6044-129,J.Sanjayan-J/Uduppiddy American Mission- 0.5955-130,S.Kasthuri-J/Methodist Girl's High School-0.5924-131,L. Dasintha-J/Vembadi Girls High School-0.5918-132, A.Puvitha-Sri Somaskanda College-0.5888-133,T.Sarangan-J/Mahajana College-0.5787-134,S.-Majitha-J/Methodist Girl's High School-0.5771-135,P.Thadshajini-J/Vembadi Girls High School-0.5663-136,V.Thevasena-J/Vembadi Girls High School- 0.5637-137,P.Piriyanka-J/Uduppiddi Girl's College-0.5580-138, S.Sarankan-J/Chavakachcheri Hindu College-0.5520-139,Y.Abitharan-J/Hartley College-0.5502-140, P.Kobiras-J/Jaffna Hindu College-0.5456-141, R.Kajana-J/Vembadi Girls High School-0.5442-142,Subaskar-J/Jaffna Hindu College-0.5258-143, A.Anurakan-J/Hartley College-0.5069-144, T.Nilaksika-J/Jaffna College-0.5009-145,S.Thanishkumar-J/Hartley college-0.5003-146,S.Hamsajini-J/vada Central Ladies College-0.4970- 147, V.Varakulan-J/Hartley College-0.4837-148,S.Piraveena-J/Vembadi Girls High School-0.4569-149, P.Kasmila-J/Vembadi Girls High School-0.4568-150,S.Kasthuri-J/Vembadi Girls High School-0.4464-151,P.Vinoyan-J/Hartley College-0.4426-152, B.Nirojan-J/Kokuvil Hindu College-0.4273-153, K.Keerthana-J/Methodist Girl's High School-0.4267-154,T.Kiruhanthy-J/Mesalai Veerasingam Central College-0.4253-155, A.Thenisha-J/Methodist Girl's High School-0.4079-156, S.Loveciya-J/Vembadi Girls High School-0.4020-157, N.Salini-J/Vembadi Girls High School -0.3977- 158, S.Vithurshan-J/Nellijady Central College-0.3957-159,Vanavan-J/Jaffna Hindu College-0.3933-160,B.Jinojan-J/Kokuvil Hindu College-0.3916-161, A.Sangeetha-J/MethodistGirl's High School-0.3911-162, B.Kajanthini-J/Vembadi Girls High School-0.3845-163, N.Nanthini-J/Uduppiddi Girl's College-0.3756-164,P.Karthika-J/Vembadi Girls High School-0.3681-165,K.Tharshika-J/Holy family convent-0.3666-166, T.Sangavi-J/Vembadi Girls High School-0.3593-167, M.Arathana-J/Methodist Girl's High School-0.3517-168,M.Mathuran-J/Jaffna Hindu College-0.3503-169,M.Lukshika-J/Methodist Girl's High School-0.3474-170,C.Saminy-J/Victoria College-0.3221-171,S.Haarini-J/Vembadi Girls High School-0.3218-172, A.Mayoori-J/Jaffna Hindu Ladies College-0.3170-173,U.Thadchaya-J/Vembadi Girls High School-0.3133-174, P.Mathusha- J/Vembadi Girls High School-0.3038-175,P.Mithusha-J/Victoria College-0.3019-176, S.Vishnumeera-J/Vada Hindu Girls College- 0.2804-177, B.Pahirathan-J/Jaffna College-0.2758-178, P.Thanushika-J/Mesalai Veerasingam Central College-0.2744-179, N.Raniya-J/Manipay Ladies College-0.2700-180,S.Diluxshana-J/Vembadi Girls High School-0.2697-181,Keshavan-J/Jaffna Hindu College -0.2634-182,V.Mathuranga-J/Vembadi Girls High School-0.2508- 183,T.Jalujaa-J/Vembadi Girls High School-0.2503-184,Y.Vithushika-J/Vembadi Girls High School-0.2450-185,R.Suthargene-J/Jaffna Hindu Ladies College-0.2387-186,K.Keerththyka-J/Vaddu Hindu College-0.2366-187,R.Piraveena-J/Vembadi Girls High School-0.2363-188, P.Shanghika-J/Vembadi Girls High School-0.2346-189, G.Tharsini-J/Vada Hindu Girls College-0.2309-190, T.Mithusa-J/Vembadi Girls High School-0.2305-191, T.Shan kavi-J/Vembadi Girls High School-0.2301-192,S.Vishnupiriya-J/Vada Hindu Girls College-0.2292-193, T.Tharsigan-J/Jaffna Hindu College-0.2232-194,J.Kavapriya-J/Vembadi Girls High School-0.2227-195,V.Tharshika-J/MethodistGirl's High School-0.2067-196,S.Kirushika-J/Nellijady Central College-0.2047-197,S.Anoj-J/Hartley College-0.1952- 198,G.Gogulapriya-J/Vembadi Girls High School-0.1935-199, S.Thilakshana- J/Vembadi Girls High School- 0.1903-200, B.Sobika-J/Manipay Ladies College-0.1696-201, G.Vithuran- J/Jaffna Hindu College-0.1687-202, U.Gobisha-J/Vembadi Girls High School-0.1680-203, M.Thiluxshan-J/Jaffna Hindu College-0.1665-204,J.Kirushanthy-J/Pandateruppu Girls-0.1591-205, N.Vinoja-J/Vembadi Girls High School-0.1509-206,S.Sivaja-J/chavakachcheri Hindu College-0.1496-207, S.Hamshalini-J/Vembadi Girls High School-0.1434-208,J.Merin Dinushiya-J/Vembadi Girls High School-0.1431-209,S.Subasini-J/Kondavil Hindu College-0.1345-210, V.Kolamugi-J/Vembadi Girls High School-0.1288-211,J.Anne shiromy-J/Vembadi Girls High School-0.1276-212, Praijalan-J/Jaffna Hindu College-0.1232-213, R.Santhakumar-J/Jaffna College-0.1229-214,K.Rangavi-J/Vembadi Girls High School-0.1090-215, R.Abirami-J/Vembadi Girls High School-0.1080-216,S.Thuvaraga-J/Jaffna Hindu Ladies College-0.1070- 217, J.Janeba-J/Vembadi Girls High School-0.1065- 218, S.Nivethanan-J/Hartley College- 0.1040-219,G.Babuthan-J/Jaffna Central College-0.0924-220, T.Shanuga-J/Vembadi Girls High School-0.0827-221,Vethakulan-J/Jaffna Hindu College-0.0735-222, R.Thashayini-J/Vembadi Girls High School-0.0570-223,S.Priyanthi-J/Vembadi Girls High School-0.0554-224, S.Thanusija-J/Vaitheeswara College-0.0469-225,C.Pavithram-J/Jaffna Central College-0.0437-226,R.Thulashy-J/Vembadi Girls High School-0.0411-227,S.Suganya -J/Vembadi Girls High School-0.0290-228,B.Vaishnavi-J/Vembadi Girls High School-0.0171-229,Saruthan-J/Jaffna Hindu College-0.0133-230,U.Thenugaani-J/Vembadi Girls High School-0.0089-231, T.Kokulan- J/Mahajana College- 0.0028-232, A.T.Thamiya-J/Vada Central Ladies College-0.0008-233.

முற்றும்

# இராஜாங்க அமைச்சர்கள் பதவி விலகத் தீர்மானம்

(கொழும்பு)

**இராஜாங்க அமைச்சர்கள் பலர் பதவி விலகத் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சரவை அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்களுக்கு பொறுப்புக்களை ஒப்படைக்கவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.**

இதனால் இராஜாங்க அமைச்சர்கள் எதிர்வரும் வாரங்களில் பதவியை துறக்கத் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது. அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது. (இ-5)

## அரசின் முகத்திரையைக் கிழிக்கும் போராட்டத்தில் இறங்குகிறது ஜேவிபி

(கொழும்பு)



ஜூன் 3ஆம் திகதி நல்லாட்சி அரசின் முகத்திரையைக் கிழிக்க ஜே.வி.பி. மாபெரும் போராட்டமொன்றை கொழும்பில் முன்னெடுக்கவுள்ளது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

"வரிச் சுமை மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளதால் மக்களின் வாழ்க்கைச் செலவு பன்மடங்கு உயர்ந்துள்ளது.

அவர்களின் வருமானத்தில் எவ்விதமாறுமுமில்லை. ஆனால், வரிச்சுமையை மாத்திரம் சுமக்க வேண்டியுள்ளது.

நல்லாட்சி என்று கூறிய மைத்திரி - ரணில் அரசு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகரித்துள்ளது. வற் வரி அதிகரிக்கப்படுவதால் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாது எனக் கூறப்பட்டது.

ஆனால், இன்று வற் வரியின் தாக்கத்தின் பெரும் பங்கு மக்கள் மீதுதான் சுமத்தப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக ஜே.வி.பி. மாபெரும் போராட்டங்களை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளது.

இதன்முற்கட்டமாக இன்று நாட்டின் அனைத்து பாகங்களிலும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவுள்ளோம். ஜூன் மூன்றாம் திகதி கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்தவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அரசின் தலைமைப் பொறுப்புகளை சுமக்கும் சபாநாயகர் கரு ஜயசூரிய

அரசாங்கத்தின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆற்ற வேண்டிய பணிகளை அண்மைக்காலமாக சபாநாயகர் கரு ஜயசூரிய பொறுப்பேற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளார்.

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்த சூழல் காரணமாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் அனைவரும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்தியிருந்தனர்.

இதன்போது அரச நிர்வாகம் உரிய முறையில் செயற்படுவதற்கான நடவடிக்கைகள் மாத்திரமன்றி அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கும் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமை தாங்கியிருந்தார்.

கடந்த வாரம் வெசாக் தினத்தை முன்னிட்டு பிரகடனப்படுத்தப்பட்டிருந்த அரசாங்க வெசாக் வாரம் கொண்டாட்ட நிகழ்வுகளும் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றிருந்தது.

அத்துடன் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடலையும் ஏற்பாடு செய்து நிவாரண நடவடிக்கைகள் தொடர்பிலும் கரு ஜயசூரிய தலைமைத்துவ வழிகாட்டலை வழங்கியிருந்தார்.

கடந்த சில மாதங்களாக வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்புகளில் அரசாங்கத்தின் சார்பில் சபாநாயகர் கரு ஜயசூரியவே கலந்துகொண்டிருந்தார்.

அத்துடன் கடந்த வாரம் போரின் போது உயிரிழந்த இராணுவ வீரர்களுக்கான பரம வீர விபூசண விருது வழங்கல் நிகழ்விலும் சபாநாயகரே தலைமை ஏற்றிருந்தார். பொதுவாக இந்த நிகழ்வு ஜனாதிபதி அல்லது பிரதமர் தலைமையிலேயே நடைபெறுவது வழக்கமாகும்.

இவ்வாறாக தேசிய அரசாங்கத்தினுள் இருந்து அடுத்த தலைமைத்துவம் நோக்கிய பயணத்தில், கரு ஜயசூரிய தன்னைப் பலப்படுத்தி வருவதாக கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது. (இ-5)

## புகைத்தலை ஒழிக்க வலியுறுத்தி விழிப்புணர்வுப் போராட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

புகையிலை சார் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கெதிராக சமூக அமைப்புக்களால் சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சில இடங்களில் நாளை புகைத்தல், மது ஒழிப்பு தினத்தில் விழிப்புணர்வு போராட்டம் ஒன்று மேற் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையில்,

புகைசார் பொருட்களான சிகரட், பீடி, சுருட்டு, புகையிலையுடன் கூடிய வெற்றிலைக்கூறு மற்றும் மது என்பவற்றின் விற்பனையை சமூக நலன் கருதியும் எதிர்காலத் தலைமுறையின் நலன் கருதியும் விற்பனை செய்வதை வர்த்தகர்கள் நிறுத்த வேண்டும் என்ற நோக்குடன் இந்த விழிப்புணர்வு போராட்டம் மேற் கொள்ளப்படவுள்ளது.

சமூக நலனிலும் எதிர்கால தலைமுறையினரிலும் அக்கறை கொண்ட பல வர்த்தகர்கள், தாம் புகைசார் பொருட்கள் மற்றும் சமூகத்தை பாதிக்கும் பொருட்களை விற்பதில்லை என சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் உறுதிப்படுத்தி சான்றிதழ்களைப் பெற்று முன்மாதிரியான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு அனைத்து வர்த்தகர்களும் இலாபத்தை கருத்தில் எடுக்காது சமூகத்தின் மீது அக்கறை கொண்டு செயற்பட வேண்டும்.

முதலாம் திகதி முதல் அனைத்து வர்த்தகர்களும் இவற்றின் விற்பனையை நிறுத்துவதுடன் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் னர், நீங்கள் புகைசார் பொருட்கள் விற்பதில்லை என்பதை உறுதிப்படுத்தி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பதிவினை மேற்கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

எதிர்கால தலைமுறையை பாதுகாக்கும் பணியை நாம் எமது வாழ்வின் முதற்கடமையாக கருதுவதால் சமூக நலனில் அக்கறையின்றிச் செயற்படும் வர்த்தகர்களுக் கெதிராகப் போராடவுள்ளோம்.

எனவே எமது போராட்டமானது யாழ்ப்பாணத்தை புகைத்தல், மது மற்றும் போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்கும் வரை தொடரும். எமது இளம் பிள்ளைகளை காப்பதற்காக பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸாருடன் இணைந்து எமது போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.


நாம் எமது போராட்டத்தை 10 ஆம் திகதிக்குப் பின்னர் கடுமையாக மேற்கொள்ளவுள்ளது. புதிதாக கொள்வனவு செய்வதை நிறுத்தும் சமூகத்தைப் பாதுகாக்க எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

எனவே சமூக நலனில் அக்கறையின்றிச் செயற்படும் சமூக விரோத வர்த்தகர்களுக்கெதிராக எதிர்வரும் 10 ஆம் திகதிக்குப் பின்னர் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ-9)

### கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்த

# இரண்டு ரோந்துப் படகுகளை ஜப்பான் இலங்கைக்கு வழங்கும்

(கொழும்பு)



கடல்சார் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கு, இலங்கைக்கு இரண்டு ரோந்துப் படகுகளை வழங்குவதற்கு ஜப்பான் முன்வந்துள்ளது.

ஜப்பானின் நகோயா நகரில், ஜனாதிபதி மைத்திரிக்கும், ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபேயிற்கும் இடையில் நேற்று முன்தினம் காலை நடந்த பேச்சுக்களின் போதே இதற்கான இணக்கப்பாடு காணப்பட்டது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடல்சார் ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, இரண்டு ரோந்துப் படகுகளை இலங்கைக்கு வழங்குவதாக, ஜனாதிபதியிடம் ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபே, தெரிவித்தார்.

அத்துடன் இலங்கைக்கு குடிநீர் மற்றும் மின்சார விநியோகத் திட்டங்களுக்காக 38 பில்லியன் யென் (சுமார் 50 பில்லியன் ரூபா) கடனுதவி வழங்குவதாகவும் ஜப்பான் அறிவித்துள்ளது.

இந்தப் பேச்சுக்களில் அமைச்சர்கள் மங்கள சமரவீர, ரவி கருணாநாயக்க, மலிக் சமரவிக்கிரம, நவீன் திசநாயக்க, மகிந்த அமரவீர ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பையடுத்து வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில், இந்தியப் பெருங்கடல், கிழக்கு மற்றும் தென் சீனக் கடல்களில் சீனாவின் செயற்பாடுகள் அதிகரித்திருப்பது பற்றி எந்த விடயங்களும் தெரிவிக்கப்படவில்லை.

எனினும், கடல்சார் சட்டங்களுக்கு அமைய ஆழ் கடலில் சுதந்திரத்தைப் பேண வேண்டியது முக்கியமானது என்று இரண்டு நாடுகளும் வலியுறுத்துவதாக கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# வாகன விலை அதிகரிப்பினால் இந்தியாவுக்கே லாபம் -மகிந்த

(கொழும்பு)



வாகனங்களுக்கான வரி அதிகரிப்பினால் இந்தியாவுக்கே அதிக நன்மை கிடைப்பதாகவும், இந்த நாட்டு வாகன இறக்குமதியாளர்களுக்கு பாரிய பாதிப்பை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதாகவும் இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் மகிந்த சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

இயந்திரம் ஓட்ட வேகத்தின் அடிப்படையில் புதிய வரி விதிப்பு இடம்பெறுவதாகவும், இதன்படி, இயந்திரம் வேகம் 1000 இற்கு அதிகமான சகல வாகனங்களினதும் விலை பாரியளவில் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரி விதிப்பினால் இறக்குமதியாளர்களும் நுகர்வோர்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த வரி அதிகரிப்பு தொடர்பிலான விசேட கலந்துரையாடலொன்று நிதி அமைச்சருடன் அடுத்த வாரம் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மனிதஉரிமை ஆணைக்குழுவினால் ரி. ஐ. டி. அதிகாரிகளுக்கு பொதுக்கட்டளை வெளியீடு

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுபவர்கள் விடயமாக பின்பற்றவேண்டிய நடைமுறைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, கைது செய்ய நியமிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு பொதுக் கட்டளைகளை வெளியிட்டுள்ளது.**

இப் பொதுக்கட்டளையானது இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட பொதுக்கட்டளையும் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் தராதரங்கள் பிணிப்பையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.


இந்த அறிவுறுத்தல் களின்படி கைது செய்யப்படும் ஒருவர் தொடர்பில் மனிதாபிமான நடவடிக்கைகள் பின்பற்றப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. அத்துடன் அவரின் மனித உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

முன்னைய அரசாங்க காலத்தில் இடம்பெற்ற கைதுகள் அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக சர்வதேசத்தில் இலங்கைக்கு பிரச்சினை ஏற்பட்டதை அடுத்தே இந்த புதிய அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஒருவரை கைதுசெய்பவர் தம்மை யார் என்பதை அடையாளப்படுத்த வேண்டும். கைதுசெய்யப்படுபவர் என்ன காரணத்துக்காக கைது செய்யப்படுகிறார் என்பது அவரின் குடும்பத்தினருக்கு தெரியப்படுத்தப்படவேண்டும்.

கைதுசெய்யப்படுபவர் தொடர்பில் உறுதிக்கடிதம் அவரின் மொழியில் வழங்கப்பட வேண்டும் போன்ற அறிவுறுத்தல்களை மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்துள்ளது. (இ-9)

## கொந்தளித்த விஜயகாந்த்



நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் தேமுதிக கட்சி தோல்வியடைந்ததற்கு நீங்கள் தான் காரணம் என கட்சி நிர்வாகிகள், தொண்டர்களிடம் விஜயகாந்த் கோபமாக கூறியுள்ளார். கட்சியை முன்னேற்றுவது குறித்து கட்சியின் மாவட்ட செயலர்கள் மற்றும் கட்சியின் மாநில, மாவட்ட முக்கிய நிர்வாகிகளிடம் விஜயகாந்த் பேசி வருகிறார்.

இந்த கூட்டத்தின் போது விஜயகாந்த் மாவட்ட செயலாளர்கள் ஒவ்வொருவரிடம்கேள்விகளை அடுக்கியுள்ளார்.

தோல்வி மன நிலையிலேயே நீங்கள் களத்தில் இருந்து பணியாற்றியது ஏன்? கட்சி தலைமை ஒரு முடிவெடுத்தால், அதை ஏற்க மறுப்பது போல நடப்பது சரியா? தேர்தலில் பணம் நிறைய விளையாடி உள்ளபோது, பணம் படைத்த நம் கட்சி வேட்பாளர்களும், பணத்தை செலவிட தயங்கியது ஏன்?

சில இடங்களில் கட்சி வேட்பாளர்கள் தி.மு.க - அ.தி.மு.க வேட்பாளர்களிடம் விலை போனது ஏன்?

பணத்துக்கு விலை போன தன் விளைவாகவே பல இடங்களிலும் நம் வேட்பாளர்களால், "டிபாசிட்" கூட பெற முடியாமல் போயுள்ளது.

இப்போதும் அ.தி.மு.க - தி.மு.க இரண்டு தரப்பிலும் ஆட்களை இழுக்க, பலமான முயற்சி நடக்கிறது. அதற்கு நம்ம ஆட்களும் உதவி புரிகின்றனர். அவர்கள் பற்றி அத்தனை விபரங்களும் என்னிடம் உள்ளன. கட்சிக்குள் நடைபெறும் உட்குத்தை எப்படி அனுமதிப்பது? என்று கோபப்பட்டுள்ளார். (இ-5)

## தேர் திடீரென கவிழ்ந்து விபத்து ஒருவர் மரணம்; 10பேர் காயம்!



(டில்லி)

புதுச்சேரி திரௌபதி அம்மன் கோயில் தேர் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியானார். 10 பேர் காயமடைந்தனர். அவர்களில் 5 பேரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

புதுச்சேரி கதிர்காமத்தில் திரௌபதி அம்மன் கோயில் தேர் திருவிழா நேற்று முன்தினம் காலை நடைபெற்றது. தேர் திடீரென கவிழ்ந்ததில் சரவணன் (வயது-45) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 10 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் புதுச்சேரி அரசு மருத்துவக் கல்லூரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (இ-5)

## மேற்கு வங்காளத்தில் திரிணாமுல் காங்கிரஸ் வெற்றிப் பேரணியில் குண்டு வீசித் தாக்குதல்

### 9 பேர் காயம்



மேற்கு வங்காளத்தில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் வெற்றி பேரணியில் வெடிகுண்டு வீசப்பட்டதில் 9 பேர் காயமடைந்துள்ளனர். மேற்கு வங்காளத்தில் நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்று மம்தா பானர்ஜி மீண்டும் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்த வெற்றியையடுத்து திரிணாமுல் காங்கிரஸ் கட்சியினர் வெற்றி பேரணியை நடத்தி வருகின்றனர்.அந்த வகையில், வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தின் கீபல்பூர் பகுதியில் நடத்தப்பட்ட பேரணியில், அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் சிலர் வெடிகுண்டு ஒன்றை கூட்டத்தை நோக்கி வீசி நேற்றுக்காலை தாக்குதல் நடத்தியுள்ளனர்.இதில் 9 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் பேரணியின் போது அருகில் நின்றுகொண்டிருந்த 6 பேர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. காயமடைந்தவர்களில் ஒரு குழந்தையும், கட்சி தொண்டர் ஒருவர் மட்டும் பஷீர்ஹாத் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மற்றவர்கள் அனைவரும் முதலுதவி சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பினர். பேரணியில் வெடிகுண்டு வீசிய மர்ம நபர்கள் குறித்து பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (இ-5)

## பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் இந்தியாவுடன் சீனா கைகோர்க்க ஆர்வம்

சர்வதேச அமைப்புகளில் பயங்கரவாதத்துக்கு எதிராக, இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவோம்" என, சீனா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, அண்மையில், சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது, இனிவரும் காலங்களில், ஐ.நா., போன்ற சர்வதேச அமைப்புகளில், பயங்கரவாதத்துக்கு எதிராக, இந்தியா எடுக்கும் நடவடிக்கைகளுக்கு, சீனா ஒத்துழைக்க வேண்டும் என, அந்நாட்டு ஜனாதிபதி ஜி ஜின்பிங்கிடம் கேட்டுக் கொண்டார்.

இதுகுறித்து, சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளதாவது,

பயங்கரவாதம் என்பது, சீனா, இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் பொதுவான எதிரி. அதற்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து, இரு நாடுகளும் பரஸ்பர பேச்சு வார்த்தையை அதிகரிக்க வேண்டும்.

ஐ.நா., சபை, பிரிக்ஸ் கூட்டமைப்பு போன்றவற்றில், பயங்கரவாதத்துக்கு எதிராக, இந்திய அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அந்த முயற்சிகளுக்கு வழங்கிவரும் ஆதரவை, இனிவரும் காலங்களில் சீனா அதிகரிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## உள்ளூராட்சி தேர்தலில் வன்முறை ;10 பேர் பலி!

பங்களாதேசத்திலுள்ள உள்ளூராட்சி அமைப்புகளுக்கு 5 ஆம் கட்டமாக நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலின் போது நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில், 2 வேட்பாளர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

பங்களாதேசத்தின் 45 மாவட்டங்களில் உள்ள 717 ஊராட்சி ஒன்றியங்களில், பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் மற்றும் முறைகேடு புகார்களுக்கு இடையே சனிக்கிழமை தேர்தல் நடைபெற்றது. காமில்லா, சிட்டகாங் ஆகிய மாவட்டங்களில் நிகழ்ந்த வன்முறைகளில் கமாலுதீன், யாசின் ஆகிய இரு வேட்பாளர்கள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.(இ-7)

# மத்திய தரைக்கடலில் அகதிகள் படகு விபத்து

## 45 பேர் உயிரிழப்பு

(ரோம்)

**போரால் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து ஐரோப்பாவில் புகலிடம் தேடி படகில் வந்து கொண்டிருந்த அகதிகள் படகு மத்திய தரைக் கடலில் மூழ்கியதில் 45 பேர் உயிரிழந்ததாக இத்தாலிய கடற்படை தெரிவித்துள்ளது.**





மத்தியதரைக் கடல் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை கவிழ்ந்து விபத்துக்குள்ளான படகிலிருந்து 135 அகதிகளை கடற்படைக் கப்பல் மீட்டது.

கடலில் மூழ்கி உயிரிழந்த 45 பேரது உடல்கள் மீட்கப்பட்டன.

அந்தப் பகுதியில் தொடர்ந்து தேடுதல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுதவிர, கடலில் சிக்கித் தவித்த 16 படகுகளில் இருந்து 1,900 பேரை கடந்த வெள்ளிக்கிழமை மீட்டோம்.

கடந்த நான்கு நாட்களில் மட்டும் லிபியக் கடலோரப் பகுதியிலிருந்து 10 ஆயிரம் அகதிகள் மீட்கப்பட்டனர் என்று இத்தாலிய கடற்படை தெரிவித்தது.

விபத்துக்குள்ளான படகில் 350 அகதிகள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த 3 நாட்களில் நிகழும் 3ஆவது படகு விபத்து இது என்பது குறிப்பிடத்தக்கது.

லிபியாவிலிருந்து சுமார் 650 பேருடன் ஐரோப்பாவை நோக்கிப் புறப்பட்ட அகதிகள் படகு கடந்த புதன்கிழமை கவிழ்ந்ததில் 100 பேர் கடலில் மூழ்கி உயிரிழந்தனர்.

சம்பவ இடத்துக்கு அருகே நின்று கொண்டிருந்த இத்தாலி கடற்படைக் கப்பலில் இருந்த வீரர்கள் 560 அகதிகளை மீட்டனர்.

அகதிகளை ஏற்றி வந்த மற்றொரு படகு கடந்த வியாழக்கிழமை கவிழ்ந்ததில் 30 பேர் வரை உயிரிழந்ததாக ஐரோப்பிய யூனியன் கடற்படை தெரிவித்துள்ளது. (இ-5)




# பாதுகாப்பு படையினரின் தாக்குதலில் சிக்கி போகோஹராம் தீவிரவாதிகள் 12 பேர் பலி

(நேமி)

நைஜீரியா நாட்டு எல்லை அருகே போஸோ நகரின் தென்கிழக்கில் நேற்று முன் தினம் போகோஹராம் என்ற தீவிரவாத குழுவை சேர்ந்த 12 போராளிகள் நைஜீரிய பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டனர்.



இந்த தாக்குதலில் பாதுகாப்பு படையின் 3 பேர் சிறிய அளவில் காயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களிடம் இருந்து இயந்திர துப்பாக்கிகள், ரொக்கெட் லோஞ்சர்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இது பற்றிபேசிய இராணுவ செய்தி தொடர்பு அதிகாரி லெட்ரூ, இராணுவ மற்றும் பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில் 12 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 12இற்கும் கூடுதலானோர் காயமடைந்துள்ளனர். அவர்களை தூக்கி கொண்டு தீவிரவாதிகள் தப்பியோடி விட்டனர் என வானொலியில் கூறினர். (இ-5)

# அமெரிக்காவில் அடைமழை



அமெரிக்காவின் டெக்சாஸ், கான்சாசில் கடந்த ஒரு வாரமாக கனமழை பெய்து வருகிறது. இதனால் இரண்டு பேர் பலியாகியுள்ளனர். 5 பேரை காணவில்லை என அதிகாரிகள் கூறியுள்ளனர். இன்னும் ஒரு வாரத்திற்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-5)

# வடகொரிய ஜனாதிபதியின் சித்தி நியூயோர்க்கில் வசித்து வருகிறார்

அமெரிக்காவுக்கு சவால் விடும் தலைவராக திகழ்ப வர், வடகொரியாவின் ஜனாதி பதி கிம் ஜாங் உன். ஆனால், அவருடைய சித்தியோ அமெரிக்காவின் நியூயோர்க் நக ரில வசித்து வருவதும், அங்கு சலவைக்கடை நடத்தி வருவதும் தற்போது தெரிய வந்துள்ளது.

மறைந்த வடகொரிய தலைவர் இரண்டாம் கிம் ஜாங் கின் மனைவியர்களில் கோ யோங் ஹுயியும் ஒருவர். இவருடைய தங்கை கோ யோங் சுக். தற்போதைய வடகொரிய தலைவரான கிம் ஜாங் உன்னின் சித்தி யான யோங் சுக், 3 குழந்தைகளுக்கு தாய் ஆவார்.

அவர் தற்போது நியூயோர்க்கில் கணவர் ரீ காங்குடன் புதிய பெயரில் வசித்து வருவதாக 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த பத்திரிகைக்கு யோங் சுக் அளித்த பேட்டியில், "எனது மகனும், கிம் ஜாங் உன்னும் ஒரே ஆண்டில் பிறந்தவர்கள். உன்னுக்கு கூடைப்பந்து விளையாட்டு என்றால் ரொம்ப விருப்பம். மைக்கேல் ஜோர்டான் பிடித்த வீரர். அவனது 8 ஆவது பிறந்தநாளில் நாட்டின தலைவருக்குரிய சீருடை யும், இராணுவ உயர் அதி காரி அணியும் உடையும் அவனுக்கு அணிவிக்கப் பட்டது.

இதனால் அப்போதே (1992) எதிர்காலத்தில் நாட்டின் தலைவர் ஆவோம் என்பது அவனுக்கு தெரியும்" என்றார். யோங் சுக் குடும்பம் தற்போதும் அமெரிக்க புலனாய்வு துறையின் கண்காணிப்பு வளையத்தில்தான் உள்ளது. (இ-5)

# அணுசக்தி நாடுகள் பட்டியலில் இந்தியாவும் இணைய எதிர்ப்பு

## பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கண்டிப்பு

அணுசக்தி நாடுகள் பட்டியலில் இந்தியாவை சேர்ப்பதற்கு பாகிஸ்தான் தெரிவித்த எதிர்ப்பை அமெரிக்கா கண்டித்துள்ளது.

**இந்தியா முயற்சி**

அணுசக்தி வளத்தை கொண்டுள்ள நாடுகள் 'என்.எஸ்.ஜி' நாடுகள் என்று அழைக்கபபடுகின்றன. இவை உலக நாடுகளுக்கு அணுமூலப் பொருட்களை விநியோகம் செய்தும் வருகின்றன.

இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா உட்பட 48 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த அமைப்பில் உறுப்பினர் ஆவதற்கு இந்தியா முயற்சித்து வருகிறது.

இதற்கு அமெரிக்கா, இங்கிலாந்து உட்பட பல நாடுகள் ஆதரவு தெரிவித்து உள்ளன. ஆனால் பாகிஸ்தான் மட்டும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

**அமெரிக்கா கண்டிப்பு**

வோஷிங்டன் நகரில் அமெரிக்க வெளியுறவு துணை செய்தி தொடர் பாளர் மார்க் டோனர் நேற்று முன் தினம் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, அணுசக்தி நாடு கள் வரிசையில் சேர இந்தியா விண்ணப்பித்து இருக்கிறதே, இது இந்த பிராந்தியத்தில் அணு ஆயுத போட்டியை ஏற்படுத்தாதா? என்று நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதில் அளித்த மார்க் டோனர், "இது ஆயுத போட்டி தொடர்பான விடயம் அல்ல. அதேபோல் அணு ஆயுத போட்டியும் கிடையாது. இது முழுக்க முழுக்க அணுசக்தியை பொதுப் பயன்பாட்டுக்கு அமைதியான முறையில் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியது.

இதை பாகிஸ்தான் புரிந்து கொள்ளும் என்று நிச்சயமாக நாங்கள் நம்புகிறோம்" என்று கண்டிப்புடன் கூறினார்

என்.எஸ்.ஜி.யின் 48 நாடுகள் கூட்டத்தில் இதுபற்றி முடிவு எட்டப்படுமா? என்ற இன்னொரு கேள்விக்கு பதிலளித்த அவர்,

2015 ஆம் ஆண்டு இந்தியாவில்பயணம்செய்த ஒபாமா இந்த விடயத்தில் அமெரிக்காவின் கருத்தை உறுதியாக தெரிவித்து இருந்தார். அதில் ஏவுகணை தொழில்நுட்ப கட்டுப்பாட்டு நிர்வாகம் தொடர்பான தேவைகளை இந்தியா பூர்த்தி செய்து இருக்கிறது என்றும், இந்தியா என்.எஸ்.ஜி. நாடுகள் வரிசைக்கு தயாராக இருக்கிறது எனவும் கூறியிருந்தார்.

அணுசக்தி நாடுகள் என்பது ஒரு மனதாக முடிவை எடுக்கும் அமைப்பைக்கொண்டது. எனவே, பொறுத்திருப்போம். இதில் எப்படி வாக்கெடுப்பு இருக்கும் என்பதையும் பார்க்க வேண்டும். புதிய உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என்பது சிநதித்து முடிவு செய்ய வேணடிய விடயம். தவிர, இது தற்போது உறுப்பினர்களாகவுள்ள நாடுகளின் உள்விவகாரம் இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-5)



# சிறுவர் அரங்கம்

1447

## கண்ணாடிப்புலி

ராம்லால் முகம் பார்க்கும் கண்ணாடிகளை விற்பனை செய் பவன். அவனுக்கு சொந்தமாகக் கடை இல்லை. பெரிய கண்ணாடிக் கடைகளிலிருந்து வாங்கி வந்து கிராமங்களில் விற்பான்.

ஒருமுறை அவன், காட்டு வழியாக ஒரு கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தான். அந்தக் காட் டில் 18 புலிகள் நடமாடுவதாகப் பேச்சு உண்டு. காட்டில் சற்று தூரம் வந்ததும் புலியின் உறுமல் சத்தம் கேட்டது.

ராம்லால் திடுக்கிட்டு, சத்தம் வந்த திசையைக் கவனித்தான். சற்றுத்தொலைவில் ஓர் அடர்ந்த புதர். அதன் நடுவில் ஒரு புலி. அதன் கண்கள் தகதக எனச் சிவந்து மின்னின. வேட்டைக் காரர்கள் அதற்குக் கொள்ளிக்கண் என்று பெயர் வைத்திருந்தனர்.

கொள்ளிக்கண் புலி, ராம்லால மீது பாயத் தயாரானது. ராம்லால் மூளை சுறுசுறுப்பானது. அவன் ஜோல்னாப் பையில் இருந்த கணணாடிகளில் மிகப் பெரிய கண்ணாடியை எடுத்துப் புலியை நோக்கி நீட்டினான். "வாடா கொள்ளி! உன்னை மாதிரியே ஒரு புலியைப் பிடிச்சு இதில் அடைச்சு இருக்கேன். உன்னையும் பிடிச்சு சர்க்கஸ்காரனுக்கு வித்திடுறேன்" என்று கூச்சலிட்டான்.

கண்ணாடியில் உள்ள புலியைக் கொள்ளிக்கண் கவனித்தது. மனிதர்கள், புலிகளைப் பிடிப்பதைக் கொள்ளிக்கண் பார்த்து இருக்கிறது. 'இவனும் புலி பிடிக்கிறவன்' என்று நினைத்து, வாலைச் சுருட்டிக் கொண்டு ஓட்டம் பிடித்தது.

அது மற்ற புலிகளையும் சந்தித்து, புலி பிடிப்பவன் வந்துள்ளதாக எச்சரித்தது. அவனிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தப் புலிகள் திட்டமிட்டன.

அன்று இரவு. காட்டு விலங்குகளுக்காக அஞ்சி ராம்லால் ஓர் ஆலமரத்தில் ஏறி, ஒரு பெரிய கிளையில் சாய்ந்து கொண்டான். திடீரென்று பல இடிகள் இடிப்பது போல் கீழே சப்தம் கேட்டது.

ராம்லால் இலைகளை விலக்கிக் கீழே பார்த்தான். அவனுக்கு மூச்சு நின்றுவிடும் போல் தோன்றியது. கீழே வட்ட வரிசையாகப் புலிகள். அந்த மரத்தின் கீழ்தான் புலிகளின் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. மங்கிய நிலவு ஒளியில் ராம்லால் அவற்றை எண்ணிப் பார்த்தான். 18 புலிகள் உறுமியபடியும், முகத்தைத் தேய்த்தபடியும், வாலைச் சுழற்றியபடியும் சுற்றிச் சுற்றி வந்தன.



கொள்ளிக்கண் அன்று பகல் தனக்கு ஏற்பட்ட பயங்கரமான அனுபவத்தை நடுக்கத்துடன் விவரித்தது. "நான் அவனிடமிருந்து தப்பியது மகா அதிசயம்" என்றது.

அதைக் கேட்டு மற்ற புலிகள் உடலைச் சிலுப்பிக்கொண்டன. கூட்டத்திற்குத் தலைமை வகித்த கிழட்டுப் புலி 'நீ பார்த்த புலி உன்னைப் பார்த்து உறுமியதா?' என்று கேட்டது.

(தொடரும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

◆ 1431 - நூறாண்டுகள் போர்: பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் ரோவென் என்ற இடத்தில் ஆங்கிலேயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நீதிமன்றத்தினால் உயிருடன் தீ வைக்கப்பட்டு மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டாள்.

◆ 1539 - தங்கம் கண்டுபிடிக்கும் நோக்கில் ஹெர்னாண்டோ டி சோட்டோ 600 படையினருடன் புளோரிடாவை அடைந்தான்.

◆ 1588 - 30,000 பேர்களுடன் ஸ்பானிய ஆர்மாடா என்ற 130 ஸ்பானியப் போர்க் கப்பல்களின் கடைசிக் கப்பல் ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனில் இருந்து புறப்பட்டது.

◆ 1635 - முப்பதாண்டுப் போர்: பிராக் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது.

◆ 1815 - இலங்கையிலிருந்து காயப்பட்ட போர் வீரர்களை ஏற்றி வந்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆர்னிஸ்டன் என்ற கப்பல் தென்னாபிரிக்காவுக்கு அருகில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 378 பேரில் 372 பேர் கொல்லப்பட்டனர்.

◆ 1845 - திரினிடாட் டொபாகோவுக்கு முதல் தொகுதி இந்தியர்கள் வந்திறங்கினர்.

◆ 1883 - நியூயோர்க் நகரில் புரூக்ளின் பாலம் இடிந்து விழப்போவதாக எழுந்த வதந்தியை அடுத்து இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 12 பேர் இறந்தனர்.

◆ 1913 - முதலாம் பால்க்கன் போர்: லண்டன் உடன்பாடு, 1913 எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது. அல்பேனியா தனி நாடாகியது.

◆ 1942 - இரண்டாம் உலகப் போர்: 1000 பிரித்தானிய போர் விமானங்கள் ஜெர்மனியின் கொலோன் நகரில் 90-நிமிடங்கள் குண்டுமாரி பொழிந்தன.

◆ 1966 - முன்னாள் கொங்கோ பிரதமர் எவரீஸ்டே கிம்பா மற்றும் பல அரசியல் தலைவர்கள் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டார்கள்.

◆ 1971 - செவ்வாய்க் கோளின் 70 விழுக்காட்டைப் படம் பிடிப்பதற்காகவும் அதன் வளிமண்டலத்தை ஆராயவும் என மரைனர் 9 விண்ணுக்கு ஏவப்பட்டது.

◆ 1972 - இஸ்ரேலின் விமானநிலையத்தில் ஜப்பானிய செம்படையினர் தாக்குதல் மேற்கொண்டதில் 24 பேர் கொல்லப்பட்டனர்.

◆ 1981 - வங்காள தேசத்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது அதிபர் சியாவுர் ரகுமான் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

◆ 1987 - கோவா தனி மாநிலமாகியது.

◆ 1998 - வடக்கு ஆப்கானிஸ்தானில் 6.6 றிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 5,000 பேர் வரை கொல்லப்பட்டனர்.

◆ 2003 - எயார் பிரான்சின் கொன்கோர்ட் விமானம் தனது கடைசிப் பயணத்தை ஆரம்பித்தது.

### பிறப்புகள்

◆ 1899 - மணிக்கொடி சீனிவாசன், தமிழ், ஆங்கிலப் பத்திரிகையாளர். (இ. 1975)

◆ 1931 - **சுந்தர ராமசாமி, நவீன தமிழ் இலக்கியத்தின் எழுத்தாளர். (இ.2005)**

◆ 1934 - அலெக்சி லியோனொவ், சோவியத்ஃ ரஷ்யாவின் விண்வெளி வீரர்.

### இறப்புகள்

◆ 1431 - ஜோன் ஆஃப் ஆர்க், பிரெஞ்சு வீராங்கனை. (பி. 1412)

◆ 1960 - போரிஸ் பாஸ்ரர்நாக், ரஷ்ய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர. (பி. 1890)

◆ 1973 - மோகன் குமாரமங்கலம், இந்திய அரசியல்வாதி. (பி.1916)

◆ 1981 - சியாவுர் ரகுமான், வங்காள தேச ஜனாதிபதி. (பி. 1936)

### சிறப்பு நாள

◆ திரினிடாட் டொபாகோ - இந்தியர்களின் வருகை நாள். (1845)

### சுந்தர ராமசாமி

**நவீன தமிழ் இலக்கியத்தின் எழுத்தாளர்.**

சுந்தர ராமசாமி, நவீனத் தமிழ் இலக்கியத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் ஒரு நாவலாசிரியர், சிறுகதை எழுத்தாளர், கவிஞர் எனப் பல இலக்கியவினங்களில் ஆளுமை பெற்றிருந்தார். பசுவய்யா என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியவர். நவீனத் தமிழ் இலக்கியத்தில், தமிழ் மொழியினை பல்வேறு தளங்களுக்குக் கொண்டு சென்றார். மார்க்சியக் கண்ணோட்டத்தில் தொடங்கிய இவர் எழுத்துக்கள் இறுதியாக பட்டறிவுத் திறனாய்வு சார்ந்த உய்யநிலை நடப்பியல் (Empiricist Critical Realism) நோக்கில் கால்கொண்டன எனலாம். இடைபட்ட காலத்தில் புத்தியலின் (Modernism) பலவெளிகளை படைத்தாலும் அவ்வப்போது வியன்புனைவிலும் திளைத்துள்ளார். இவர், நாகர்கோவில் அருகே உள்ளே தழுவிய மகாதேவர் கோவில் என்ற கிராமத்தில் பிறந்தார். தன் இளைய பருவத்தில், தொ.மு.சி. ரகுநாதனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தொ.மு.சி-யினால் மார்க்ஸிய தத்துவங்களிலும் ஈர்க்கப்பட்டவராகவும் இருந்தார். பிறகு தொ.மு.சி ஆசிரியராக இருந்த சாந்தி என்ற இதழில் எழுதத் தொடங்கினார்.1953 ஆம் ஆண்டு 'சாந்தி' பத்திரிக்கையில் இவர் எழுதிய 'தண்ணீர்' கதைக்கு முதல் பரிசு கிடைத்தது. இவர் சமூக சீர்திருத்தவாதிகளான காந்தி, பெரியார் ஈவெரா, அரவிந்தர், இராமகிருஷ்ண பரம அம்சர், இராம் மனோகர் லோகியா, ஜேசி குமரப்பா, ஜே கிருஷ்ணமூர்த்தி, தமிழ் இலக்கியத்தில் புத்துணர் திறனைப் புகுத்திய புதுமைப்பித்தன் எனப் பலரது நூல்களின் தாக்கத்துக்கு ஆட்பட்டுள்ளார். மேலும் மலையாள இலக்கியச் சுடரான எம். கோவிந்தனை 1957இல் தொடர்பு கொண்டு தொடர்ந்து அவரது நண்பராக கடைசிவரை விளங்கியுள்ளார்.. 1950களில் பொதுவுடைமைத் தோழரான ப. ஜீவானந்தம் அவர்களைச் சந்தித்துள்ளார். அதனால் இவருக்கு மார்க்சியத் தத்துவத் தாக்கம் ஏற்பட்டது. தொ.மு.சி. ரகுநாதன் ஆசிரியராகவிருந்து வெளியிட்ட சாந்தி இதழில் அவரது இலக்கியத் தொடர்பு உருவானது. மேலும் அவர் சரஸ்வதி இதழில் ஆசிரியக் குழு உறுப்பினராகியதும் எழுத்தாளராக வளர உதவியது.

# நாங்கள் சுயாட்சிக்கு எதிரானவர்கள் அல்லர்

## மகிந்தவும் ஆதரவு-வாசு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்குவதை நாங்கள் ஒருபோதும் எதிர்க்கப் போவதில்லை. இதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் நிச்சயமாக ஆதரவு தெரிவிப்பார் என ஜனநாயக இடதுசாரிகள் முன்னணியின் தலைவரும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

சுயாட்சிக்கு வாசுதேவ நாணயக்கார ஆதரவு தெரிவித்திருப்பது தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

"கடந்த 2013 ஆம்ஆண்டு அனைவரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தியிருந்தார்.





தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையின் ஆட்சியைக் கைப்பற்றும் என்று தெரிந்து கொண்டுதான் அவர் தேர்தலை நடத்தினார்.

மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கு எதிரானவன் நானல்லன். முன்னாள் ஜனாதிபதியும் எதிரானவர் அல்லர். நாட்டில் உள்ள அனைத்து மாகாணங்களுக்கும் சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

ஒற்றையாட்சி அரசமைப்பில் மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்க முடியும். அவ்வாறு கொண்டுவரப்படும் அரசமைப்புக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் ஆதரவு தெரிவிப்பார்.

மாகாணங்களுக்கு பொலிஸ் காணி, நிதி அதிகாரங்கள் வழங்கப்பட்டு அதனை மீளப் பெறமுடியாதவாறு அரசமைப்பு உருவாக்கப்படுமாயின் சமஷ்டி தொடர்பான கோஷங்கள் மறைந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் அரசாங்கம்

## டளஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறுவதாக டளஸ் அழகப்பெரும குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் அனர்த்த நிவாரண கலந்துரையாடல் ஒன்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றிருந்தது.

இக்கலந்துரையாடலில் சமுகமளித்திருந்த விமல் வீரவன்சவிடம் அவருக்கான நினைவூட்டல் கடிதமொன்றைக் கையளிக்க இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் அதிகாரியொருவர் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருந்தார்.

இதுகுறித்து கலந்துரையாடலுக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபாலவிடம் விமல் வீரவன்ச மேற்கொண்ட முறையீட்டை அடுத்து குறித்த அதிகாரி திருப்பி அனுப்பப்பட்டிருந்தார்.



எனினும் குறித்த கலந்துரையாடலின் பின்னர் இது குறித்து மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அவருக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனியாக கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள டளஸ் அழகப்பெரும குறித்த சம்பவத்தின் மூலம் மைத்திரி தலைமையிலான அரசாங்கம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகளை மீறுவதாக குற்றம் சாட்டியிருந்தார்.

கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான வழக்குகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கத்தின் உயர்மட்டம் விடுத்துள்ள உத்தரவுக்கு அமைவாகவே குறித்த அதிகாரிகள் அவ்வாறு நடந்து கொள்வதாகவும் கூட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேலும் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-5)

# அச்சுறுத்தல்களுக்கு பயந்து மகிந்த ஆதரவு நிலைப்பாட்டை ஒருபோதும் கைவிடமாட்டேன்

## முருத்தெட்டுவே ஆனந்ததேரர் கூறுகிறார்

அச்சுறுத்தல்களுக்குப் பயந்து மகிந்தவுக்கு ஆதரவான தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளப்போவதில்லை என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

பெவிதி ஹண்ட அமைப்பின் தலைவரும், அரச தாதியர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளருமான முருத்தெட்டுவே ஆனந்த தேரருக்கு அண்மைக்காலமாக மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஞாயிறு வார இதழ் ஒன்றுக்கு அவர் நேர்காணல் ஒன்றை அளித்துள்ளார். அதில் தொடர்ந்தும் குறிப்பிட்டுள்ளதாவது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவான செயற்பாடுகள் மற்றும் அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்த மேற்கொள்ளும் செயற்பாடுகள் காரணமாகவே எனக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றது.

தொலைபேசி வழியாக நான்கைந்து தடவைகள் மற்றும் அநாமதேய கடிதங்கள் வாயிலாகவும் குறித்த அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது. எனினும் இதற்கெல்லாம் நான் அஞ்சப் போவதில்லை.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவின் ஆட்சிக்காலத்தில் இதனை விட பாரிய அச்சுறுத்தல் களை எதிர்கொண்ட அனுபவம் எனக்குண்டு. எனவே இதையெல்லாம் காற்றில் அள்ளுண்டு போகும் தூசுக ளாகவே நான் பார்க்கின்றேன்.

எனவே எந்தவொரு கட்டத்திலும் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான நிலைப்பாட்டையோ, அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்தும் செயற்பாடுகளையோ இடைநிறுத்த மாட்டேன் என்றும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் நடவடிக்கை ஒருங்கிணைப்பு மையமாக செயற்படும் நாரஹேஹன்பிட்டி அபயாராம விகாரையின் விகாராதிபதி ஆனந்த தேரர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவு தான்

நாம் நன்மைக்காக ஒன்று செய்திருப்போம். அதில் சில குறைகள் ஏற்பட்டருக்கலாம். நாம் எதிர்பாராத வகையில் கெடுதல் கூட விளைந்திருக்கலாம். அல்லது நல்ல வேளையாக நாம் நினைத்தபடி நன்மையில் முடிந்திருக்கலாம்.ஆனால் அதை விமர்சனம் செய்பவர்கள் நம் செயலைப் பெரிதும் குறைகூறக் கூடும். சிறு குறைகளை பூதக் கண்ணாடி கொண்டு பார்க்கக் கூடும். கெடுதல் விளைந்து விட்டாலோ அவர்களது விமர்சனத்தைக் காது கொடுத்துக் கேட்க முடியாது.

இத்தகைய சூழ்நிலைகளில் நம் மனம் என்ன பாடுபடும் என்பதை அவர்கள் உணரத் தயாரில்லை.

ஆனால் நம்மை நாம் சமாதானம் செய்து கொள்ளவேண்டுமே!

அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவு தான்!

இதை ஒருமுறை மனதாரச் சொல்லி விட்டு அடுத்த வேலையைக் கவனிக்க வேண்டியது தான்.

ஒரு தலைப்பின் கீழ் போதுமான அறிவின்றி எதிராளிகள் உளறுகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். தொடர்ந்து அவர்கள் உண்மை தெரியாமலும் போதுமான தர்க்கமில்லாமலும் பேசுவார்களேயானால் அவர்கள் உளறலைச் சரி செய்யவும் உண்மையைத் தெரியப்படுத்தவும் தர்க்கத்தை உணர்த்தவும் முயன்று பாருங்கள்.அதற்குப் பிறகும் அதே நிலை தொடர்ந்தால் அதற்காக நீங்கள் வருத்தப்படவோ கோபப்படவோ வேண்டாம்.

மாறாக,

அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவு தான் என்று விட்டுவிடுங்கள்.

எல்லோருமே நம்மிடம் பெருந்தன்மையுடன் நடந்து கொள்வார்கள் என்பதாக நாம் எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமல்ல. நாம் அவர்களைப் பொறுத்தவரை பெருந்தன்மையாக நடந்து கொண்ட பிறகு அவர்கள் நம்மிடம் சிறு பிள்ளைத் தனமாக நடந்து கொள்வார்களேயானால் அதை எண்ணிக் கூட நாம் அதிர்ச்சியோ வியப்போ அடைவதற்கில்லை.

காரணம், அவர்களது பார்வைகள் மிகக் குறுகியதாக இருக்கலாம்.

நம்மிடமே இப்படி நடந்து கொண்டு விட்டார்களே என்று எண்ணும் போது நம்முன் எழும் வேதனையை அடக்கிக் கொள்ள என்ன வழி?

அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவு தான் என்ற வாக்கியத்தை ஒரு முறைக்குப் பலமுறை சொல்லிப் பார்த்துக் கொள்ளுங்கள். நிச்சயம் உங்கள் மனம் ஆறுதல் அடைகிறதா இல்லையா என்று பாருங்கள்.

இப்படி ஒரு சமாதானத்தை தங்களுக்குள் சொல்லிக் கொண்டு மனத்தைத் தேற்றிக் கொள்ளாதவர்கள் மற்றவர்களின் குறைகளை உணர இயலாதவர்களாயும் மற்றவர்களை மன்னிக்க இயலாதவர்களாயும் ஆகி, ஏட்டிக்குப் போட்டியாக அவர்களுக்கு எதிரான செயல்களில் இறங்கி வினையைத் தேடிக் கொள்கிறார்கள்.

இந்த வாக்கியத்தின் அருமையை உணர்ந்தவர்களோ பொறுமையின் இலக்கணமாகத் திகழ்வதோடு புண்பட்ட தங்கள் மனதிற்கு,வேறு எவர் உதவியின்றியும் ஒத்தடம் கொடுத்துக் கொண்டவர்களாக ஆகிறார்கள்.

லேனா தமிழ்வாணன்

# இலங்கையின் மீறல்களை குழிதோண்டிப்புதைக்க முயன்றவரா அடுத்த ஐ.நா. பொதுச் செயலாளர்?

இலங்கையில் இடம் பெற்ற பாரிய இனப் படுகொலை தொடர்பாக ஐ.நா. வால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் கலந்து கொண்டமைக்குப் பழிதீர்க்கும் முகமாக, கிளார்க்கின் உயர் அதிகாரிகள் அவரைப் பதவியிலிருந்து விலக்கினார்கள்.

இவ்வாறு, The Journal ஊடகத்தில், Colum Lynch எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இத்னைப் புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பொறுப்பதிகாரியான ஹெலன் கிளார்க், ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்காகப் போட்டியிடும் வேட்பாளர்களில் முன்னிலை பெற்றுள்ள ஒருவராவார். அதிகாரம் மிக்க இந்தப் பெண்மணி உலகின் முன்னணி இராஜதந்திர அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையை திறம்பட நடத்திச் செல்வார் என்ற நம்பிக்கையை முதன் முதலாக அனைத்துலக மட்டத்தில் ஏற்படுத்தியுள்ளார்.

இவர் டிசம்பர் 1999 தொடக்கம் நவம்பர் 2008 வரை நியூசிலாந்து நாட்டின் பிரதமராகக் கடமையாற்றியிருந்தார். ஹெலன் கிளார்க் மிகச் சிறந்த ஒரு பெண்மணி என பொப் பாடகி லோர்ட் அறிவித்திருந்தார். இவரது ஆதரவாளர்கள் 'ஐ.நா. பொதுச்செயலராகப்போட்டியிடும் ஆன்ரி ஹெலன்' என்கின்ற வாசகம் தாங்கிய ரீ-சேட்டை தயாரித்துள்ளனர்.

ஆனால் ஐ.நா.வில் பணியாற்றும் ஹெலனின் சக அதிகாரிகள் பலர் இவருக்கு ஆதரவளிக்கவில்லை. ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் (யு.என்.டி.பி) பொறுப்பதிகாரியாக ஏழு ஆண்டுகளாகப் பணிபுரிந்துள்ள கிளார்க் தனது பதவிக் காலத்தில் தனது சக அதிகாரிகளின் வெறுப்பிற்கு ஆளாகும் விதமாக நடந்துள்ளார். இவர் இந்தப் பதவிக்கு வருவதன் மூலம் ஐ.நா. வால் முன்னெடுக்கப்படும் மனித உரிமைச் செயற்பாடுகள் குழப்பமடையும் என இவரது சக அதிகாரிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இலங்கையில் இடம் பெற்ற பாரிய இனப்படுகொலை தொடர்பாக ஐ.நா.வின் பொறுப்பு என்ன என்பது தொடர்பாக மிகக் கூர்மையாக விமர்சனம் செய்யப்பட்ட வேளையில், இது தொடர்பாக ஐ.நா.வால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் கலந்து கொண்டமைக்குப் பழிதர்க்கும் முகமாக இவரை உயர் அதிகாரிகள் அவரது பதவியிலிருந்து விலக்கினார்கள்.

பதவி விலக்கப்பட்ட ஐ.நா. நிகழ்ச்சித் திட்டப் பணியாளரை மீளவும் இணைத்துக் கொள்ளுமாறு பிரதி ஐ.நா. செயலாளர் நாயகம் மற்றும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் உயர் ஆலோசகரின் அலுவலகங்கள் கிளார்க்கின் நிறுவனத்திடம் கோரிக்கை விடுத்த போதிலும் அவை நிறைவேற்றப்படவில்லை.

குறித்த பணியாளர் பதவி நீக்கப்பட்டமையானது பழிதீர்ப்பதை நோக்காகக் கொண்டதல்ல எனவும் இந்த விடயத்தில் கிளார்க் எவ்வித பங்கும் வகிக்கவில்லை எனவும் ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது மறுத்தது. இந்த அமைப்பின் நியுயோர்க் தலைமையகத்தில் பணியாற்றிய 200 பணியாளர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். இதன்மூலம் நியூயோர்க் அலுவலகத்தின் உயர் முகாமைத்துவ அதிகாரிகளின் பதவி




களைக் குறைப்புச் செய்வதே நோக்காக இருந்தது. செப்டெம்பர் 2013 தொடக்கம் செப்டெம்பர் 2015 வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கிளார்க்கின் இத்தகைய நிர்வாக செயற்திறனானது ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு துணை போனதாக இவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் தனது பணியாளர்களை பலரை பணியிலிருந்து நீக்குவதற்கான தற்துணிவை கிளார்க் கொண்டிருந்தார் எனவும் இது அவரது தலைமைத்துவத்திற்கான ஒரு சாட்சியமாக விளங்குவதாகவும் இவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர். இவர் தனது அமைப்பின் நலன்களுக்காக உறுதியாகச் செயற்படும் ஒருவர் என இவரது விமர்சகர்கள் கூடச் சுட்டிக்காட்டிக்காட்டியுள்ளனர். 'ஐ.நா. இதுவரை காணாத மிகவும் கடும்போக்காகச் செயற்படுகின்ற அதிகாரிகளில் ஒருவராக கிளார்க் விளங்குகிறார்' என மூத்த இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஐ.நா. தனது பொறுப்பை ஆற்றத் தவறியிருந்ததைச் சுட்டிக்காட்டி அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்ட போது அதற்குத் துணை போனதாக குற்றம் சாட்டப்பட்டு லீனா சின்ஹா பதவி விலக்கப்பட்டார். இவர் ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் பணியாற்றிய ஒரு சுவீடன்-அமெரிக்க இரட்டைக் குடியுரிமை பெற்றவராவார்.

அனைத்துலக நாடுகளில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட அமைப்பானது மேலும் செயற்திறன் மிக்க பங்களிப்பை வழங்க வேண்டும் என்பது தொடர்பாக இந்த அமைப்பிற்குள் இடம்பெற்ற விவாதத்தின் போதே சின்ஹா பதவி விலக்கப்பட்ட விவகாரமும் முக்கியத்துவம் பெற்றது. அனைத்துலக நாடுகளில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் போது அவை பாரிய ளவில் இழப்புக்களை ஏற்படுத்துவதற்கு முன்னர் ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட அமைப்பானது உயிர்ப்பான பணியை ஆற்ற வேண்டும் என இதன் முகாமைத்துவ உயர் அதிகாரிகள், ஐ.நா. அதிகாரிகள், ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் மற்றும் மனித உரிமை அதிகாரிகள் நம்புகின்றனர்.

இலங்கையில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அறிக்கை தயாரிப்பதற்காக நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட உயர் மட்ட அதிகாரிகளின் முதன்மை அதிகாரியாக சின்ஹா கடமையாற்றினார்.

2009 இல் இடம் பெற்ற இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அதில் அகப்பட்டுத் தவித்த பல நூறாயிரக் கணக்கான தமிழ் மக்களைக் காப்பாற்றுவதில் ஐக்கிய நாடுகள் சபையால் இழைக்கப்பட்ட 'திட்டமிடப்பட்ட தவறு' இது தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட முன்னாள் ஐ.நா. அதிகாரியும் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் ஆலோசகருமான சாள்ஸ் பெற்றியால் தயாரிக்கப்பட்ட 'பெற்றி அறிக்கை' யில் சுட்டிக்காட்டப்பட்டது.

நியூயோர்க்கில் செயற்பட்ட மூத்த ஐ.நா. அதிகாரிகள் மற்றும் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் தலைமைக் குழுவானது இலங்கை அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட பாரியதொரு படுகொலைச் சம்பவத்தை வெளிக்கொண்டு வரத் தவறியதாக பெற்றி அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்டது. அதாவது பாரபட்சமற்ற வகையில் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சில் 70ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்பளிக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டுவதில் ஐ.நா. தலைமையக அதிகாரிகள் மற்றும் கொழும்பிலிருந்த இதன் பிரதிநிதிகள் தவறியுள்ளதாகவும் பெற்றி அறிக்கை விமர்சித்துள்ளது.

பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுக்க வேண்டிய பொறுப்பை இலங்கையில் செயற்பட்ட ஐ.நா. குழுவினர் கொண்டிருந்த போதும் இதனை அந்தக் குழு செய்யத் தவறிய அதேவேளையில், இவர்களின் பொறுப்பைச் சுட்டிக் காட்டி அவர்களின் தவறைத் திருத்துவதற்கான எவ்வித அறிவித்தலையும் ஐ.நா. மற்றும் அதன் தலைமையகம் செய்யத் தவறியதாகவும் பெற்றி அறிக்கை கோடிட்டுக் காண்பித்தது.

பெற்றி அறிக்கையானது ஐ.நா. செயலாளர் நாயகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என உலகெங்கும் உள்ள ஐ.நா. மனித உரிமைச் செயற்பாட்டாளர்களிடம் செயலாளர் நாயகம் பான் கீ மூனினால் அழுத்தம் கொடுக்கப்பட்டது. நவம்பர் 2013இல், பான் தனது 'மனித உரிமை மேம்படுத்தல் செயற்திட்டத்தை' ஆரம்பித்தார். மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் போது அதிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கான நடவடிக்கைகளை ஐ.நா. அமைப்புக்கள் முன்னெடுக்க வேண்டும் என இச் செயற்திட்டமானது அறிவுறுத்துகிறது.

இது பெரும்பாலான நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகளாகச் செயற்படும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட அதிகாரிகள் மத்தியில் பாரியதொரு அழுத்தத்தை உண்டு பண்ணியது. அடிப்படையில் அபிவிருத்திச் செயற்திட்டங்களுக்குப் பொறுப்பாகவுள்ள ஐ.நா. அதிகாரிகள் தமது பணி நாடுகளில்மனித உரிமை மேம்படுத்தலையும் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

## அசாதாரண காலநிலை

# சேதங்கள்

# ரூ.25 கோடி


## கொழும்புக்கே அதிக பாதிப்பு

(கொழும்பு)

**நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு என்பவற்றினால் 25 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.**

இதில் அதிகமான சேதங்கள் கொழும்பு மாவட்டத்துக்கே இடம்பெற்றுள்ளதாகவும், இதன் பெறுமான மதிப்பீடு 15 கோடி எனவும் நிலையம் கூறியுள்ளது.

இது சுமாரான மதிப்பீடு எனவும், சரியான இழப்புக்கள் குறித்து மதிப்பிட இன்னும் ஒரு மாதமாவது செல்லும் எனவும் அந்நிலையம் மேலும்குறிப்பிட்டுள்ளது.(இ-5)



## வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் இறைச்சி வகைகளுக்கு இனி வரிச்சலுகை

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இறைச்சி வகைகளுக்கு இனி வரிச் சலுகை வழங்கப்பட உள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல இறைச்சி வகைகளுக்கான வரிகளை குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் மிருக வதை மிருகக்கொலைகளை வரையறுக்கும் நோக்கில் இந்த வரிச் சலுகை வழங்கப்படவுள்ளது. சர்வதேச வர்த்தக விவகார அமைச்சின் பரிந்துரைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் இந்த வரிச் சலுகை பற்றி அறிவிக்கப்பட உள்ளது.

மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, செம்மறியாட்டு இறைச்சி மற்றும் வாத்து இறைச்சி போன்றன இறக்குமதி செய்யும் போது, அறவீடு செய்யப்படும் வரி 60 வீதத்தினால் குறைக்கப்பட உள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-5)

## மண்சரிவு அபாயம் நிலவும் பகுதிகளை நாளாந்தம் கண்காணிக்கும் ராணுவம்

மண்சரிவு அபாயம் நிலவும் பகுதிகளில் நாளாந்தம் இராணுவத்தினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மண்சரிவு ஏற்படக் கூடுமென தேசிய கட்டட ஆய்வு நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ள ஆறு மாவட்டங்களிலும், மண்சரிவு ஏற்படக் கூடிய பகுதிகளில் நாளாந்தம் இராணுவத்தினர் கண்காணிப்பு மேற்கொள்ள உள்ளனர்.

குறித்த பகுதிகளை அதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கவும் தேவையான சந்தர்ப்பத்தில் குடியிருப்பாளர்களை வெளியேற்றவும் நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மண்சரிவு அபாயம் ஏற்படக்கூடிய பகுதிகளில் இராணுவ கண்காணிப்பு ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இவ்வாறு கண்காணிப்பு மேற்கொள்வதன் மூலம் அபாயங்களை கண்டறிந்து அனர்த்தங்களால் ஏற்படக் கூடிய இழப்புக்களை வரையறுக்க முடியும் என ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.(இ-5)

## இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இலவச மின்சார இணைப்பு


இலங்கை மின்சார சபையும் தனிநபர் மின் உற்பத்தியாளர்களும் இணைந்து 10 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்க தீர்மானித்துள்ளனர்.

மின்வலு மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பணிப்பின் பேரில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ள வீடுகளின் சேதங்கள் தொடர்பாக கணிப்பீடுகள் நடைபெற்று வருவதுடன் மின்சார இணைப்புக்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதற்கு இலங்கை தனியார் மின் உற்பத்தியாளர் நிறுவனம் 7 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.


வெள்ளம்காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு சுமையும் வழங்காமல் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென அமைச்சரின் வழிகாட்டலில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 735

அச்சு




சங்கர்



கெனி




றொகான்

நியாயமாக பேசத் தெரியாதவரிடம் வாக்குவாதம் செய்வது நம் கன்னத்தில இருக்குற கொசுவை நாமே அடிக்கிற மாதிரி... கொசு பறந்திருக்கும் ஆனா கன்னம்தான் வீங்கி இருக்கும்!

சந்திரன் சிந்து




செரோன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

170

## முதலமைச்சர் ஆனார் எம்.ஜி.ஆர்.

## கடைசிப்படம் மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன்

...நவரத்தினம் என்ற கதையை உருவாக்கினார். ஏ.பி.நாகராஜன் , 9 பெண்களை எம்.ஜி.ஆர் சந்திப்பது போன்ற கதை.

எம்.ஜி.ஆருடன் லாத கதாநாயகியாக நடித்தார். குன்னக்குடி வைத்தியநாதன் இசை அமைத்தார்.

எம்.ஜி.ஆருக்கு ஏற்றபடி இருக்க வேண்டும் என்று ஏ.பி.நாகராஜன் மிக சிரமப்பட்டு கதையை உருவாக்கினார் என்றாலும் அது எம்.ஜி.ஆர். ரசிகர்களை திருப்தி படுத்தவில்லை. எனவே எதிர்பார்த்த அளவுக்கு படம் பெரிய அளவில் ஓடவில்லை. இன்று போல் என்றும் வாழ்க, மீனவ நண்பன் ஆகிய படங்களும் 1977 இல் வெளிவந்தன.

**மதுரையை மீட்ட கந்தரபாண்டியன்**

அகிலன் எழுதிய கயல் விழி என்ற வரலாற்று நாவலை பிரமாண்டமான படமாக சோளீஸ்வரர் கம்பைன்ஸ் நிறுவனம் தயாரித்தது. இதில் எம்.ஜி. ஆருடன் லதா பத்மபிரியா ஆகியோர் நடித்தனர்.

படத்தை ப.நீலகண்டன் டைரக்டர் செய்தார்.

படம் கிட்டதட்ட முடிந்து விட்டது. சில காட்சிகள் மட்டும் தான் பாக்கி.

இந்நிலையில் 1977 ஜூன் மாதத்தில் தமிழக சட்டசபை தேர்தல் நடந்தது. அதில் அ.இ.அ.தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. முதலமைச்சராக எம்.ஜி.ஆரை கட்சி எம்.எல்.எ.க்கள் தேர்ந்தெடுத்தனர்.

மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் படத்தில் மீதியிருந்த காட்சிகளை இரவு -பகலாக நடித்துக் கொடுத்து விட்டு 30.06.1977 இல் முதல் அ்மைச்சராக பதவி ஏற்றார் எம்.ஜி.ஆர்.

அவர் முதலமைச்சராகி 6 மாதங்களுக்குப் பின் 1978 பொங்கல் தினத்தன்று மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் வெளிவந்தது. இது நூறு நாட்கள் படமாக அமைந்தது.

**136 படங்கள்**

மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் தான் எம்.ஜி.ஆர். நடித்த கடைசி படம். முதலமைச்சரான பிறகு அவர் படங்களில் நடிக்கவில்லை. (தமிழக முதல் அமைச்சராக 30.06.1977) இல் பதவி ஏற்ற எம்.ஜி.ஆர். 10 ஆண்டுகள் பதவி வகித்தார். 24.12.1987 இல் காலமானார்)

எம்.ஜி.ஆரின் முதல் படமான சதி லீலாவதி 28.03.1936 இல் வெளிவந்தது. கடைசி படமான மதுரையை மீட்ட சுந்நரபாண்டியன் 14.1.1978 இல் வெளிவந்தது. இந்த 42 வருட காலத்தில் அவர் நடித்த மொத்த படங்கள் 136.



**அதிக படத்தில் ஜோடி**

எம்.ஜி.ஆருடன் அதிக படங்களில் இணைந்து நடித்தார் ஜெயலலிதா. அவர் 28 படங்களில் நடித்தார்.

அதிக படங்களில் அவருடன் நடித்த மற்ற நடிகைகள்.

சரோஜாதேவி 26, லதா 13, பானுமதி 10, பத்மினி 8, கே.ஆர்.விஜயா 8, டி.ஆர். ராஜகுமாரி 8, அஞ்சலிதேவி 5, மஞ்சுளா 5.

அதிக படங்களை டைரக்ட் செய்தவர்கள்,

ப.நீலகண்டன் 17, எம்.ஏ. திருமுகம் 16, டி.ஆர்.ராமண்ணா 8, கே.சங்கர் 8.

கிருஷ்ணன், பஞ்சு, ஏ.காசிலிங்கம், டி.ஆர்.ரகுநாத், பி.ஆர்.பந்துலு, சாணக்யா, எம்.கிருஷ்ணன் தலா 4 படங்களை டைரக்ட் செய்தனர்.

**வில்லன்கள்**

எம்.ஜி.ஆருடன் அதிக படத்தில் நடித்த நடிகர்கள், வில்லன்கள்,

எம்.என்.நம்பியார் 63, அசோகன் 57, பி.எஸ்.வீரப்பா 23, ஆர்.எஸ்.மனோகர் 23, 'எம்,ஆர்.ராதா 20, நாகேஷ் 42, தேங்காய் சீனிவாசன் 26.

**கதை-வசனம்**

அதிக படங்களுக்கு கதை -வசனம் எழுதியவர்கள்,

சொர்ணம் 16, ஆர்.கே. சண்முகம் 15, ஆரூர்தாஸ் 14, மு.கருணாநிதி 10, கண்ணதாசன் 7, சக்தி கிருஷ்ணசாமி 6, ஸ்ரீதர் 3.

**கே.பாக்யராஜ்**

என்னுடைய கலை வாரிசு என்று எம்.ஜி.ஆரால் அடையாளம் காட்டப்பட்டவர் கே.பாக்யராஜ்.

எம்.ஜி.ஆர்.நடித்து பூர்த்தியாகாமல் இருந்த ஒரு படத்தின் காட்சிகளை ஒருங்கிணைத்து தன்னுடைய அவசர போலீஸ் 100 என்ற படத்தில் பொருத்தமாக சேர்த்து திரையிட்டார் கே.பாக்யராஜ். எம்.ஜி.ஆர். மறைவுக்குப்பின் இப்படம் வெளிவந்தது.

(தொடரும்)

# இலங்கையின் மீறல்களைக்...

(16 ஆம் பக்க கட்டுரையின் தொடர்ச்சி...)

இது அவர்கள் பணி செய்த நாடுகளின் அரசாங்கங்களுடன் முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் ஆபத்தையும் உண்டுபண்ணியது.

ஏனெனில் பெரும்பாலான நாடுகள் தமது நாட்டின் மனித உரிமை மேம்படுத்துவது தொடர்பில் வெளித்தரப்பு தலையீடு செய்வதை தமது நாட்டின் இறையாண்மைக்கான ஒரு சவாலாகவே நோக்குகின்றனர். இதனால் இவ்வாறான நாடுகளின அரசாங்கங்கள் ஐ.நா. அபிவிருத்தி செயற்திட்ட அதிகாரிகளின் புதிய பணியை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. இது ஐ.நா. அபிவிருத்தி மற்றும் மனித உரிமைச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தடையாக காணப்பட்டது.

பெற்றியின் அறிகை வெளியிடப்பட்ட பின்னர், இலங்கையில் செயற்பட்ட ஐ.நா. அபிவிருத்திச் செயற்திட்ட அதிகாரிகள் அங்கு இடம பெற்ற மீறலகள் தொடர்பில் பொறுபபுக்கூற வேணடிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதன் தலைமையானது தனது விரிவான செயற்திட்டத்தை முன்னெடுப்பதற்கும் அச் சுறுத்தலைத் தோற்று வித்தது.

'பெற்றி அறிக்கையை யு.என்.டி.பி. மற்றும் ஹெலன் கிளார்க் ஆகியோர் தனிப்பட்ட ரீதியாக தம்மீதான குற்றச்சாட்டாக நோக்கினர்' என ஐ.நா.வின் முன்னாள் செயலாளர் நாயகம் கோபி அனானின் மூத்த ஆலோசகராகக் கடமையாற்றிய எட்வேர்ட் மோற்றிமர் தெரிவித்தார். ஆனால் இந்த அறிக்கை பிழையானது என நீங்கள் கருதினாலும் கூட, அவர்களுக்குத் தொழிலை வழங்குவதில் பாரபட்சம் காண்பிப்பதில் எவ்வித காரணமும் இல்லை என மோற்றிமர் சுட்டிக் காட்டினார்.

ஐ.நா.வை விட்டு வெளியேறிய பின்னர் இலங்கையில் மனித உரிமைச் செயற்பாட்டாளராகச்செயறபட்ட மோற்றிமர் சின்ஹாவின் நட்பார்ந்த ஆலோசகராகவும் செயற்பட்டார். சின்ஹாவின் பிரச்சினையை பானின் பார்வைக்குக் கொண்டு செல்வதில் மோற்றிமர் செயற்பட்டுள்ளார்.

பெற்றியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த முக்கிய சில தீர்மானங்களை யு.என்.டி.பி. மறுத்தது. ஐ.நா. இலங்கையில் இடம் பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்களையும் தடுத்து நிறுத்துவதில் தவறிழைத்துள்ளது என்ற குற்றச்சாட்டை பெற்றி அறிக்கை மிக ஆழமாக ஆராயத் தவறியுள்ளதாகவும் யு.என்.டி.பி. சுட்டிக்காட்டியது. யு.என்.டி.பி. அல்லது ஐ.நா.வின் வேறு அமைப்புக்களுடன் ஆராய்ந்து அறிக்கையை வெளியிடுவதில் பெற்றியின் குழு தவறியுள்ளதாகவும் யு.என்.டி.பி. குற்றம் சுமததியுள்ளது. மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர் ஆணையகம் உட்பட ஐ.நா.வின் வெளிக்கள அமைப்புக்களின் பங்களிப்பைப் பலப்படுத்துவதற்கான பரிந்துரையை முன்வைப்பதில் பெற்றி தவறியுள்ளதாகவும் யு.என்.டி.பி. சுட்டிக் காட்டியுள்ளது.

'முழுமையான ஐ.நா. கட்டமைப்பிற்குள் நடவடிக்கைக் கண்காணிப்பு, இயலுமை, பரந்த அபிவிருத்தி, கோட்பாட்டு ஆணை மற்றும் வதிவிட ஒருங்கிணைப்பு முறைமையை முகாமைத்துவம் செய்வதற்கான நிதி வளங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ள ஒரேயொரு அமைப்பாக யு.என்.டி.பி.விளங்குகிறது' என நம்பகமான யு.என்.டி.பி. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளையில், பெற்றி அறிக்கையைத் தயார்ப்படுத்துவதில் யு.என்.டி.பி. தலைமையகத்தைச் சேர்ந்த அதிகாரியான சின்ஹா செயற்பட்டுள்ளார் என்ற தகவல் வெளியிடப்பட்டகையோடு சின்ஹா பதவி விலக்கப்பட்டார்.

இலங்கை தொடர்பான பெற்றி அறிக்கை வெளியிடப்பட்டு இரண்டு நாட்களின் பின்னர், இது தொடர்பாக யு.என்.டி.பி. தனது உயர் மட்டக் குழுவுடன் அவசர சந்திப்பை ஒன்றை மேற்கொண்டதாகவும் இதில் தனது பணி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகவும், இதன் பின்னர் தான் யு.என்.டி.பி. நிறுவனத்தில் ஒருபோதும் பணியாற்ற முடியாது எனவும் கூறப்பட்டதாகவும் யூலை 2015இல் யு.என்.டி.பி. மனித வள அதிகாரிக்கு அனுப்பிய மின்னஞ்சலில் சின்ஹா குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இவ்வாறானதொரு தீர்மானம் ஒரு போதும் எடுக்கப்படவில்லை என யு.என்.டி.பி.யின் ஊடகச் செயலர் கிறிஸ்ரினா லோநீக்ரோ தெரிவித்தார். புதிய செயற்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கான இயலுமையை சின்ஹா கொண்டிருக்காமையே அவரது பதவி விலக்கலுக்கான காரணம் என லோநீக்ரோ தெரிவித்தார்.

சின்ஹா யு.என்.டி.பி. அமைப்பில் 15 ஆண்டுகளாகப் பணியாற்றிய போதிலும் அவருக்கு புதியதொரு பணியை வழங்குவதற்கு உயர் அதிகாரிகள் மறுத்திருந்தனர். இவர் யு.என்.டி.பி.நிறுவனத்தின் பல வேலைவெற்றிடங்களுக்கு விண்ணப்பித்த போதிலும் இவர் எதிலும் தெரிவு செய்யப்படவில்லை. இவருக்கான கொடுப்பனவு செலுத்தப்படாததால் இவர அங்கிருந்து விலகவேண்டி நேரிட்டது.

இதேவேளையில், நியூயோர்க்கில் அமைந்துள்ள மனித உரிமைகள் அமைப்பான 'பாதுகாப்பதற்கான பொறுப்பைக் கொண்ட உலக மையம்' என்கின்ற நிறுவனத்தில் சின்ஹா தொண்டராகப் பணியாற்றத் தொடங்கினார். தன்னை மீண்டும் யு.என்.டி.பி. பணிக்கு அழைக்கும் என சின்ஹா நம்பினார். ஆனால் இது இடம்பெறவில்லை.

(தொடரும்

தொழில் ரகசியம்

# யார் சிறந்த தலைவர்?



1971ல் ஹகிம்பர்லி கிளார்க்' என்ற பேப்பர் கம்பனியின் தலைமை நிறைவேற்று அதிகாரி (சிஇஓ) ஆகிறார் 'டார்வின் ஸ்மித்'. இழுத்துக் கொண்டிருந்த கம்பனி. சேர்ந்த இரண்டாவது மாதம் அவருக்கு புற்றுநோய் இருப்பது தெரிகிறது. ஒரு வருடம் கூட தாங்க மாட்டார் என்கிறார் டாக்டர். இதை கம்பனிக்கு தெரிவித்துவிட்டு 'நான் இன்னமும் சாகவில்லை. கம்பனியில் நிறைய வேலை இருக்கிறது. முடிக்கும்வரை இறக்கும் உத்தேசமில்லை' என்று கூறி அயராது உழைக்கிறார் டார்வின்.

வாரம் முழுவதும் அலுவலகம், வார முடிவில் ரேடியேஷன் தெரபி என்ற வாழ்க்கை. ஒரு வருட கெடு பெற்றவர் இருபத்தி ஐந்து வருடங்கள் வாழ்ந்தார். தன் அபார உழைப்பால் மெலிந்த கம்பனியை நிமிர்த்தி சிறந்த கம்பனிகள் வரிசையில் சேர்த்தார். ரிடையர் ஆன போது அனைவரும் பாராட்ட, 'என் பதவிக்கு தகுதியானவனாகும் முயற்சியை செய்தேன், அவ்வளவே' என்றார்.

1975-ல் 'ஜில்லெட்' கம்பனியின் சிஇஓ ஆகிறார் 'கோல்மென் மில்லர்'. புதிய ஷேவிங் பொருட்கள் கொண்டு வரும் முயற்சியில் இருக்க, கம்பனியை வாங்கி கூறு போட்டு அதிக விலைக்கு விற்க பெரு நிறுவன வியாபாரிகள் முயன்றனர். கம்பனி இயக்குநர்களோடு சேர்ந்து அதை முறியடித்தார் மில்லர். அவர்கள் பங்குகளை அதிக பணம் தந்து வாங்கும் முயற்சி நடந்தது. அதிகமில்லை, இரண்டரை பில்லியன் டொலர் தருவதாகச் சொன்னார்கள். அதன் இலங்கை மதிப்பு என்ன என்றா கேட்கிறீர்கள். அந்த காசில் அப்பொழுது ஒரு நாட்டையே வாங்கியிருக்கலாம்!

பெரு நிறுவன வியாபாரிகளிடம் சிக்கினால் கம்பனி நாசமாகிவிடும், புதிய பொருட்களைக் கொண்டு வர முடியாது என்று வந்த பணத்தை துச்சமாக மதித்து வேண்டாம் என்று கூறி கம்பனியை காக்கிறார். அதன் பின் ஜில்லெட் அறிமுகப்படுத்திய 'சென்சர்', 'மாக் 3' போன்றவை உலக ஆண்களின் ரோம சாம்ராஜ்யத்தை அழித்து ஜில்லெட்டை தலை சிறந்த கம்பனிகள் வரிசையில் சேர்த்தது.

1991ல் 'ஃபார்சூன்' பத்திரிகை அட்டையில் மில்லர் படத்தை போட அனுமதி கேட்க 'நான் எதையும் பெரியதாக சாதிக்கவில்லை' என்று மறுக்கிறார். இருந்தும் அவரை வரைந்து அட்டையில் பிரசுரித்த பத்திரிகையை ஊழியர்கள் காட்ட மில்லர் கூச்சப்பட்டு 'எதற்கு இது' என்று தன் அறைக்கு செல்ல அங்கு திடீரென்று மாரடைப்பு வந்து பதினாறு ஆண்டுகள் கட்டிக்காத்த கம்பனியில் உயிரிழக்கிறார்!

'மார்ல்பரோ' போன்ற சிகரெட் பொருட்களை மட்டும் விற்ற 'ஃபிலிப் மாரிஸ்' கம்பனியின் சிஇஓ ஆகிறார் 'ஜோசஃப் கல்மென்'. 1957 முதல் 1978 வரை பல புதிய பொருட்களை அறிமுகப்படுத்தி, பல கம்பனிகளை வாங்கி இணைத்து பிலிஃப் மாரிஸை உலகின் முன்னணி நிறுவனங்கள் பட்டியலில் சேர்க்கிறார்.

இரண்டாம் உலகப் போரில் கடற்படையில் இருந்த அவர் போர் கப்பல் ஒன்றில் பயணிக்க வேண்டியவர் கடைசி நேரத்தில் வேறு பணிக்கு அனுப்பப்பட அவர் போக வேண்டிய கப்பல் நடுக்கடலில் மூழ்கி அனைவரும் இறந்தனர். சுவாரசியங்கள் மிகுந்த தன் சுயசரிதை எழுதுமாறு அனைவரும் வற்புறுத்த இறுதி வரை மறுத்து வேறு வழியில்லாமல் கம்பனிகாரர்களுக்கு மட்டும் சுயசரிதை எழுதினார்.

புத்தகத்தில் இப்படி தொடங்குகிறார்: **'பிறந்தது முதல் எனக்கு அதிர்ஷ்டம்.** அன்பான பெற்றோர், அழகான மனைவி கிடைத்த அதிர்ஷ்டம். அமர்க்களமான வர்த்தகம், அருமையான உடன் பணிபுரிவோர் பெற்ற அதிர்ஷ்டம். கடற்படையில் சேர்ந்த அதிர்ஷ்டம். கப்பலில் மூழ்காமல் தப்பித்த அதிர்ஷ்டம். 85 வயதிலும் உயிரோடு இருக்கும் அதிர்ஷ்டம்.'

வெற்றி பலருக்கு ஆணவத்தை தரும். இவரோ தன் வெற்றியை அதிர்ஷ்டம் என்றார். இவர் சுயசரிதையின் தலைப்பு 'I am a lucky guy'!

எப்பேற்பட்ட மனிதர்கள். எத்தகைய தலைவர்கள். தொழில் உலகின் வரப்பிரசாதங்கள். இது போன்ற தலைமையே கம்பனியை மிகச் சிறப்பானதாக்கும் அடித்தளம் என்கிறார் 'ஜிம் காலின்ஸ்'. ஆய்வுக் குழுவுடன் ஐந்து வருடம், 1,435 கம்பனிகளை அலசி, ஆயிரக்கணக்கான செய்திகள், புள்ளி விவரங்கள், ஆய்வறிக்கைகள் சேகரித்து பல நிர்வாகிகளுடன் கலந்துரையாடி சிறந்த கம்பனிகள் உருவாவது எப்படி என்று ஆராய்ந்து அதன் முடிவுகளை 'குட் டு க்ரேட' என்ற புத்தகமாய் எழுதினார்.

தலை சிறந்ததாக அவர் தேர்ந்தெடுத்தது 11 கம்பனிகள். இதன் வெற்றிக்கு அடித்தளமிட்டது அதன் தலைமை என்கிறார். வெற்றிக்கு வேறு காரணங்கள் சிலவும் உண்டு. அதை இன்னொரு சமயம் பார்ப்போம். இப்பொழுது தலைமைக்குத் தேவையான திறமைகளை பார்ப்போம். இவை ஐடியலாஜிகல் அல்ல. அனுபவ ரீதியான உண்மைகள்.

சிறந்த தலைவர்கள் தங்களை என்றுமே முன் நிறுத்துவதில்லை. அதனால்தான் சிறந்த கம்பனிகளை தெரிகிற நமக்கு அதன் தலைமை யார் என்பது தெரிவதில்லை. 'பி அண்டு ஜி' கம்பெனி சிஇஓ யார் என்று தெரியுமா? 'பிரிட்டானியா'?

சிறந்த தலைவர்கள் தன்னலம் பாராதவர்கள். தங்களைத் தாண்டி, அவர்கள் ஆயுளை மீறி கம்பனி வளரவேண்டும் என்று பார்ப்பார்களே ஒழிய தன்னை முன்நிறுத்தி தற்புகழ்ச்சி தேட மாட்டார்கள். **'வாழ்க்கையில் எதையும் சாதிக்கலாம், அதனால் யாருக்கு பெயர் கிடைக்கும் என்று பார்க்காத வரை'** என்றார் 'ஹேரி ட்ரூமன்'.

'அபாட் லேபரட்டரீஸ்' என்ற மருந்து தயாரிக்கும் குடும்ப கம்பனி. கம்பனி வளர சிறந்தவர்கள் மட்டுமே பணி புரியவேண்டும் என்று அதன் சிஇஓ 'ஜார்ஜ் கெயின்' தகுதியில்லாத தன் குடும்பத்தார் பலரையே சீட்டைக் கிழித்து வீட்டிற்கு அனுப்பினார். பித்ருக்கள் வேறு, பிசினஸ் வேறு என்று பந்தபாசத்தை ஒதுக்கி கம்பனியை முன்னிலைக்குக் கொண்டு சென்றார்.

சிறந்த தலைவர் தன் கம்பனி பற்றி பேசும்போது 'நான்' என்று கூறாமல் 'நாங்கள்' என்று தங்கள் சக பணியாளர்களை சேர்த்தே பேசுவார்கள். பல வருடங்கள் முன்பு 'முன்னணி நிறுவனம் ஒன்று ஜப்பான் நாட்டின் உயரிய தர விருது பெற்றது. அதை பற்றிய கட்டுரை வெளியிட்ட ஆங்கில பத்திரிக்கை அட்டையில் கம்பனி தலைவர் ' படம் பிரசுரிக்க அவரை அணுக அவர் 'இது என் டீமிற்கு கிடைத்த விருது. அவர்களோடு சேர்ந்து நிற்கிறேன், தனியாக போஸ் தரமாட்டேன்' என்றார். ஊழியர்கள் உழைப்புக்கு தரப்பட்ட எப்பேற்பட்ட அங்கீகாரம் பாருங்கள். அந்த நிறுவனம் பாட்டன் காலத்திலிருந்து பெறும் வெற்றியின் ரகசியம் இதுவே!

சிறந்த தலைவர்கள் சாதாரண மானவர்கள். ஆனால் அசாதாரண முடிவு தந்தவர்கள். இவர்கள் வெற்றிகளை ஜன்னல்களாக பாவித்து அதனூடே மற்றவர்களை பார்க்கின்றனர். அவர்களே வெற்றிக்கு சொந்தக்காரர்கள் என்கின்றனர். தோல்வியை சந்தித்தால் அதை முகம் பார்க்கும் கண்ணாடியாய் பாவித்து தங்களை மட்டும் அதில் கண்டு தவறுக்கு முழு பொறுப்பேற்று அதை நிவர்த்தி செய்ய முயற்சிக்கின்றனர்.

தலைமைப் பண்பு என்பது ஒன்று முதல் ஐந்து மட்டங்கள் கொண்டது என்கிறார் காலின்ஸ். கம்பனி அதிசிறந்ததாக மாற்றத் தேவை மட்டம் 5 தலைமை என்கிறார். காலத்தால் அழியாத சிறந்த கம்பனி உருவாக்கும் கனவோடு மனதிடத்துடன் அசாத்திய பணிவுடன் பணி புரிபவர்கள் லெவல் 5 தலைவர்கள். மட்டம் 5 தலைவர்களுக்கு சாதிக்க துடிக்கும் லட்சியம் உண்டு, சகட்டுமேனிக்கு ஈகோவும் உண்டு. அவை தன் கம்பனி, அதன் வளர்ச்சி என்பதை சுற்றியே இருக்கும் என்கிறார் காலின்ஸ். தன் காலத்திற்கு பின்னும் கம்பனி வளர தேவையானவற்றை செய்துவிட்டு செல்வார்கள் லெவல் 5 லீடர்கள்.

ஒருவரை புகழும் போது 'அவர் வேற லெவல்' என்று கூறுவது இதனால் தானோ என்னவோ.

இதெல்லாம் இருக்கட்டும். நீங்கள் எந்த லெவல் ஐயா?

# யாழ். ஐடிஎம் நேசன் கம்பஸில் எல்எல்பி பட்டப்படிப்பு ஆரம்பம்

இலங்கையில் கடந்த 35 ஆண்டு காலமாக உயர்கல்வியை இன,மத பேதமின்றி போதித்துவரும் IDM நிறுவனத்தின் யாழ்.கிளையில் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் சட்டக் கல்லூரியின் அங்கீகாரத்துடனும் LLB (UK) பட்டப்படிப்பு ஆரம்பிக்க இருக்கின்றது.

A/L பரீட்சையில்3S சித்தி உள்ளவர்கள் நேரடியாகவும், மற்றும் O/L தகைமையுடையவர்கள் Diploma In Law பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்வதனூடாகவும் LLB(UK) பட்டப் படிப்பைப் பூர்த்தி செய்ய முடியும்.

இவ்வாறு பூர்த்தி செய்தவர்கள் இலங்கைச சட்டக்கல்லூரியின் Attorneys-at-Law பரீட்சையை நேரடியாகவே எழுத முடியும். இவர்களுக்கு சட்டக்கல்லூரி விரிவுரைகள் விலக்களிக்கப்பட்டுள்ளன(exempted).

மேலும் விரும்பினால் எவ்வித பணமுமின்றி Law college விரிவுரைகளை தொடரவும் முடியும். அத்துடன் Law college நூலகத்தையும் இவர்கள் பயன்படுத்த முடியும்.

யாழ்.மண்ணில் கடந்த 12 ஆண்டு காலமாக நம்பிக்கைக்குரிய நிறுவனமாகத் திகழும் IDM யாழ் மாணவர்களுக்கு இவ்வறான ஒரு சிறந்த பிரித்தானிய LLB பட்டப்படிப்பை வழங்குவது யாழ்.புத்திஜீவிகளின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

யூன் மாதம் 1-ம் திகதி தொடக்கம் பதிவுகள் தொடங்கவுள்ளன.

குறிப்பிட்ட தொகை மாணவர்கள் மட்டுமே உள்வாங்கப்பட உள்ளதனால் உங்கள்பதிவுகளை மேற்கொள்ளலாம்.

யாழ் IDM நிறுவனமானது 216, நாவலர் வீதியில் கடந்த 12 ஆண்டு காலமாக இயங்கி வருவது அனைவரும் அறிந்த ஒன்றே. IDM நிறுவனத்தின் தொலைபேசி எண் 021 222 9901, 0774419901, வெப் முகவரி www.idmedu.lk.

முதல் தொகுதி மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று LLB (Hons) - UK பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,633.27 | 6,571.21 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,454.64 | 3,441.26 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 3,198.117

*உயர்வுற்ற பங்குகள்(ரூ)* றோயல் பாம்(33.00), சென்றல் பினான்ஸ்(249.20), நவலோகா(4.00), கபுஹஸ்ரேன்(21.90), சொப்ட் லொஜிக் பினா.(43.50).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* ஜேகேஎச்(W)(11.60), சிலாவ் பினான்ஸ்(18.70), சிஐஎப்எல்(0.60), ரீ சிமோல்ட் ஹோல்டர்(27.10), எஸ்எம்பி லீசிங்(0.70). **மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 144.28 | 148.08 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 210.84 | 218.40 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.39 | 166.88 |
| சுவிஸ் பிராங் | 144.79 | 150.96 |
| கனேடிய டொலர் | 110.33 | 114.99 |
| அவுஸ்திரேலிய டொலர் | 103.22 | 108.15 |
| சிங்கப்பூர் டொலர் | 104.51 | 108.60 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.17 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.68 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# பௌத்த பிக்குமார் அரசியல் பேசும் உரிமையற்றவர்கள்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

பௌத்த பிக்குமார் அரசியல் பேசும் உரிமையற்றவர்கள் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன பரபரப்பான கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் 65 ஆவது பிறந்த தினம் நேற்று முன்தினம் ஆகும்.

இதனை முன்னிட்டு கொழும்பு, மருதானையில் வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்குறித்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ராஜித சேனாரத்ன, தேர்தல் அரசியலில் வெற்றி பெறும் நோக்கில் நாட்டில் இனவாதம் வளர்த்துவிடப்பட்டுள்ளது. குறித்த மனப்பான்மையில் இருந்து நாம் அனைவரும் விடுபட வேண்டும்.

பௌத்த பிக்குகளுக்கு அரசியல் பேசும் தகுதியோ, யாரையும் கண்டபடி விமர்சிக்கும் உரிமையோ இல்லை. அதே நேரம் இன வாதம் பேசுவது பௌத்த துறவறத்துக்கே தகுதியற்ற விடயமாகும் என்றும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# கூட்டுத்தாபன ஊழியர்கள் ஓய்வுபெறும்போது அநீதி

## வசந்த சமரசிங்க குற்றச்சாட்டு

அரசாங்கத்தின் கூட்டுத்தாபன மற்றும் அதிகார சபைகளின் ஊழியர்கள் ஓய்வுபெறும்போது பாரிய அநீதி இழைக்கப்படுவதாக வசந்த சமரசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் சார்பில் இது தொடர்பான அறிக்கையொன்றை வசந்த சமரசிங்க அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பியுள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசாங்கத்தின் கூட்டுத்தாபனங்கள் மற்றும் அதிகார சபைகளின் ஊழியர்கள் பணி ஓய்வு பெறும் போது அவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவில் பாரிய அநீதி இழைக்கப்படுகின்றது.

புதிய சுற்றறிக்கையொன்றின் பிரகாரம் அவ்வாறான ஊழியர்கள் பணி ஓய்வு பெறும் போது சுமார் மூன்று தொடக்கம் நான்கு இலட்சம் வரையான தொகையை ஓய்வூதியக் கொடுப்பனவிலிருந்து இழக்க நேரிடுகின்றது.

எனவே குறித்த சுற்றறிக்கையை உடனடியாக வாபஸ் வாங்கிக் கொள்ளுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம்.

அரசாங்கம் அதனை ஏற்று, உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனில் தொழிற்சங்கப் போராட்டம் நடாத்தப்படும் என்றும் வசந்த சமரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சுன்னாகம் | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 120 | 150 | 120 | 130 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 250 | 300 | 300 |
| தக்காளி | 200 | 300 | 160 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 | 60 | 60 |
| கோவா | 200 | 200 | 120 | 160 | 180 |
| கரட் | 160 | 200 | 140 | 200 | 200 |
| பூசணி | 40 | 80 | 50 | 60 | 40 |
| புடோல் | 140 | 100 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 150 | 200 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 200 | 200 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 100 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 80 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 100 | 100 | 120 |
| லீக்ஸ் | 160 | 200 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 140 | 100 | 120 | 200 | 150 |
| கறிமிளகாய் | 240 | 200 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 200 | 120 | 200 | 150 |
| போஞ்சி | 300 | 200 | — | 300 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 140 | 200 | 200 |
| கீரை – 1பிடி | 40 | 50 | 30 | 60 | 80 |
| தேசிக்காய் | 300 | 400 | 200 | 200 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 20-25 | 40 |
| இராசவள்ளி | 100 | 300 | — | 200 | 180 |
| வெங்காயப்பூ | 280 | 300 | — | — | — |
| முள்ளங்கி | 100 | 100 | — | 120 | 150 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 120 | 50 | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## 20 ஆயிரம் இராணுவ வீரர்கள் பின்வாங்கி ஓட்டம் 191

**கைப்பற்றினர்**

நிலப்பகுதி வழியாக யாழ்ப்பாணத்துக்குள் நுழைய வேண்டும் என்றால் ஆனையிறவுப் பகுதியைக் கடந்து தான் செல்ல வேண்டும். எனவே இந்தப் பகுதியைக் கைப்பற்றுவதற்காகக் கடந்த சில நாட்களாக விடுதலைப் புலிகள் தீவிரத்தாக்குதல் நடத்தி வந்தனர். இந்தத் தாக்குதலில் பெண் விடுதலைப் புலிகளும் பங்கு கொண்டனர்.

கடும் சண்டைக்குப்பின் 22.04.2000 அன்று ஆனையிறவு அருகே யாகச்சி என்ற இடத்தில் உள்ள இராணுவ முகாமை முதலில் விடுதலைப் புலிகள் கைப்பற்றினார்கள். அடுத்த சிலமணி நேரங்களில் ஆனையிறவு முகாமையும் அவர்கள் கைப்பற்றினார்கள். இதைத் தொடர்ந்த ஆனையிறவு பகுதி முழுவதும் விடுதலைப்புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் வந்தது.

**1,000 பேர் பலி**

இந்தச் சண்டையில் 1,000 இற்கும் அதிகமான இராணுவ வீரர்கள் பலியானார்கள் மேலும் சுமார் 20 ஆயிரம் வீரர்கள் விடுதலைப்புலிகளின் அதிரடித் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் உயிர் தப்புவதற்காகப் பின்வாங்கி ஓட்டம் பிடித்தனர்.

அங்கிருந்து ஏராளமான ஆயுதங்கள், வெடிகுண்டுகள் மற்றும் இராணுவ வாகனங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினார்கள்.

இந்தப் போரில் இராணுவத் தரப்பில் 128 வீரர்கள் பலியானதாகவும் 625 பேர் காயம் அடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் தரப்பில் 162 பேர் கொல்லப்பட்டதாகவும் இராணுவம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது.

**இராணுவத்திற்குப் பின்னடைவு**

ஆனையிறவு, யாகச்சி முகாம்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதை இராணுவ அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டார்.

இந்த இரு முகாம்களையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் தீபகற்பப் பகுதியில் இராணுவத்தின் பிடி தளர்ந்து விட்டதாகவும் எனவே யாழ்ப்பாண நகரை தக்க வைத்துக் கொள்ள கடுமையாகப் போராட வேண்டியிருக்கும் என்றும் அவர் கூறினார்.

போரில் ஆனையிறவுப் பகுதியை இழந்தது இராணுவத்திற்கு ஏற்பட்ட மிகப் பெரிய பின்னடைவாகக் கருதப்பட்டது.

**விமானப்படைத்தளம்**

யாழ்ப்பாணப் பகுதியில் பலாலி என்ற இடத்தில் விமானப்படைத்தளம் உள்ளது. இங்கு சுமார் 15 ஆயிரம் வீரர்கள் உள்ளனர். யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவ வீரர்களுக்கு விமானப்படை விமானங்கள் மூலம் இங்கு தான் உணவுப் பொருட்கள் கொண்டு வரப்படுகின்றன.

ஆனையிறவு, யாகச்சி முகாம்கள் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து பலாலி விமானப்படைத் தளத்தின் மீது விடுதலைப்புலிகள் எந்த நேரமும் தாக்குதல் நடத்தலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

**முன்னேறினார்கள்**

யாகச்சி, ஆனையிறவு முகாம்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் எஞ்சியிருக்கும் வீரர்களை யாழ்ப்பாணத்திற்கு விரைந்து செல்லும்படி இராவ அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

ஆனையிறவுப் பகுதி முழுவதும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டதால் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காக அந்த நகரை நோக்கி விடுதலைப்புலிகள் முன்னேறினார்கள். வழியில் அவர்களுக்கும் இராணுவ வீரர்களுக்கும் இடையே கடுமையான சண்டை நடந்தது. யாழ்ப்பாணத்தை விடுதலைப்புலிகளிடம் இழந்து விடக் கூடாது என்பதற்காக இராணுவம் கடுமையாகப் போராடியது.

**மறுப்பு**

ஆனையிறவுப் பகுதியைக் கைப்பற்றிவிட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்திருப்பது பற்றி இராணுவச் செய்தித் தொடர்பாளர் பலிதா பெர்னாண்டோவிடம் கருத்துக் கேட்டபோது அவர் பதில் அளிக்க மறுத்து விட்டார்.

ஆனையிறவுப் பகுதியில் இருந்து வாபஸ் ஆகும்படி இராணுவ வீரர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாக வெளியான செய்திகளையும் அவர் மறுத்தார்.


**அரசு வேண்டுகோள்**

ஆனையிறவுப் பகுதியில் நடந்த போரில் 1,000 இற்கும் அதிகமான இராணுவ வீரர்கள் பலியானதோடு ஏராளமான வீரர்கள் காயம் அடைந்தனர். அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக இரத்ததானம் செய்யும்படி பொதுமக்களுக்கு அரசு வேண்டுகோள் விடுத்தது. இதுபற்றி வானொலியில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இரத்ததானம் பெறுவதற்காக இரத்த சேமிப்பு வங்கிகளையும் வைத்தியசாலைகளையும் நீண்ட நேரம் திறந்து வைத்திருக்கும் படியும் அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

**நாடு திரும்பினர்**

மருத்துவப் பரிசோதனைக்காக ஜனாதிபதி சந்திரிகா இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றிருந்தார். போர் நிலவரம் பற்றி அவருக்கு அவ்வப்போது தகவல் தெரிவிக்கப்பட்டது.





ஆனையிறவு இராணுவ முகாமை நோட்டமிடும் விடுதலைபுலிகளின் உளவுப்படையினர்

(தொடரும்)

அக்கினிகுஞ்சொன்றுகண்டேன். அதைஆங்கொரு மரப் பொந்திடைவைத்தேன். வெந்து தணிந்தது காடு. - பாரதியார்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ்ப் புத்திஜீவிகள் இனியும் பொறுக்கக் கூடாது

மக்கள் எப்படியோ அப்படித்தான் அரசியல்வாதிகளும் இருப்பர் என்றவொரு அறிஞனின் கருத்தை தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுடைய அனைத்து பிரஜைகளும் அறிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும்.

மக்கள் ஏனோதானோ என்றிருந்தால் அரசியல்வாதிகளும் அதைத் தமக்கு சாதகமாக்கிக் கொள்வர்.

இதற்கான சாட்சியத்துக்காக நாம் எங்கும் செல்லத் தேவையில்லை. எங்களிடமே அதற்கான ஆதாரங்கள் நிறைய உண்டு.

இப்போது இருக்கின்ற சூழ்நிலையில் தமிழ் மக்களை யாருமே கெடுக்கத் தேவையில்லை. நாமே நமக்கு பகை என்றான ஒரு சூழ்நிலைமையில் இருக்கின்றோம். இந்நிலைமையானது மிகப்பெரும் ஆபத்தானது.

நாமே நமக்கு பகையாகிப் போனால் அழிவைத் தவிர வேறு எதுவும் நடக்க மாட்டாது. உலகில் யாருடனும் மோதி வெற்றி பெற்றுவிடலாம். ஆனால் உள் வீட்டுக்குள் குழப்பம் என்றால் அது மிகப்பெரும் பயங்கரமாகும். உள்வீட்டுக் குழப்பம் வெற்றியாயினும் தோல்வியாகவே இருக்கும்.

பாரதப் போர் சகோதரர்களுக்குள் நடந்த யுத்தம். இராமாயணம் உள்வீட்டுச் சூழ்ச்சியில் இன்னொருவன் அநீதி இழைத்த கொடுமையின் காப்பியம்.

ஆக, பாரதம், இராமாயணம் என்ற இரு பெரும் இதிகாசங்களையும் எடுத்து நோக்கினால் பாரதம் சகோதரர்கள் எப்படி இருக்கக் கூடாது என்பதைக் காட்டுவது.

இராமாயணம் தம்பியர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்தியம்புவது.

ஆக, ஒற்றுமையில்லாத தம்பியர்கள் தமக்குள்போர் செய்து கொள்கின்றனர். வெற்றி பாண்டவர்களுக்காயினும் தம் பெரிய தந்தையின் பிள்ளைகளை போரில் கொன்றொழித்தோமே என்ற துன்பம் பாண்டவர்களிடம் இறுதி வரை இருந்தது.

அதேநேரம் இராமாயணத்தில் கைகேயி சூழ்ச்சி செய்தாளாயினும் அந்த சூழ்ச்சியை இராம சகோதரன் பரதன் இம்மியும் ஏற்றிலன்.

அதனால் எதிரியை வென்று மீண்டும் ஆட்சி புரியும் வாய்ப்புக் கிடைத்தது.

எனவே எங்கிருந்து பகை வந்தாலும் உள் வீட்டுக்குள் இருந்து பகை வருமாயின் அது அந்த வீட்டை, இனத்தை பரிநாசப்படுத்தி விடும்.

ஆகையால் வீட்டுக்குள் குழப்பம் வரலாகாது என்பதை பாரதப்போரில் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

அதேநேரம் குழப்பம் விளைவித்து எங்கள் மண்ணில் எதுவும் நடக்காமல் செய்கின்ற அரசியல்வாதிகள் தொடர்பில் தமிழ்ப் புத்திஜீவிகள் இனிமேலாவது கவனம் செலுத்த வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்களை அழைத்து அவர்களுடன் கலந்துரையாடுவது, ஆலோசனை வழங்குவது, அவர்களை சரியாக வழிப்படுத்துவது என்றவாறான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

இதெல்லாம் நமக்கேன் என்றிருந்தால் எங்கள் எதிர்காலம் படுபாதாளத்துக்குள் செல்வது தடுக்க முடியாமல் போகும்.

# கிழக்கு முதலமைச்சர் திட்டிய விவகாரம்: ஜனாதிபதியும் பிரதமரும் பேச்சு நடத்த முடிவு!

(கொழும்பு)

கடற்படையின் கட்டளை அதிகாரியான கப்டன் ரஞ்சித் பிரேமரத்னவை கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் திட்டிய விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பேச்சு நடத்தவுள்ளனர்.

சம்பூர் மகா வித்தியாலயத்தில் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற ஆய்வுகூட திறபபு விழாவில் கடற் படையின் கட்டளை அதிகாரியான கப்டன் ரஞ்சித் பிரேமரத்னவை கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் முட்டாள் என்று கடுமையாகத் திட்டியிருந்தார்.

இதனையடுத்து, கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் முப்படைகளினது முகாம்களுக்குப் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும், அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளை முப்படைகளும் புறக்கணிப்பார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சின் சார்பில் அறிவிக்கப்பட்டது.

கடற்படைத்தளபதி வைஸ அட்மிரல் ரவீந்திர விஜய குணவர்த்தனவின் கோரிக்கைக்கு அமையவே, பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெற்றியாராச்சி இந்த அறிவிப்பை வெளியிட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், பெரும் சர்ச்சைக்கு உள்ளாகியுள்ள இந்த விவகாரம் தொடர்பில் ஜப்பான் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தென்கொரியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் நாடு திரும்பியதும் இந்தப் பேச்சு இடம்பெறவுள்ளது.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சின் சார்பில் விடுக்கப்பட்ட அறிவிப்புத் தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் பிரதமர் ரணில் வக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது அரசாங்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகினறது. (செ-12)

# பிரபாகரன் பற்றிய விஜயகலா கருத்து பதிலளிக்க மறுத்த பாதுகாப்பு செயலர்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழக்கவில்லை என வெளியாகும் கருத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் கிடையாது என பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால்நினைவு நிகழ்வின்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்டிருந்த கருத்து தொடர்பில், சிங்கள ஊடகமொன்று பாதுகாப்பு செயலாளரிடம் இந்த விடயம் குறித்து வினவிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பிரபாகரன் உயிரிழந்துள்ளதாக கூறப்படும் விடயத்தை தான் நம்பவில்லை என விஜயகலா மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பிரபாகரனின் மரணச் சான்றிதழை வெளியிடும் பட்சத்தில் மாத்திரமே தாம் அதனை ஏற்றுக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளதாக அந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கு, உயிரிழந்த எத்தனையோ பேருக்கு இன்றுவரை மரணசான்றிதழ்கள் கிடையாது என பாதுகாப்பு செயலாளர் கூறியுள்ளார்.

அத்துடன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் கருத்து குறித்து தான் உத்தியோகபூர்வமாக கருத்து வெளியிட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (12)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை மணிவரை வவுனியா பிரதேசத்தில குட்செட் வீதி பிரதேசத்தில் மின் தடைப்படும். (இ-9)

# அரசியல் ஈடுபடுவதுபற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை!

## திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

அரசியலில் ஈடுபடுவது தொடர்பாக இன்னும் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என, ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியலில் இருந்து தான் தற்போது ஒதுங்கியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

வெலிகம் பிட்டியவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க, கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் மற்றும் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தார்.

இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அவரை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (12)

# சு.கவில் இணைந்ததே என் தவறு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய கட்சியை விட்டு விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டமையே தான் செய்த பெரிய தவறென முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று கதிர்காமத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேபோல் மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் தனக்கு வழங்கப்பட்ட அமைசசுக்களில் கடமையாற்றும் போது, கடமையாற்ற முடியாத அமைச்சான மக்கள் தொடர்பாடல் அமைச்சை தனக்கு வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (12)

**சர்வதேச புகைத்தலுக்கு எதிரான தினம்- மே.31**

*புதிது புதிதாய் சிறுசுகளை*
*புகை வளையத்தினுள் வீழ்த்துவதா?*
*புகைப்போரே சிந்தியுங்கள்!!*

*நீங்கள் எரித்துக் கொண்டிருப்பது*
*உங்கள் வாழ்க்கையை மட்டுமல்ல!*
*உங்களையே உலகமாகக் கொண்டிருப்போரின்*
*அன்பையும் கனவுகளையும் சேர்த்துத்தான்!!*

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்.மாநகர சபை.**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை



## ஆன்மாவின் மூன்று நிலைகள்

காமதேனு : தேனு என்பது பசு. ஆன்மீக உலகில் பசு என்ற சொல் ஆன்மாவைக் குறிக்கும். காமம் என்பது இச்சையைக் குறிக்கும் சொல். காமதேனு எனில் இச்சையை இயல்பாக உடைய ஆன்மா என்று பொருள். உடல் வரையில் எல்லை கட்டிப் புலன்கள் வழியே புறப்பொருள் கவர்ச்சியால் ஈர்க்கப் பெற்று ஆன்மா செயல் புரியும்போது விளைவுகள் பெரும்பாலும் சலிப்பும், துன்பமும் தரும். இவ்வகையில் இச்சைக்கே ஆன்மாவின் ஆற்றல் பயன்படும். முதல் கட்டம் காமதேனு.


கற்பகம் : கற்பு +அகம் என்ற சொற்களின் இணைப்புத் தான் கற்பகம். இங்கு ஆன்மா உயிர் வரையில் உணர்ந்து விரிந்து ஆற்றும் தகுதி பெற்ற நிலை இச்சித்து. இச்சித்து, துய்த்துத் துய்த்துச் சலிப்பும் துன்பமும் பெற்ற ஆன்மா சிந்தனையில் ஆழ்கின்றது. புற இயக்கம் விடுத்துத் தன்னடக்கம் உண்டாகி உயிர்நிலையின் சிறப்பை அறிகின்றது. அறிவைப் படர்க்கை ஆற்றலாகவே அறிந்து கொள்கிறது. விளைவறிந்து செயலாற்றும் தகைமை ஓங்குகிறது. செய்யத்தக்கன, தகாதன இவற்றை விளங்கி, விளக்க வழியில் தன்தேவை, பழக்கம் இவற்றை ஒழுங்குபடுத்திக் கொள்ளுகிறது. இந்த அளவில் அறிவு உறுதி பெற்ற போது ஒழுங்கும் இயல்பாகின்றது. உறுதியும், ஒழுக்கமும் பெற்ற ஆன்மாவின் அந்த மதிப்புள்ள உயர்நிலை தான் கற்பூஅகம். அகம் என்றால் உள்ளம். கற்பு எனில் உறுதியும் ஒழுக்கமும் பெற்ற நிலை. இது ஆன்மாவின் வளர்ச்சி நிலையில் இரண்டாவது கட்டம்.

சிந்தாமணி : சிந்தை மணியான நிலை. அதாவது சலனமற்று, புலனடக்கம் பெற்று, உறுதி பெற்ற நிலை. தன் உயிர்நிலை உணர்ந்த பின் அங்கு கிட்டிய ஆற்றலால் உயிருக்கு மூல நிலை அறியும் ஆர்வம் எழுகின்றது. சிந்தனை உயர்ந்து உயிர் விரைவைச் சிறிது சிறிதாகத் தவத்தின் மூலம் குறைத்துக் கொண்டே போய் முடிவாகத்தான் இயக்கமற்ற அமைதி நிலையைப் பெறுகின்றது. மெய்ப்பொருளாகி விடுகின்றது. தனது இருப்பு நிலை அணு முதற்கொண்டு அண்டங்கள் அனைத்துக்கும் அப்பாலுள்ள பெருவெளி வரையில் நிறைந்து இருக்கும் பெருமையினை உணர்ந்து கொள்கின்றது.

தேவைக்கும் இருப்புக்கும் இடையே உள்ள தெய்வீகத் தொடர்பும் அதன் ஒழுங்கமைப்பும் உணர்ந்து ஆன்மா முழு அமைதி பெறுகின்றது. இந்த நிலைதான் சிந்தாமணி. இதுதான் மனிதனின் முழுமைப்பேறு. இதற்கு ஆன்மா தன்னையறிய வேண்டும். அப்போது தான் அமைதி பிறக்கும்.

# வன்னி பெரும் கிரிக்கெட் சமர் சமநிலையில் முடிவுக்கு வந்தது



















வன்னி பெரும் போர் என அழைக்கப்படும் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்கும் கிளிநொச்சி மகாவித்தியாலய அணிக்கும் இடையிலான 6 ஆவது நட்பு கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டி சமநிலையில் முடிவுக்கு வந்தது.

போட்டியின் முதல் நாளான வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமான போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று புதுக்குடியிருப்பு அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது. துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 40.4 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 241 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்திக்கொண்டது.

போட்டியில் அணித்தலைவர் இ.பேபிசன் 66 ஓட்டங்களையும், கு.யதுசன் 57 ஓட்டங்களையும், ஜெ.கஜீவன் 34 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் புதுக்குடியிருப்பு அணி சார்பில் த.கயலவன் 3 விக்கட்டுகளையும், ஆ.நிலவழகன் 2 விக்கெட்டுகளையும், பு.தர்சன், பு.சதுர்யன், சி.நிமலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர், 48.3 ஓவர்களில் 6 விக்கட் இழப்பிற்கு 80 ஓட்டங்கள் பெற்ற நிலையில் முதல்நாள் போட்டி நிறைவுக்கு வந்தது.

இரண்டாம் நாளான நேற்று முன்தினம் போட்டியை தொடர்ந்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர் 64 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 110 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தனர். துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் நா.லிபிதன் 57 ஓட்டங்களையும், பு.தர்சான் 16 ஓட்டங்களையும் பெற்றனர். கிளி.மகாவித்தியாலயம் சார்பில் பந்து வீசிய மு.நிர்திகன் 3 விக்கெட் டுகளையும், மு.கிருஸ்ணதுசாந்தன் மற்றும் கு.யதுசன் தலா 2 விக்கெட்டுகளையும், ஜே.மிதுசன், மு.நிதுசன், இ.பேபிசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர்.

ஓட்ட எண்ணிக்கையில் பின்னிலையில் இருந்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியினர் 2 ஆவது டெஸ்டை ஆரம்பித்தனர். 52 ஓவர்கள் விளையாடி 7 விக்கெட் இழப்பிற்கு 105 ஓட்டங்களை அவர்கள் பெற்ற நிலையில் நேரம் போதாமையால் போட்டி சமநிலையில் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டது. இரண்டாவது போட்டியில் துடுப்பெடுத்தாடிய புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி சார்பில் த.விதுசன் 32 ஓட்டங்களையும், யோ.சஜிந்தன் 28ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

பந்து வீசிய கிளி/ மகாவித்தியாலய அணி சார்பில், ஜே.மிதுசன் 2 மற்றும் மு.கிருதிகன் 2 விக்கெட்டுகளையும், மு.நிருதன், மு.கிருஸ்ணதுசாந்தன், ய.கஜீபன் தலா ஒரு விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர். 6ஆவது வன்னி பெரும் சமர் போட்டியின் ஆட்ட நாயகனாக 66 ஓட்டங்கள் மற்றும் ஒரு விக்கெட் வீழ்த்தியமைக்காக இ.பேபிசன் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக 57 ஓட்டங்களை பெற்ற புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணித்தலைவர் நா.லிபிதனிற்கு கிடைத்தது. சிறந்த பந்து வீச்சாளராக புதுக்குடியிருப்பு மத்திய மகாவித்தியாலய வீரர் மு.நிருதிகன் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி தன்வசமாக்கி கொண்டார். சகலதுறை ஆட்ட வீரராக 56 ஓட்டங்கள், 2 விக்கெட்டுகளை பெற்றமைக்காக கிளி.மகா வித்தியாலய வீரர் கு.யதுசன் தெரிவானார்.

சிறந்த களத்தடுப்பாளராக கிளி. மகா வித்தியாலய அணி வீரர் கு.யதுசன் தெரிவானார். (க-15-312)

## விடத்தல் தீவு யுனைட்டட்டை வென்றது வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம்



இளவாலை ஹென்றீஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றீசியன் சவால் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இரண்டாவது சுற்றின் விலகல் முறையிலான ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன.



கடந்த (23.5.2016) நடைபெற்ற நொக்கவுட் ஆட்டத்தில் விடத்தல்தீவு (மன்னார்) யுனைட்டட் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதியது.

"மொபிடல் கிண்ண" (வடமாகாண) அரையிறுதிப்போட்டியில் இரு அணிகளும் மோத இருப்பதனால் இப்போட்டி மிக எதிர்பார்ப்புடன் ஆரம்பமானது.

போட்டி ஆரம்பமாகி இரண்டாவது நிமிடத்திலேயே டயமன்ஸ் வீரர் பிறேம்குமார் (வீமா) கோலடித்து அசத்தினார். இதனால் ஆட்டம் ஆரம்பத்திலிருந்தே விறுவிறுப்பை ஏற்படுத்தியது.

யுனைட்டட் அணி கோலடிப்பதற்காக ஆட்டத்தை வேகப்படுத்தியது. இருந்தபோதும் பின்களத்தில் (difference) தவறுகளை ஏற்படுத்தியது. இதனால் டயமன்ஸ் அணிக்கு வாய்ப்புக்கள் உருவாகின. எனினும் அவற்றை வீணடித்தனர்.

இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கடுமையாக மோதின. கோலடிப்பதற்கு யுனைட்டட் அணி வீரர்கள் கடுமையாக முயற்சித்த போதும் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பத்தை வீணடித்தது. இதனால் இறுதிவரை ஒரு கோலுடன் போராடிய டயமன்ஸ் அணி வெற்றி பெற்று B பிரிவில் லீக் சுற்றுக்குத் தகுதி பெற்றது. (க)

## மடு மாந்தை மேற்கு உதைபந்தாட்ட ஒன்றியத்திற்கு உதைபந்தாட்ட பயிற்சி உபகரணங்கள் வழங்கி வைப்பு



மன்னார் மாவட்ட, மடு மாந்தை மேற்கு உதைபந்தாட்ட ஒன்றியத்தின் (லீக்) வேண்டுகோளுக்கு இணங்க, வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனால் ரூபா 50 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு உதைபந்தாட்ட பயிற்சிக்காக பயிற்சி உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பொருட்களை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் உத்தியோகபூர்வமாக மடு மாந்தை மேற்கு உதைபந்தாட்ட ஒன்றியத்தின் செயலாளர் ஜே.ஒகஸ்டினிடம் வழங்கி வைத்தார். இந் நிகழ்விற்கு ஒன்றியத்தின் 9 கழகங்களும், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் மற்றும் ஒன்றியத்தின் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-91-281)

## இன்றைய போட்டிகள்


அராலி வடக்கு திருமகள் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே உதைபந்தாட்டப் போட்டியை அராலி வடக்கு மடத்தடி திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகிறது. இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ். ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் யங்கென்றிஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துப் பருத்தித்துறை சென். சேவியர் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (கு)

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

இளவாலை ஹென்றிஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றிஸ் சவால் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டியினை புனித ஹென்றியரசர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகின்றது. இன்றுதிங்கட் கிழமை இரவு7.30 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் போட்டியில் ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# ஆயுதம் ஏந்திப் போராடிய போதும் போலியோவை ஒழிக்க முடிந்தது

## ரொடரி அமைப்பின் உதவியே காரணம் – ரணில்



(டோக்கியோ)

இலங்கையில் போலியோ நோய் அச்சுறுத்தல் இல்லை எனவும், இரண்டு தசாப்தங்களாகவே நாட்டில் போலியோ நோயாளிகள் பதிவாகவில்லை எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தீவிரவாதத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடிய போதும் நாட்டில் போலியோவை ஒழிக்க முடிந்துள்ளதாகவும், இதற்கு ரொடரி அமைப்பின் உதவியே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

107வது ரொடரி இன்டநெசனல் மாநாட்டில் (Rotary International Convention) கலந்து கொண்ட போதே பிரதமர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் இதன்போது மேலும் கூறியதாவது,

1995-ம் ஆண்டு யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து ரொடரி இன்டநெசனல் உறுப்பினர்கள் சிலர் இலங்கை சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடினர். அவர்களது நோக்கம் தேசிய நோய்த் தடுப்பு தினத்தை ஏற்பாடு செய்வதே, இதன் நிமித்தம் ரொடரி ஒன்றரை மில்லியன் டொலர்களை வழங்க உறுதியளித்தது, நாடுமுழுவதும் போலியோ நோய்த்தடுப்பு ஊசியை போடுவதற்கு தேவையான மிகுதித் தொகையை அரசாங்கம் வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டது.

சுகாதார அமைச்சின் அதிகாரிகளும் அதனை ஏற்றுக் கொண்டனர். அப்போது நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கில் யுத்தம் நடைபெற்றதால், அந்தப் பகுதிகளைத் தவிர்த்து இந்த நடவடிக்கையை ஏனைய பகுதிகளில் மட்டும் முன்னெடுக்க அதிகாரிகள் பரிந்துரைத்தனர்.

ஆனால் ரொடரி அதற்கு இணங்கவில்லை, இதன்பொருட்டு ரொடரி நிதி அளித்துள்ள நிலையில் அதனை நாட்டின் ஒரு பகுதிக்கு மட்டும் விநியோகிக்க இடமளிக்க முடியாது என கூறினர்.

அதற்கு அதிகாரிகள் உங்களுக்கு தெரியவில்லையா நாட்டில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, வடக்கு, கிழக்கில் எமது நிர்வாகம் இல்லை, எங்களை என்ன செய்யச் சொல்கின்றீர்கள் என வினவினர்.

அதற்கு ரொடரி தலைவர், அதனைப் பற்றி நீங்கள் கவலைபட வேண்டாம். யுத்தத்தைப் பற்றி நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்றார்.

முடிவில் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் அதற்கு இணங்கினர். அதன் பின்னர் இரண்டு மூன்று மாதங்கள் கழித்து ரொடரி தலைவர் ரவீந்திரன் யுனிசெப் மற்றும் ரொடரி நிறுவனத்துக்கு கிடைக்கப் பெற்ற கடிதம் ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தார். அது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினால் அனுப்பப்பட்ட கடிதம்.

அதில், தேசிய நோய்த் தடுப்பு தினத்திற்காக உங்கள் அரசாங்கம் ஆயுதத்தை கீழே வைக்கத் தயார் எனில், நாங்களும் ஆயுதத்தை கீழே வைத்து யுத்த நிறுத்தத்திற்கு வருகிறோம் என இருந்தது.

இதன்படி, யுத்த நிறுத்தம் செயற்படுத்தப்பட்டது, இரு தரப்பினரும் ஆயுதத்தை கீழே வைத்தோம், ரொடரி மற்றும் யுனிசெப், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் சுகாதார அதிகாரிகள் ஜீப் ஒன்றில் வெள்ளைக் கொடியுடன், அது வரை யாரும் செல்லப் பயந்த வடக்கு மற்றும் கிழக்குக்கு சென்றனர்.

இதன் பிரதிபலனாக போலியோ அற்ற இலங்கையை உருவாக்க எம்மால் முடிந்தது. அந்த தினம் எமக்கு மற்றொரு படிப்பினையை தந்தது, எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

நாம் அச்சம்மிக்க சூழலில் இருந்தாலும் அனைவரும் எமது குழந்தைகளை நேசிக்கிறோம் என்பதே.மேற்கண்டவாறு பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளார். (12)

## உண்ணாப்பிலவில் விபத்து இருவர் காயம்



(பணிக்கன்குளம்)

உண்ணாப்பிலவில் ஏற்பட்ட வீதி விபத்தில் இருவர் காயமடைந்து முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நேற்று அளம்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஆட்டோ உண்ணாப்பிலவு பகுதியில் வீதி வளைவில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் பயணம் செய்த இருவர் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (281)

## மக்கள் பிரச்சினைகளை மறந்து பழிவாங்கல்களை செய்கிறது அரசு

(கொழும்பு)

மக்கள் நாளாந்தம் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு அரசாங்கத்தால் விரைவில் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் மக்கள் பிரச்சினைகளை மறந்து பழிவாங்கல்களையே மேற்கொள்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீரிகம பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (12)

## ஆனோல்ட் விதண்டாவாதம்...

செயற்படுகிறோம்.

முடிந்தளவுக்கு வித்தியாசம் வேற்றுமைகளை முன்வைக்காது மக்களின் நன்மை கருதி சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

உதாரணமாக பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் எம்முடன் சேர்ந்து பல நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகிறார். அந்த வழியில்தான் நாம் எல்லோரும் செல்லவேண்டும்.

இது எமது மாகாணம், எம் மக்களுக்குரிய விடயங்களை செய்து கொண்டிருக்கும் போது ஒருமித்து காரியங்களை செய்யவேண்டும் என விரும்புகிறேன் என தெரிவித்தார்.

அதனையடுத்து சிறுவர் விவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்துக்குநான் சமுகமளிக்க விரும்பவில்லை.

ஏனெனில் பிரதேசமக்கள் பாதிக்கப்பட்டதால் பிரதேச செயலரை மாற்றினோம். அவரைபற்றி பல முறைப்பாடுகள் எமக்குகிடைக்கப் பெற்றது. பல மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் வாக்குகளில் தான் நாம் பாராளுமன்றம் சென்றுள்ளோம். எனவே அவர்களுக்குரிய திட்டம் என்னவென்றாலும் முன்னுரிமை வழங்கவேண்டும்.

பிரதேச செயலகங்கள் அரச நிறுவனங்களில் தீர்வுகிடைக்காத பட்சத்தில் அரசியல்வாதிகளை தேடிமக்கள் செல்கின்றனர். எனவே கடந்தகால கசப்பான அனுபவங்களை மறந்து மக்களின் அபிவிருத்திக்கு ஒத்துழைக்க வேண்டும் என தெரிவித்தார்.

அதன்போது வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் கருத்து ஒன்றினை முன்வைத்தார். அரச அலுவலரின் இடம்மாற்றம் பற்றி அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆனால் அந்த அலுவலர் இன்னும் ஒருபிரதேசசெயலகத்தில் கடமையாற்றிவருகிறார். அவருடனான அமைச்சரின் முறைப்பாட்டை வன்மையாக கண்டிக்கிறோம்.

அந்த அலுவலர் ஒரு சாராருக்கு பிழையாக தெரிந்தாலும் அவர் பலருக்கு சிறந்த அதிகாரியாக காணப்படுகிறார்.

இப்போது இருப்பவரில் குற்றம் காணப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டால் இவ்வாறு தொடர்சியாக குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து கொண்டிருககும். பெண்ணாக துணிச்சலாக கடமையாற்றிய ஒருபிரதேச செயலரை இவ்வாறு சொல்வது ஏற்றுக் கொள்ளமுடியாது என தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் அவரும்பெண்தான. நானும்பெண்தான. எனது அலுவலகத்துக்கு வந்த பல முறைப்பாடுகளுக்கு இணங்கத்தான இடமாற்றம் செய்யப்பட்டார்.

அதை விடுத்து தனிப்பட்ட பகைஎதையும் குறித்து வாதாடவரவில்லை எனத் தெரிவித்தார்.

இருவரின் கருத்தையடுத்து அதை நிறைவுக்குகொண்டு வருவதாக தெரிவித்த முதலமைச்சர் குறித்த விவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்ததை அடுத்து ஒருங்கிணைப்பு குழு கூட்டம்தொடர்ச்சியாக சுமுகமானமுறையில் இடம்பெற்றது.

கூட்டம் நிறைவு செய்வதற்கான நேரம் நெருங்கிய நிலையில் வட மாகாண சபை உறுப்பினர் ஆனோல்ட் கருத்தொன்றை தெரிவிப்பதற்கு ஆயத்தமானர்.

அதாவது கூட்டத்தின் ஆரம்பத்தில் தவறான அபிப்பிராயம் ஒன்றுபதிவு செய்யப்பட்டுள்ளது.

அதை மாற்றவேண்டும் என தெரிவித்தார். அதற்கு பதிலளித்த முதலமைச்சர் அதைப்பற்றி மேலதிகமாக கதைக்க தேவையில்லை என தெரிவித்த போது தொடர்ச்சியாக ஆனோல்ட் விதண்டாவாதமாக தனது கருத்தை தெரிவித்துக கொண்டிருக்க முதலமைச்சர் கடும் தொனியில் அதை நிறுத்துமாறு தெரிவித்தார்.

அதைபொருட்படுத்தாது உறுப்பினர் ஆனோல்ட் விடாப்பிடியாக நின்றதையடுத்து முதலமைச்சர் கூட்டத்தை இடையில் நிறுத்திவிட்டு வெளியேறினார். அவர் வெளியேறியதை தொடர்ந்து அதிகாரிகளும் வெளியேறினர்.

குழப்ப நிலையை புரிந்து கொண்ட பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இடையில் கூட்டத்தை முடிக்கமுடியாது என தெரிவித்து தொடர்ந்து கூட்டத்தை சிறுநேரம் வரை நடத்தி மக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்ட பின்னர் கூட்டத்தை நிறைவு செய்தார். (9-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## 10 கிளைமோர்...

யளவில் 57ஆம் படைப்பிரிவினர் குறித்த தேடுதலை ஆரம்பித்து பிற்பகல் 5.30 மணியளவில் முடிவுக்கு கொண்டு வந்தனர்

இந்த சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

குறித்த வீட்டின் உரிமையாளர் இல்லாத நிலையில் வீட்டைப் பராமரிக்கும் நபர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் கிணறு இறைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது ஒரு கிளைமோர் குண்டு கிணற்றில் இருப்பதை கண்டு கிணறு இறைக்கும் பணியை கைவிட்டதுடன் 57ஆம் படைப் பிரிவினரிடம் தகவல் வழங்கி உள்ளார்

எனினும் கடந்த சில நாட்களாக கிளிநொச்சி பிரதேசத்தில் ஏற்பட்ட அசாதாரண காலநிலையால் எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது காலநிலை வழமைக்கு திரும்பியுள்ள நேரத்திலேயே இராணுவத்தினர் தமது தேடுதலை முன்னெடுத்துள்ளார்கள்.

இதன்படி நேற்று 12 மணியளவில் ஆரம்பித்து 12.5 கிலோக்கிராம் கிளைமோர் குண்டு 01, 7.5 கிலோக்கிராம் கிளைமோர் குண்டுகள் 3,2.5 கிலோக்கிராம் கிளைமோர் குண்டுகள் 6 உள்ளடங்கலாக 10 கிளைமோர் குண்டுகளும், 66 கைக்குண்டுகள் மற்றும் 42 மோட்டார் பியுஸ்களும் மாலை 5.30 மணிவரைக்கும் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையில் மீட்கப்பட்டுள்ளது

அத்தோடு தேடுதல் நடவடிக்கையின் போது அனுமதி மறுக்கப்பட்டு மீட்பு நடவடிக்கைகள் முடிவுற்ற பின்பு மீட்கப்பட்ட வெடி பொருட்களை புகைப்படம் எடுப்பதற்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டது. மீட்கப்பட்ட வெடிபொருட்களின் முழுமையான விபரங்கள் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (312)

## டாக்கா-கொழும்பு...

குறித்தும் ஜனாதிபதி மைத்திரியிடம் விசாரித்தார்.

அத்துடன், பங்களாதேஷில் இருந்து மருந்துப் பொருட்கள் மற்றும் சணல் பொருட்களை இறக்குமதி செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரியிடம் பங்களாதேஷ் பிரதமர் கோரிக்கை விடுத்தார்.

இந்தச் சந்திப்பின் போது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வது எனவும் இவ்விரு நாடுகளின் தலைவர்களும் இணக்கம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (12)

## புதிய அரசியல்...

31ஆம் திகதி ஒப்படைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர், நாளை மறுதினம் முதலாம் திகதி விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றையும் நடத்த உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வு, பாராளுமன்றம், சட்டவாக்கம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து கருத்துக்கள் கோரப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

மக்களின் நிலைப்பாடும் பரிந்துரைகளும் இந்த ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (12)

## ஜெனிவா...

க்கு வாய்ப்புக்கள் இல்லை. இதனை விடுத்து ஜெனிவா தீர்மானத்தை தளர்வு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படக் கூடாது என்று குறிப்பிட்டார். (12)

## ஹக்கீம்...

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவமொன்றின் பின் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப் படுத்தும் கிழக்கு மாகாண முதலமைச்சர், சம்பூர் கடற்படையின் கட்டளையிடும் அதிகாரி கப்டன் ரஞ்சித் பிரேமரத்னவை கடந்த 20ஆம் திகதி பகிரங்கமாக திட்டியுள்ளார்.

குறித்த சம்பவம் நடந்து சுமார் ஒரு வாரத்தின் பின்னர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் முதன்முதலாக இதுபற்றி கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும் இந்த சம்பவம் குறித்து முதலமைச்சருக்கு எதிராக தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதன்போது தெரிவித்துள்ளார். (12)

**கோப்பாயில் காணி வீடு விற்பனைக்கு**

கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் தென்மேற்கு பகுதியை எல்லையாகக் கொண்ட சகல வசதிகளையும் உடைய மூன்று வருடங்களுக்குள் கட்டி முடிக்கப்பட்ட வீடும் 8 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு

விபரங்கட்கு :-

**077 3535 785**

(4795)

## இந்துமத...

மேலும் கதிர்காமம் இந்து மதத்தின் புனித தன்மையை இழந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (12)

## யாழில் குற்றச்...

யாழ்ப்பாண மண்ணில் நடைபெறும் குற்றச்செயல்கள் மற்றும் சமூக அவலங்கள் குறித்து சமூக ஆர்வலர்கள் அமைச்சர் மனோ கணேசனிடம் பிரஸ்தாபித்திருந்ததுடன், அவற்றைக் கட்டுப்படுத்துவற்கான தலையீடொன்றை மேற்கொள்ளுமாறும் அவரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

குறித்த விவகாரம் தொடர்பில் பொலிஸ் மா அதிபருடன் நேரடியாக கலந்துரையாடிய அமைச்சர் மனோ கணேசன், உடனடி நடவடிக்கை தொடர்பில் வலியுறுத்தியுள்ளார்.

இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் தானே நேரடியாக களத்தில் இறங்கி அங்கு மூன்று நாட்கள் வரை தங்கியிருந்து நிலைமைகளை அவதானிக்கவும், அதன் பின் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, அமைச்சர் மனோ கணேசனிடம் உறுதியளித்துள்ளார். (12)

## கச்சதீவு...

ப்பட்டுள்ளதாக ஆங்கில செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரின் இந்த நிர்மாணத்துக்கு உதவி வருகின்றனர்.

இதேவேளை இந்த தேவாலய அமைப்புப் பணிகள் தமிழக மீனவர்களின் இணக்கத்துடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தமது தேர்தல் பிரசாரத்தின்போது கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (12)

## அபிவிருத்திக்கு...

வித்துள்ளனர்.

மக்களின் குடியிருப்புக்குள் படையினரை அனுமதிக்க முடியாது என்கின்ற நிலையில் குறித்த பகுதியில் படையினர் தொடர்ச்சியாக நிலை கொண்டுள்ளனர்.

ஆனால் எமது மாநகர அபிவிருத்திக்கு அப்பகுதியில் உள்ள காணிகள் கட்டாயம் தேவை. உடனடியாக அவர்களை வெளியேற்றா விட்டாலும் படிப்படியாக அவர்களை வெளியேற்றுவதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எமது நிலம் எமக்கு தேவை. எனவே இக் கருத்தினை ஆழமாக பதிவு செய்து ஆக்கபூர்வமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர்.

இக் கூட்டத்தில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறுவர் வெளிவிவகார பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சரவணபவன், வட மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வட மாகாண சபை உறுப்பினர்கள், துறைசார்ந்த அரச அதிகாரிகள், யாழ்ப்பாண பிரதேச செயலர், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9)

## பருத்தித்துறை...

இக் கைக்குண்டு ஆகாஸ் வகையைச் சேர்ந்தது என்றும் நீதிமன்ற உத்தரவின் பின்னர் விசேட அதிரடிப்படையினர் வரவழைக்கப்பட்டு குண்டு செயலிழக்கச் செய்யப்படும் எனப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இப் பகுதி முன்னர் இராணுவ நிலையாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (60)

## மண்சரிவு...

விடுக்கப்பட்டது.

இதன்படி, நேற்று பிற்பகல் 02.00 மணி முதல் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மண்சரிவு மற்றும் மண்சரிவு அபாயத்தால் வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்கு 1700 ஏக்கர் காணியை பெற்றுக் கொடுப்பதற்கு ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காணி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

49,000 இலட்சம் ரூபாய் நிதியும் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு பகிரப்படவுள்ளதாக காணி இராஜாங்க அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அதிகபட்சமாக 20 பேர்ச்சஸ்களுக்கு உட்பட்டதாக காணியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

பகிர்ந்தளிக்கப்படவுள்ள காணிகள் தொடர்பான தகவல்களை திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய இரத்தினப்புரி, கண்டி, மாத்தளை, கேகாலை, களுத்துறை, கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் காணிகள் பகிர்ந்தளிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் ரி.பி ஏக்கநாயக்க கூறியுள்ளார்.

காணி ஆணையாளர்நாயகம் திணைக்களத்துடன் இணைந்து, பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய வகையில் பாதுகாப்பான இடங்களை வழங்கவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இடர் முகாமைத்துவ நிலையம் , தேசிய கட்டட ஆய்வு நிலையம் மற்றும் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் உதவியையும் கோரியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பான காணியை உறுதிப்படுத்தி அதனை மக்களுக்கு கையளிப்பதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் தேவைப்படும் எனவும் காணி இராஜாங்க அமைச்சர் ரி.பி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.(12)

## துப்பாக்கி சூடு இருவர் பலி

குருநாகல் பன்னல பகுதியில் நேற்று மாலை 7.30 மணியளவில் அளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இரண்டு பேர் பலியாகினர்.

இதில் பெண் ஒருவரும் உள்ளடங்குகிறார். பேருந்து நிலையத்தில் நின்றிருந்தவர்கள் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டபோதே இந்த மரணங்கள் சம்பவித்துள்ளன.

இந்தநிலையில் பொலிஸார் பிரதேசத்தில தேடுதல்களை ஆரம்பித்துள்ளனர். (12)

**பணிப்பெண் தேவை**

கொழும்பில் தங்கி இருக்கும் குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிகளைச் செய்வதற்கு பணிப்பெண் தேவை

(சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்)

(இ)

தொடர்பு

**077 460 9400**

## தாவடியில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தாவடிச் சந்தியில் வீட்டிற்குள் நுழைந்து நகைகள் மற்றும் பணம் என்பன களவாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தோர் உறக்க நிலையில் இருந்த வேளை வீட்டிற்குள் புகுந்த திருடர்கள் 14பவுண் நகைகள் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணத்தினையும் திருடியுள்ளனர் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12)

## ஜனாதிபதி மைத்திரி நாடு திரும்பினார்



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை ஜப்பானிலிருந்து நாடு திரும்பியுள்ளார்.

ஜீ-7 பொருளா தார உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதிக்கு மாநாட்டின் போது அனைத்து நாடுகளின் தலைவர்கள் மத்தியிலும் பலத்த வரவேற்பும் மரியாதையும் கிடை த்திருந்தது.

அத்துடன் இலங்கையின் அபிவிருத்திகளுக்காக 38 மில்லியன் ஜப்பான் யென்களை நிதியுத வியாக ஜப்பானிய அரசாங்கம் அளித் திருந்தமை குறிப்பிட த்தக்கது.

அந்த வகையில் பொருளாதார உச்சி மாநாட்டில் கலந்து கொண்டதன் மூலம் பாரிய பொருளாதார நன்மைகளைப் பெற்ற நிலையில் ஜனாதிபதி தனது விஜயத்தைப் பூர்த்தி செய்து கொண்டு நாடு திரும்பியுள்ளார். (12)

## காணி தொடர்பில் ஆராயத் தயார்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டு வருகின்ற நிலையில் அதில் அரசியல் தீர்வை உள்ளடக்கவும் அவ்வாறு உள்ளடக்கப்படும் அரசியல் தீர்வில் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் புதிய கோணத்தில் பரிசீலிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்காக 6 உப குழுக்களும் ஒரு நிறைவேற்றுக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குழுக்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றனர். இந்நிலையில் அரசியல்தீர்வுத் திட்டத்தில் கூட்டமைப்பின் கருத்துக்களும் உள்வாங்கப்படும். தேவை ஏற்படின் கூட்டமைப்புடன் இருதரப்புப் பேச்சுக்களை நடத்தவும் அரசாங்கம் தயாராக இருக்கின்றது எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

புதிய அரசியலமைப்பு மற்றும் அதில் உள்ளடக்கப்படும் அரசியல்தீர்வு திட்டம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (12)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.